# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 352 ஐப்பசி 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 13 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM




வடமாகாண **மர நடுகை மாதம்** கார்த்திகை - 2018

"சுர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"

– இரவீந்திரநாத் தாகூர் –
(வங்கக் கவிஞர்)

# மைத்திரியின் முடிவை எதிர்த்து 17 மனுக்கள் நேற்றுத் தாக்கல்

## இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்படலாம்

கொழும்பு, நவம்பர் 13

நாடாளுமன்றத்தைக் கலைக்கும், அரச தலைவரின் உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 17 மனுக்கள் மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் இன்றுவரை ஒத்திவைத்துள்ளது. இடைக்காலக் கட்டளையை உயர் நீதிமன்றம் இன்று பிறப்பிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமனுக்களின்அவசரமுக்கியத்துவம் கருதி, நேற்று முற்பகல் உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் நளின் பெரேரா தலைமையிலான மூன்று » 21



## மின்சாரம் தாக்கி விவசாயி சாவு

### வடமராட்சியில் சோகம்

வடமராட்சி, நவ.13

வடமராட்சியில் மின்சாரம்தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தையான » 25

## கஜா புயல்; வடக்கில் மழை, காற்று அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், நவ.13

காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து வங்கக் கடலில் உருவாகியுள்ள கஜா புயல் தமிழகத்தின் கரையைக் கடக்கும் போது இலங்கையில் வடக்கு மாகாணத்திலும் அதன் தாக்கம் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கஜாபுயல்எதிர்பார்க்கப்பட்ட இடத்திலிருந்து சற்றுக் கீழாக இந்தியாவின் » 25

## வடமராட்சியில் அறுவர் கைது

வடமராட்சி, நவ.13

யாழ்ப்பாணம், வடமராட்சிப்பகுதியில் அறுவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளை, மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்களைக்கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி, வல்வெட்டித்துறை, » 25

## உயர் நீதிமன்றில் நேற்று குவிந்த இராஜதந்திரிகள்

கொழும்பு, நவ. 13

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமைக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை » 25

## தேர்தல் செயற்பாடுகள் ஆரம்பம்

### யாழ்., வன்னி எம்.பிக்கள் எண்ணிக்கையில் மாற்றமில்லை

கொழும்பு, நவ. 13

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆரம்பப் பணிகளை தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, சுயேச்சைக் குழுக்களுக்கான கட்டுப்பணம் என்பவற்றை உள்ளடக்கிய அரசிதழ் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கான அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அது அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் நடத்தும் ஆரம்பப் பொறுப்பை தேர்தல்கள் திணைக்களத்தின் » 25

## நல்லதொரு தீர்ப்பு இன்று கிடைக்கும்

### ஐ.தே.க. எதிர்பார்ப்பு

கொழும்பு, நவ. 13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமைப்பை மீறி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளமை இன்று (நேற்று) இடம்பெற்ற அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளில் தெளிவாக எடுத்துரைக் » 25

## சட்டமாஅதிபரின் கோரிக்கை உயர்நீதிமன்றில் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 13

சட்டமா அதிபர் சமர்ப்பணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு, மூன்று நாள்கள் அவகாசம் கோரியிருந்தார். ஆனால், அவசர தேவையைக் கருதி நாளைய தினமே (இன்று) நீதிமன்றம் மீண்டும் கூடுமென அவரிடம் வலியுறுத்தப்பட்டது. உயர் நீதிமன்றம் கூடி, நாங்கள் கோரியுள்ள தடையுத்தரவு மற்றும் இடைக்கால » 24

## கம்பெரலிய அபிவிருத்தியை உடன் நிறுத்த மகிந்த பணிப்பு

கொழும்பு, நவ.13

கடந்த அரசால் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட கம்பெரலிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை உடன்நிறுத்துமாறுதலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் அலுவலகம் மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

கம்பெரலிய வேலைத்திட்டத்துக்காக மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட நிதியை » 25

## இப்படியும் ஒரு சுவாரசியம்

கொழும்பு, நவ. 13

அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று 17 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவுள்ள பேராசிரியர் ரட்ண ஜுவன் கூலின் மனுவும் அதில் ஒன்று.

ரட்ண ஜுவன் கூலின் மனு தவிர்ந்த ஏனைய 16 மனுக்களிலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவி » 25

## எந்தச் சவாலையும் எதிர்கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்

### ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவ.13

எந்த வகையான சவால்களையும் எதிர்கொண்டு, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கானபுதியதொரு அரசமைப்பை உருவாக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் முன்னாள் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஜனநாயகத்தை யார் பாதுகாப்பது என்பதே நாட்டில் தற்போதுள்ள பிரச்சினை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் » 25

## சு.க. - ம. முன்னணி இணைந்தே போட்டி

### ரோகித்த அபேகுணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி சிறிலங்கா பொது மக்கள் முன்னணியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இணைந்தபோதும், அவருடன் நாடாளுமன்ற » 22

## வத்திகளை கவனத்தில் கொண்டு நாடாளுமன்றை கலைக்க முடியாது

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(விரிவு - 2ஆம் பக்கம்)

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

வடமராட்சி, நவ. 13

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில், குளத்தில் குளிக்கச் சென்று காணாமல் போயிருந்த குடும்பத் தலைவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். அல்வாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த தம்பிராசா சந்திரகுமார் (வயது-47) என்ற குடும்பத் தலைவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அல்வாய்கிழக்குமாயக்கை குளம் விவசாய நடவடிக்கைகளுக்காக அண்மையில் ஆழமாக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. நேற்று முன்தினம் மதியம் பிரதேசவாசிகளுடன் சந்திரகுமாரும் அந்தக் » 25

## அரசின் அழைப்பை நிராகரித்த 8 மேற்கு நாட்டுத் தூதுவர்கள்

கொழும்பு, நவ. 13

இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் சரத் அமுனுகம விடுத்த அழைப்பை எட்டு மேற்குலக நாடுகளின்தூதுவர்கள்நிராகரித்துள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, மேற்குலக இராஜதந்திரிகள் அயலுறவுத்துறை அமைச்சரின் கூட்டத்தைப் புறக்கணித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையின் தற் » 25

## உடன்பாடுகளுக்குப் புலிகள் முற்பட்டபோதும் நிராகரித்தேன்

### ரணில் விக்கிரமசிங்க அறிக்கை

கொழும்பு, நவ.13

தேர்தல்களின் போது என்னுடன் உடன்பாடு செய்துகொள்வதற்காக விடுதலைப் புலிகள் இரு தடவை முயன்றனர் எனினும் அவற்றைக் கடுமையாக நிராகரித்தேன் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். » 25



## சு.கவின் அமைப்பாளர்களை இன்றுசந்திக்கின்றார்மைத்திரி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்துத் தொகுதி மற்றும்மாவட்ட அமைப்பாளர்களுக்கிடையிலானமுக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் இன்று செவ்வாய்க் கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று கட்சி செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 341 தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு இது குறித்து அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் குறித்துஇதன்போதுகலந்துரையாடப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (21)

# வதந்திகளைக் கவனத்தில்கொண்டு நாடாளுமன்றை கலைக்க முடியாது

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



**கொழும்பு, நவ.13**

**வதந்திகளைக் கவனத்தில் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்று சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசமைப்புக்குப் புறம்பானது என்று தெரிவித்துஎதிர்கட்சியினர் உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றம்தொடர்பில்எனக்குத்தெளிவானநம்பிக்கையிருக்கிறது. ஏனென்றால்அரசமைமைப்பு அதனைவிட மிகவும் தெளிவாக இருக்கின்றது. நேற்று நாட்டுக்காக உரையாற்றிய அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனா கூறிய விடய்ங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாடாளுமன்றத்தில்கலவரம் ஏற்படஇருந்தாலும், உறுப்பினர்கள் பணம் கொடுத்து வாங்கப்படுவதாலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாகக் கூறினார். அரசமைப்பில் அப்படி ஒரு விடயமும் இல்லை. நாடாளுமன்றம் ஆரம்பித்த நாளில் இருந்து தான்அங்கு கலவரம்ஏற்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் கொடுத்து வாங்கப்படுவார்களானால் அதனைத் தனியாக விசாரிக்க வேண்டும். இன்று (நேற்று) வழக்கு இடம்பெறவிருப்பதனால் தான் மைத்திரி நேற்று (நேற்று முன் தினம்)நாட்டுக்குஉரையாற்றினார். அவருடைய காதுக்கு எட்டியிருப்பது வெறுமனே வதந்திகள், எனவே, வதந்திகளைக்கவனத்தில்கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. கல்லில் எழுதிவைத்ததுபோன்றுஅரசமைப்பு எழுதப்பட்டுள்ளது. 3 இல் 2 பெரும்பான்மை இல்லாமல் நான்கரை வருடங்களுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்பது அதில் மிகத் தெளிவாக உள்ளது. எனவேஎனக்குநம்பிக்கையிருக்கிறது என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்டுஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித்பிரேமதாச,

"நீதிமன்றம்மனுக்களைஏற்றுக் கொண்டுள்ளது. சட்டமும், நியாயமும், சட்டத்தின் ஆதிக்கமும் சரியாகவும், ஜனநாயக ரீதியாகவும் செயற்படும் என்றும், இந்த விடயத்திற்கு ஒரு தீர்வு கிடைக்கும் நாள் என்றும் எதிர்பார்க்கிறேன். தீர்ப்புப் பற்றி என்னால்எதுவும் கூற முடியாது. பொறுமையாக இருப்போம். உயர் நீதிமன்றம்அதன்பணிகளைமுறையாகச் செய்யும் என்று நம்புகிறோம் -என்றார். (21)

# நாடாளுமன்றைக் கலைத்தது அரசமைப்புக்கு முரணானதே

## மக்கள் விடுதலை முன்னணியும் தெரிவிப்பு

கொழும்பு. நவ.13

நாடாளுமன்றத்தைக் கலைத்மையானதுமுற்றுமுழுதாக அரசமைப்புக்கு முரணானது என்று எதிர்க் கட்சிகள் சில தெரிவித்திருந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணியும் அந்தக் கருத்தை நேற்றுப் பதிவுசெய்து கொண்டது.

நாடாளுமன்றம்கலைக்கப்பட்டுள்ளமைக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய நேற்று நீதிமன்றத்திற்கு வருகை தந்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"19வது திருத்தத்தின் கீழ் நான்கரை வருடங்களின் பின்னர் அன்றில் மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலின் பேரிலேயே நாடாளுமன்றம்" கலைக்கப்பட வேண்டும். இது இப்படி இருக்குபோதே அரசதலைவர் சட்டவிரோதமாகச் செயற்பட்டுள்ளார். எங்களுடையகட்சியினைச்சேர்ந்த ஆறு உறுப்பினர்களின் அடிப்படைஉரிமைமீறப்பட்டுள்ளது. மக்கள் எமக்கு ஐந்து வருடங்களுக்கே ஆணைவழங்கியுள்ளனர். இந்தநிலையில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்களின் ஆணையை எட்டி உதைக்க அரசதலைவருக்குமுடியாது. இதன்காரணமாகவே நாம் நீதிமன்றத் தில் மனுவைத் தாக்கல் செய்துள்ளோம். அரசதலைவர்முன்னெடுத்துள்ளஅரசியலமைப்பிற்கு விரோதமான செயற்பாட்டை இரத்துச்செய்து ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறேநாம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளோம். தேர்தல்கள் நடைபெற வேண்டும். எனினும் அரசமைப்பை மீறி தேர்தலுக்குச் செல்ல முடியாது. அதற்கென்று ஒரு முறை இருக்கின்றது" என்று அவர் மேலும்தெரிவித்தார். (21)

## பொதுத் தேர்தல்;

# மைத்திரி - மகிந்த தீவிர ஆலோசனை

கொழும்பு, நவ.13

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவுக்கும்தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில்நேற்று(திங்கட்கிழமை) காலை இச்சந்திப்பு நடைப்பெற்றுள்ளது.

இதன்போது எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் சிறி லங்கா பொதுஜன பெரமுன ஆகிய இருகட்சிகளும்ஒன்றிணைந்துபோட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவும் கலந்துகொண்டிருந்ததாகநம்பத்தகுந்தவட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை மைத்திரிபாலசிறிசேனநேற்றுமுன் தினம்முன்னாள்அமைச்சர் பசில் ராஜபக்சவுடன் சிறப்பு சந்திப்பொன்றில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## தொடருந்து மோதியதில் பல்கலை மாணவி சாவு

வவுனியா. நவ.13

தொடருந்துமோதிவவுனியாவைச்சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவம்பேராதனையாக்காபாலத்துக்கருகில்இடம்பெற்றுள்ளது.

பேராதனைப்பல்கலைக்கழகத்தில் 1 ஆம் வருடத்தில் கலைப்பிரிவில்கற்கும்செல்வநாயகம்மதுசா(வயது-21) என்றமாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாணவியின் தந்தையான செல்வநாயகம் நேற்றுமுன்தினம் சுகவீனம்காரணமாகவவுனியாவில்உயிரிழந்துள்ளார். அதுதொடர்பான தகவல் மதுசாவுக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர் உடனடியாக வவுனியா வருவதற்காக சென்றபோதேசம்பவம்இடம்பெற்றது என்றுதெரிவிக்கப்பட்டது. சடலம் பேராதனை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான விசாரணைகளை பேராதனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (21,110)

## கல்லுக்குள் ஈரம்

யாழ்ப்பாணம். நவ.13

வீட்டின் உரிமையாளரை வெட்டிக்காயப்படுத்தி, முகமூடிக் கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட அவருடைய மனைவியின் தாலிக் கொடிமூன்று நாள்களின் பின்னர் நேற்று வீட்டு வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. கொள்ளையர்களேஅதைக்கொண்டு வந்துபோட்டுவிட்டுச்சென்றுள்ளனர் என்று சந்கிதேகிக்கப்படுகிறது. எனினும் கொள்ளையடிக்கப்பட்ட பெருமளவு நகைகள் கிடைக்கவே யில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கொட்டடி சூரிபுரத்தில் கடந்த 9ஆம் திகதி அதிகாலையில் வீடு பிரித்துஉள்நுழைந்தமுகமூடி அணிந்த 3 கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவரை கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தி அவருடைய மனைவி அணிந்திருந்த தாலிக் கொடி உள்ளிட்ட 18 பவுண் நகைகளைக் கொள்ளையடித்தனர். இது தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையயத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையிலே கொள்ளையடித்த தாலிக் கொடி நேற்று வீட்டில் மீட்கப்பட்டுள்ளது. எனினும் தாலியில் பொருத்தும் காசுகள் இல்லாது, தாலிக் கொடி மட்டுமேமீட்கப்பட்டுள்ளது. 11 பவுன் தாலிக் கொடிஅகரிக்கப்பட்டது என்றும் தற்போது மீட்கப்பட்ட கொடி 7.8 பவுண் நிறைகொண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் சம்பவம்தொடர்பில்தீவிரவிசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (21,105)

# ஞானசாரரை விடுதலை செய்யாவிட்டால் மாற்று வழிகளைக் கையாள்வார்களாம்

## மாக்ல்கந்த தேரர் கூறுகிறார்

கொழும்பு. நவ.13

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின்பொதுச்செயலாளர்கலகொடஅத்தே ஞானசாரதேரரைவிடுவிக்குமாறுகோரி முதன்மை நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஞானசார தேரரின் வழக்கு விசாரணை ஒன்றுநேற்று(திங்கட்கிழமை)கொழும்பு முதன்மைநீதிமன்றத்தில்இடம்பெற்றது. வழக்கு விசாரணையின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சிங்கள ராவய அமைப்பின் பொதுசெயலாளர் மாகல்கந்தசுத்ததேரர், குறித்தவழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஒத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

"தற்போது அநீதியான வகையில் சிறையில்தடுத்து வைக்கப்பட்டுள்ளகலகொட அத்தே ஞானசார தேரரின் வழக்கு விசாரணை ஒன்று கொழும்பு முதன்மை நீதிமன்றத்தில் இடம்பெற்றது. எங்களுக்கு தற்போது கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ராணுவத்தினர் சிலருக்குஅரசதலைவரின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

அதேபோன்று, ராணுவத்தினரின் உரிமைகளுக்காகப் போராடி, அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுத்த கலகொட அத்தே ஞானசாரதேரரையும்முடிந்தளவுவிரைவாக அரசதலைவரின் அனுமதியுடன் விடுதலை செய்யுமாறு மதிப்பிற்குரிய மைத்திரியிடம் நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். அப்படியில்லாவிடின் இரண்டு மாற்று வழிகள் இருகின்றன. ஒன்றுதான் நாங்கள் சிங்கள பௌத்தர்களுக்குக் கூறுவது என்னவென்றால், ஞானசார தேரரைஅரசதலைவர் விடுவிக்காத பட்சத்தில் வாக்குச்சீட்டுகளைச் செல்லுபடியற்றதாக்குங்கள். அதேபோன்று, எதிர்வரும் 17 ஆம் திகதி சில மாவட்டங்களை இலக்காகக் கொண்டு அந்த இரண்டாவது மாற்று வழியை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்என்றுஅரசதலைவருக்குநாங்கள் அறிவிக்க விரும்புகிறோம்.. அந்த வகையில், ஞானசார தேரரையும், ராணுவத்தினர் சிலரையும் துரிதமாக மன்னிப்பின் அடிப்படையில்அரசதலைவர் விடுதலை செய்வார் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் தற்போது செயற்பட்டு வருகிறோம் - என்றார். (21)

திடீர் ஆட்சி மாற்றம்

## இலங்கையர்கள் 13 பேர் இஸ்ரேலில் சிறைவைப்பு

### -அரசியல் தஞ்சம் கோரினராம்

இஸ்ரேலில் அரசியல் தஞ்சம் கோர முயற்சித்த இலங்கையர்கள் 13 பேர் அங்கு சிறை வைக்கப்பட்டிருப்பதாக அந்த நாட்டின் "ஜெருசலேம் போஸ்ட்" பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தற்போது உருவாகியிருக்கும் அரசியல் குழப்ப நிலைமையால், ஆட்சியாளர்களிடமிருந்து தம்மைப் பாதுகாக்கும் நோக்கில், இவர்கள் சுற்றுலா நுளைவுச்சீட்டில் இஸ்ரேலுக்கு வந்து, பின்னர் அங்கு தஞ்சம் கோர முயன்றுள்ளனர் என அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

11 ஆண்கள், 2 பெண்கள் அடங்கிய இந்தக் குழுவில் சிலர் சுகவீனமுற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா மாவட்டத்தில் பத்துக் குளங்கள் சேதம்

வவுனியா, நவ.13

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக, வவுனியா மாவட்டத்தில், பத்துக் குளங்கள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல சேவைகள் நிலைய உதவி ஆணையாளர் இ.விஜய குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்த மழை காரணமாக அதிக நீர்வரத்து ஏற்பட்டமையால், 200க்கும் மேற்பட்ட குளங்கள் முழுக் கொள்ளளவை எட்டி வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

பத்து குளங்களின் துருசுப் பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்பட்டு உமைகள் ஏற்பட்டுள்ளன.

அந்தவகையில் செட்டிகுளம் கமநலசேவைகள் பிரிவில் புலிக்குத்திகுளம், சிங்கனூர்குளம், பம்பைமடுப் பிரிவில் வயிராமுறிப்புக்குளம், பண்டிவிரிச்சான் குளம், ஓமந்தை பிரிவில் நெடுங்குளம், பெரியமாறாயிலுப்பை, இளமருதங்குளம் ஆகியனவும் நெடுங்கேணிப் பகுதியில் இரு குளங்களில் உமைகள் ஏற்பட்டுள்ளது. இந்த உமைகளை அடைப்பதற்கான பைகளை மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்களம் மூலம், அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு குளங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 4 ஆயிரம் பைகளைத் தற்பொழுது வரை பாவித்துள்ளோம்.

குளங்களில் ஏற்பட்டுள்ள உடைவுகளை பாதுகாப்பதற்கு இராணுவத்தினர் மற்றும் விவசாயிகள், கமநல அபிவிருத்தி திணைக்களப் பணியாளர்கள் துரிதமாக செயற்பட்டு வருகின்றனர். எனத் தெரிவித்தார்.

(110)

## குளங்களைச் சீரமைக்கும் நடவடிக்கையில் படையினர்

முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பெய்த கடும் மழை காரணமாக எட்டுக்குளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத் துக்கு உட்பட்ட கோடாலிக்கல்லு குளம் பெரியளவில் உடைப்பெடுத்துள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச த்துக்கு உட்பட்ட நித்திகை குளமும் பெரிய அளவில் உடைப்பெடுத்துள்ளது.

இந்த இரண்டு குளங்களையும் சீரமைக்கும் நடவடிக்கையில் கமநலசேவை திணைக்களத்தின் கீழ் உள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விவசாயிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர் ஈடுபட்டுள்ளார்கள். முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ராஜகுருவின் வழிகாட்டலின் கீழ், 64 மற்றும் 59 ஆவது படைப்பிரிவில் உள்ள படையினர் பெருமளவானவர்கள் சென்று, இரண்டு குளங்களையும் தற்காலிகமாகச் சீரமை க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாக முல்லை த்தீவு மாவட்ட படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ரி3)

ஐக்கிய தேசியக் கட்சி

# நீதிமன்றை நாடியமை நல்லதொரு தீர்மானம்

### உதய கம்மன்பில தெரிவிப்பு



**கொழும்பு, நவ.13**

**ஐக்கிய தேசியக் கட்சி, வெளிநாட்டுத் தூதுவர்களைவிட்டு விட்டு நீதிமன்றத்தை நாடியது நல்லதொரு தீர்மானம். அவர்கள் நீதிமன்றத்துக்குத் தற் போது அழுத்தம் கொடுக்க முயற்சிக்கின்றார்கள் என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தன.

நீதிமன்ற வளாகத்துக்கு வந்த உதய கம்மன்பில ஊடகங்களுக்கு இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பிரச்சினையையேற்படுத்துவதைக் காட்டிலும், தேர்தலுக்குப் போய் மக்களின் ஆணையின் படி நாடாளுமன்றத்தை அமைப்பதே சிறந்தது. வெளிநாட்டுத் தூதுவர்களை விட்டு விட்டு ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றத்தை நாடியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி தங்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு வரும் என்று கருதுகின்றது.

ஆனால் சட்டத்துக்கு முரணாக எதுவும் இடம்பெறாது. சட்டத்துக்குட்பட்டே நடைபெறும் - என்றார்.

## அரச தலைவர் மைத்திரி அரசமைப்பை மீறியுள்ளார்

### பாக்கியசோதி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.13

நான்கரை வருடங்களுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்படாமை காரணமாக அரச தலைவர் அரசமைப்பை மீறியுள்ளார். இவ்வாறு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் கோட்பாடுகளை நிலைநாட்டல் மற்றும் அதனை முறையாக நடமுறைப்படுத்துவதை உறுதிப் படுத்தல் என்பவற்றுக்காக நாம் உயர் நீதிமன்றத்தை நாடியிருக்கின்றோம் - என்றார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் அரச தலைவரினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் அரசமைப்புக்கு முரணான நாடாளுமன்றக் கலைப்புக்கு நீதிகோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளன.

அரசமைப்பின் கோட்பாடுகளை உறுதி செய்து கொள்வதற்கும், அரசமைப்பு சரியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காகவும் இந்த விடயம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளோம்.



## இனிமேல் எந்தவொரு தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறாது

### பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆரூடம்

கொழும்பு, நவ.13

இனிவரும் எந்தவொரு தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறப் போவதில்லை. மக்கள் ஆணைக்குப் பயந்து பொதுத் தேர்தலை தடுத்து நிறுத்துவதற்காகவுமே ஐக்கிய தேசிய கட்சி நீதிமன்றத்தை நாடியுள்ளதென பொது மக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொது மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்திற்கமைய தற்போதைய அரசியல் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள பொதுத் தேர்தலை தவிர வேறு எந்த மாற்று வழிமுறைகளும் இல்லை.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொப்பதற்கான புதிய மாற்று கொள்கைகளை மகிந்த ராஜபக்ச உருவாக்கியுள்ளதோடு, தலைமை அமைச்சர் பதவியையும் நிதி அமைச்சு பொறுப்பினையும் ஏற்று 36 மணித்தியலாயங்களில் அதற்கான தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார். கடந்த அரசு பன்னாட்டுச் சமூகத்துடன் நாட்டை பேரம் பேசியே ஆட்சிபுரிந்தது. இதனை தடுத்து நிறுத்த ஒருவருட காலம் காத்திருக்க முடியாது. பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பதற்காகவே அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தார் - என்றார்.







## வெறித்துப் போகும் சுதந்திரக் கட்சி தொடர்ந்து பாயும் எம்.பிக்கள்

கொழும்பு,நவ.13

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மேலும் பலர், நேற்று முன்தினம் மாலையும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்டுள்ளனர். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூடாரம், வெறித்துப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச, நேற்றுமுன்தினம்காலைசிறிலங்காசுதந்திரக் கட்சியில் இருந்து விலகி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்துகொண்டார். அவருடன் ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம்மாலைவரை, 23நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியதலைவர்களான, சுசில் பிரேம ஜயந்த, ஜோன்செனிவிரத்ன, பீலிக்ஸ் பெரேரா ஆகியோரும், சிறிலங்கா பொதுமக்கள்முன்னணியில்இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்விமலவீரதிசநாயக்கவும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்துபோட்டியிடவுள்ளதாக அறிவித்துள்

## பிரிந்தவர்கள் சேரவும் சேர்ந்தவர்கள் பிரியவும் நடவடிக்கை எடுத்த மைத்திரிக்கு நன்றியாம்

கொழும்பு.நவ.13

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரிந்திருந்தவர்களைஒன்றுசேர்த்தமைக்கும் ஒன்றாக இருந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியை பிரித்து வைத்தமைக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு நன்றிகளை தெரிவிப்பதாகநுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்மலையகமக்கள் முன்னணியின் தலைவருமானகலாநிதிவேலுசாமிஇராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல் ஹட்டன் மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல முரண்பாடுகள் உறுப்பினர்கள் மத்தியில் நிலவியது. ஒரு சிலர் கட்சியில் இருந்து வெளியேறும் நிலை கூட இருந்தது. ஆனால் அத்தனை பிரச்சினைகளுக்கும்அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனமுற்றுப்புள்ளி வைத்ததுடன் கட்சி அங்கத்தவர்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தியுள்ளார்.

தலைமைஅமைச்சரைநியமித்தமை, நாடாளுமன்றத்தை கலைத்தமை போன்ற நிகழ்வுகளால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்பாரியளவிலான ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.

கட்சியின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு இந்த சதித்திட்டத்தை முறையடிக்க வேண்டும்என்றுசெயற்படஆரம்பித்து விட்டார்கள்.

கீழ் மட்டத்தில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின்ஆதரவாளர்களும் மிகவும் துடிதுடிப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது அரச தலைவரின் கடந்தகாலச்செயற்பாடுகள்.

அதேவேளை மகிந்த ராஜபக்ச படிப்படியாக வளர்த்தெடுத்த பொதுமக்கள் முன்னணியையும்சிறிலங்காசுதந்திரகட்சியையும் கேள்விக்குறியான ஒரு நிலைமைக்கு கொண்டு வந்துள்ளார். மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தபின்புஇரண்டுகட்சிகளும் ஒற்றுமையாக செயற்படுவது போல தெரிந்தாலும் உள்ளுக்குள் உட்கட்சி பூசல் இருப்பதையராளும் மறுக்க முடியாது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் அந்த உட்கட்சி பூசல் படிப்படியாக வெளியில் வர ஆரம்பித்துள்ளது.

அதன்ஒருகட்டமாகவேமகிந்த ராஜபக்ச பொதுமக்கள் முன்னணியின்அங்கத்துவத்தைபெற்றுக் கொண்டார். அதனால் சிறிலங்கா சுதந்திர கட்சிக்குள் பல குழப்பங்கள் உருவாகியுள்ளன .இப்படி பல குழப்ப நிலைமைக்கு காரணம் அரச தலைவரின் செயற்பாடுகளே- என்றார். (ஐ)

# இலங்கையின் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்

## முன்னாள் அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

மோசமடைந்து வரும் அரசியல் நெருக்கடிகள் இலங்கையின் ஜனநாயகத்துக்கும், இலங்கையர்களுக்கும் உண்மையான அச்சுறுத்தலாகும் என்றுஐ.நாவுக்கானமுன்னாள்அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்:

அவர் தனது கீச்சகத்தில் இதுதொடர்பாக பதிலிட்டுள்ளார். அதில், "முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நிலைநிறுத்தும் முயற்சியாகவே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். மோசமடைந்து வரும் அரசியல் நெருக்கடிகள் இலங்கையின் ஜனநாயகத்துக்கும், இலங்கையர்களுக்கும் அச்சுறுத்தலாகும்" என்று பதிலிட்டுள்ளார். (ஐ)

## ஊடகவியலாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் மகிந்தராஜபக்ச

கொழும்பு.நவ.13

அரசதலைவர் மகிந்தராஜபக்ச தலைமை அமைச்சராக பதவியேற்றபின்னர், அவரது பாதுகாப்பைக் காரணம் காட்டி ஊடகவியலாளர்கள் பல்வேறு கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

மகிந்த ராஜபக்சவின் ஊடகவியலாளர் சந்திப்புக்களுக்கு செல்லும் ஊடகவியலாளர்கள் அலைபேசி எடுத்துச் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிககப்பட்டு வருகின்றன. இதனால், ஊடகவியலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பத்திரிகை ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் ஒலிப்பதிவுக் கருவியை பயன்படுத்துவதில்லை. தங்களது அலைபேசிகளிலேயே ஊடகசந்திப்புக்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்புக்களுக்குச் செல்லும் ஊடகவியலாளர்கள் அலைபேசிகளை அலுவலகத்தின் உள்ளே எடுத்துச் செல்வதற்கும் தற்போது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா பொதுமக்கள் பெரமுனவின் கட்சியில் நேற்று முன்தினம் இணைந்து கொண்டார். இந்நிகழ்வுக்கு ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு சென்றிருந்த ஊடகவியலாளர்களுக்கு உள்ளே அலைபேசிகளை எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் அலைபேசிகளை உள்ளே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை அங்கிருந்த பல்வேறு ஊடகவியலாளர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. (ஐ)

## கூட்டமைப்பு ஜனநாயகத்துக்கு ஆதரவே தவிர ஐ.தே.கவுக்கு இல்லை

கொழும்பு.நவ. 13

கூட்டமைப்பு ஜனநாயகத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளதே தவிர ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாக இல்லையென கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு இலங்கை தமிழ் அரசுக் கட்சிக் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"நாம் ஒத்த கருத்தோடு மாத்திரம் செயற்படுகின்றோம். ஒழிய ஐக்கிய தேசிய கட்சிக்கு சார்பாக செயற்பட வேண்டிய அவசியமில்லை.

கூட்டமைப்பை பொறுத்தவரை அரசமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் மீறப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கு முரணாக இத்தகைய செயற்பாட்டுக்கு குரல் கொடுத்து ஜனநாயகத்தை பாதுகாப்பது மாத்திரமே எமது கொள்கையாகும்.

நாடாளுமன்றத்தில் பழைய நிலைமை மீண்டும் கொண்டுவருவதற்கு ஏற்றவாறு சிறந்த தீர்ப்பை நீதிமன்றம் வழங்க வேண்டுமென்றே பெரும்பாலான கட்சிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

அதேபோன்று நாமும் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்.

வழக்கினை விசாரணை செய்யும் நீதிபதி, நாட்டின் அரசியல் நிலைமையை சீராக்கும் வகையிலும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையிலும் தீர்ப்பை வழங்குவாரென நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதற்காக கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியை பாதுகாப்பதாக கூறும் கருத்துக்களில் எந்தவொரு உண்மையும் இல்லை" - என்றார். (ஐ)

## மாலைதீவு செல்கிறார் மகிந்த

கொழும்பு,நவ. 13

மாலைதீவில் அரசதலைவர் இப்ராகிம் சோலி தலைமையிலான புதிய அரசின்பதவியேற்புநிகழ்வில், இலங்கை அரசின் பிரதிநிதியாக, தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச கலந்து கொள்ளவுள்ளார். மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட அதிகாரி ஒருவர் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

தலைமை அமைச்சராக பதவியேற்பதற்கு முன்னரே, மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தற்போது அவர் இலங்கையின் தலைமை அமைச்சர் என்ற வகையில், இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்" என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் புதிய அரச தலைவர் பதவியேற்பு நிகழ்வுஎதிர்வரும்17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில்இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் கலந்து கொள்ளவுள்ளார். இலங்கையின் தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை சீனா தவிர்ந்த உலகின் வேறெந்த நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. (ஐ)

## மொட்டில் களமிறங்கும் மைத்திரி மகள்

கொழும்பு.நவ.13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா, மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுமக்கள்முன்னணிக் கட்சியில், இணைந்து போட்டியிடதீர்மானித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

சத்துரிக்காசிறிசேனபொலநறுவை மாவட்டத்தில், போட்டியிடவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில் பொதுமக்கள் பெரமுன கட்சியில் இணைந்து போட்டியிடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சத்துரிக்காவின்ஆலோசகரின்அறிவுரைக்கமைய இந்த தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திர கட்சியில் இம்முறை போட்டியிடும் உறுப்பினர்கள் வெற்றி பெற முடியாத நிலை காணப்படுவதாக ஆலோசகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொதுமக்கள்முன்னணிக் கட்சியில் இணைந்து தேர்தலில்போட்டியிடுவதினால் அரச தலைவர் மற்றும் மகிந்தவுக்கு இடையில் அரசியல் கூட்டணியை வலுப்படுத்தி கொள்ள முடியும்எனஅவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த தீர்மானம் தொடர்பில் ராஜபக்ச தரப்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அந்த ஊடகம்செய்திவெளியிட்டுள்ளது. (ஐ)

### நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு

# பேரம்பேசப்பட்ட தொகை மைத்திரிக்கு எப்படித் தெரியும்?

## கேள்வி எழுப்பினார் பாலித்த தெவரப்பெரும எம்.பி.

கொழும்பு.நவ.13

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பேரம்பேசப்பட்ட தொகை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எப்படித் தெரியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பாக நாட்டு மக்களுக்கு சிறப்பு உரை அரச தலைவரின் நிகழ்த்தியிருந்தார்.

அதில், "நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் 100 மில்லியன் ரூபா தொடக்கம் 150 மில்லியன் ரூபா வரையிலும் மேலும் சில உறுப்பினர்கள் 500 மில்லியன் ரூபாவுக்கும் விலைபோகின்ற நிலைமை காணப்பட்டது.

இத்தகைய காரணத்தினால் தான் நாடாளுமன்றத்தை விரைவாக கலைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது" என அவர் தெரிவித்திருந்தார்.

அரச தலைவரின் இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் போதே பாலித்த தெவரப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கைமாற இருந்த பணத்தொகையின் பெறுமதி அரசதலைவருக்கு தெரிந்திக்கின்றதென்றால், அரசதலைவர்தான் குறித்த தொகையை நிர்ணயித்துள்ளார் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் மகிந்த தலைமை அமைச்சராக தெரிவு செய்யப்பட்டமையை தொடர்ந்து அவரின் பெரும்பான்மையை அதிகரிப்பதற்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பெருந்தொகையான பணம் கைமாற்றப்பட்டுள்ளதாக வெளியாகிய தகவல்கள் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் அரச தலைவரின் உரை அமைந்துள்ளது" என்றார்.

## பயிர்ச் செய்கைச் சேதங்கள் தொடர்பில் அறிவிக்கவும்

கொழும்பு, நவ.13

நாட்டில்நிலவும்கடும்மழையுடனான வானிலை காரணமாக, பயிர்ச் செய்கை ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில்தகவல்வழங்குமாறு விவசாயிகளிடம்விவசாய அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. தொடர்ச்சியாகப் பெய்துவருகின்ற மழையுடனான வானிலை காரணமாக பலபகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இது தொடர்பான இழப்புகளை அறிவிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலர் கே.டி. எஸ்.ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் வழங்கும் தகவல்களுக்கு அமைய நடவடிக்கைஎடுக்கப்படும்எனவும் அவர்தெரிவித்தார். (ஐ)

## பிரதேச சபைக் கட்டடம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு,நவ.13

அநுராதபுர மாவட்ட கொழுமகெக்கிராவை பிரதேச சபைக் கட்டடத் தொகுதி மீது நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கெக்கிராவை பிரதேச சபைத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிராகரிப்பதாக ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)


## பண்டாரநாயக்கா, கல்லறைக்குள்ளே கண்ணீர் வடிப்பார் – *மனோ கனேசன்*

கொழும்பு,நவ.13

சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் கட்சியின் நிறுவுநர் பண்டாரநாயக்கா, கல்லறைக்குள்ளே கண்ணீர் வடிப்பார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சியுடன் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இணைந்துள்ளனர். இந்நிலையிலேயே இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் தனது கீச்சகத்தில் கருத்துப் பதிவிட்டுள்ளார்.

அதில்,"எல்லோரும் சிறிலங்கா பொதுமக்கள் நோக்கி....... சிறிலங்கா சுதந்திர கட்சியின் நிறுவுநர் பண்டாரநாயக்கா, கல்லறைக்கு உள்ளே செய்த பாவங்களுக்காக கண்ணீர் வடித்துக் கொண்டு இருப்பார்" என்று தெரிவித்துள்ளார்.



சட்டவாக்கம்

## கரு ஐ.தே.க. சார்பாக செயற்பட்டமையே நாடாளுமன்றம் கலையக் காரணமாம்

*கூறுகின்றார் மகிந்த சமரசிங்க*

கொழும்பு,நவ.13

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக சபாநாயகர் கரு ஜயசூரிய செயற்பட்டமையினாலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டி ஏற்பட்டது என்று அமைச்சரவைப் பேச்சாளர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் வெளியிட்ட அரசிதள் அறிவித்தலின்படி நாளை நாடாளுமன்றம் நாளை கூடியிருந்தாலும் கரு ஜயசூரிய ஐக்கிய தேசிய கட்சி சார்பாகவே செயற்பட்டிருப்பார்.

அரசமைப்பின் பிரகாரம் அரச தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் உ'றுப்புரிமையை ஏற்றிருந்தாலும் அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தே செயற்படுவார்.

அவ்வாறு இணைந்து செயற்படுவராக இருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைமை அமைச்சர் வேட்பாளராக அவரையே களமிறக்குவோம். எனினும் சின்னம் குறித்து அடுத்த கட்டங்களில் தீர்மானிக்கப்படும் - என்றார்.

## அரசியல் நடவடிக்கைகளுக்கு பேருந்தை இலவசமாக வழங்க வேண்டாம்

*போக்குவரத்து அமைச்சர் கோரிக்கை*

கொழும்பு,நவ.13

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளை அரசியல் நடவடிக்கைகளுக்கு இலவசமாக வழங்க கூடாது என அச்சபையின் தலைவருக்கு நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளுக்காக, பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் சகல அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பணத்தை செலுத்தி பேருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்றரை வருடங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை நிதி வளர்ச்சியடைந்துள்ள நிலையில், மீண்டும் அரசியல் செயற்பாடுகளால் இந்த நிலைமையில் பாதிப்பு ஏற்படக் கூடாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தடுப்பு முகாமில் உள்ள ஏதுலிகளை அமெரிக்கா நிராகரித்துள்ளது

கொழும்பு,நவ.13

ஆஸ்திரேலிய தடுப்புமுகாமில் உள்ள ஏதிலிகள் ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவில் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்து வருகின்றனர். இவ்வாறு விண்ணப்பித்த 72 சதவீதமான ஏதிலிகளை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

தற்போது விண்ணப்பித்த 32 ஏதிலிகளில் 9 பேரின் விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த 9 பேரில் 4 ரோஹிங்கியர், 3 ஆப்கானியர், 2 பாகிஸ்தானியர் மற்றும் 1 ஈழத்தமிழர் எனக்கூறப்படுகின்றது.

இதுவரை நவுரு முகாமிலிருந்து 300 பேரும், மனுஸ்தீவிலிருந்து 167 பேமாக 467 ஏதிலிகள் அமெரிக்காவில் மீள்குடியேற்றப்பட்டுள்ளன.

ஆயிரத்து 200 மேற்பட்ட ஏதிலிகள் மீள்குடியேறுவதற்கான எந்த வாய்ப்புகளுமின்றி இன்னும் ஆஸ்திரேலிய தடுப்பு முகாம்களில், வாழ வேண்டிய நிலை தொடர்ந்து வருகின்றது.

அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் பாரக் ஒபாமா ஆட்சியின் இறுதிக்காலக்கட்டத்தில் கையெழுத்தான ஏதிலிகள் ஒப்பந்தம்,ஆஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்பு முகாம்களில் உள்ள ஆயிரத்து 250 ஏதிலிகள் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியமர்த்தவும், அமெரிக்காவின் தடுப்பில் உள்ள மத்திய அமெரிக்க ஏதிலிகளை ஆஸ்திரேலியாவில் குடியமர்த்தவும் வழிவகைச் செய்கின்றது. இது ஒரே முறை நடைமுறைப் படுத்தப்படும் ஒப்பந்தமாக கையெழுத்தானது.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் கடுமையான எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வரும் ஆஸ்திரேலிய அரசு, படகு வழியே ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய முயற்சிப்பவர்களை முழுமையாக நிராகரித்து வருகின்றது. கடந்த காலங்களில், இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து படகு வழியாக ஆஸ்திரேலியா அடையும் முயற்சிகளை ஈழத்தமிழ் ஏதிலிகள் மற்றும் ரோஹிங்கியா ஏதிலிகள் மேற்கொண்டனர்.

## எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள்

# முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மீற்றர் கட்டாயம்!

### யாழ். மாவட்டச் செயலர் வேதநாயகன் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.14**


**யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் அனைத்துக்கும் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு இடையில் கட்டண மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என்றுயாழ்ப்பாணமாவட்டச்செயலர்நா.வேதநாயகன்தெரிவித்தார்.**

யாழ்ப்பாணக்குடாநாட்டில் இயங்கும் முச்சக்கர வண்டிகளின் முதன்மைச் சங்கங்கள்ஐந்தின்நிர்வாகிகள், மாநகர முதல்வர், பொலிஸார்உள்ளிட்டோருக்கிடையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"குறித்தவிடயம்2015ஆம் ஆண்டு முதல் பேசப்பட்ட போதும் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை. பயணிகளுக்கும் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கும் இடையில் பல தகராறுகள் மனக் கசப்புக்கள் ஏற்படுகின்றன. கட்டண மீற்றர் பொருத்துவதன் மூலம் பயணிகளுக்கும்" சாரதிக்கும் இடையிலான நம்பகத் தன்மை அதிகரிக்கும்' என்று மாவட்டச் செயலர்மேலும்தெரிவித்தார்.

மாவட்டச் செயலரின் இந்தக் கோரிக்கைக்குப் பதில் வழங்கியமுச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்கள், "குறித்த மானி வாசிப்பைப் பொருத்துவதற்குமுச்சக்கர வண்டி உரிமையாளர்கள் என்றுமேமறுப்புத்தெரிவிக்கவில்லை. இருப்பினும் உரிய வழிகாட்டல் கிடைப்பதில்லை. குறிப்பிட்டகாலத்துக்குள் அதனை பொருத்த ஏற்பாடுகளைச் செய்ய முடியும்'' என்று முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் சங்கப் பிரதி நிதிகள் தெரிவித்தனர்.

2016ஆம்ஆண்டில்யாழ்ப்பாணத்தில் சேவையில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மீற்றர்களைப் பொருத்துவதற்கு இதே மாவட்டச்செயலர்நடவடிக்கை எடுத்தபோது, 'மாகாண போக்குவரத்து நியதிச் சட்டத்தின் பிரகாரம் குறித்த விடயம் மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம்' என மாகாண சபை மாவட்டச் செயலருக்கு எழுத்தில் கடிதம்அனுப்பியதன்பெயரில் குறித்த பணிக்கான முன்னெடுப்புக்களை மாவட்டச் செயலர் கைவிட்டிருந்தமையும்குறிப்பிடத்தக்கது. (ம-105)



## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஓவியங்கள்காட்சிப்படுத்தலும்

சாவகச்சேரி, நவ. 13

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்டத்தால் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் இடைநிலைப் பிரிவு (11-13 வயது) மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமாதான சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் சித்தி பெற்ற மாணவர்களுக்குபணப்பரிசில்களும்சான்றிதழ்களும்வழங்கும் நிகழ்வும்ஓவியங்கள்காட்சிப்படுத்தலும்சாவகச்சேரிதேவாலய சாலையில் உள்ள ஹன்ற் நினைவு ஓவியக்கலைக் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

பரிசளிப்புநிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட ஆளுநர் 'லயன்' தேவா பீற்றர் கலந்து கொண்டார். அவரும் மாவட்டத்தின் நூற்றாண்டு ஆளுநர் 'லயன்' மருத்துவர் வை. தியாகராசாவும் இணைந்து ஓவியங்களின் காட்சிக்கூடத்தைத் திறந்து வைத்தனர். சுமார் 250 மாணவர்களுக்கு பணப் பரிசில்களும்சான்றிதழ்களும்வழங்கப்பட்டன. (ம-9.159)

## சபா குகதாஸால் பல்வேறு உதவி

யாழ்ப்பாணம், நவ. 13

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் இரண்டுஆலயங்களுக்கும் தொண்டு அமைப்பு ஒன்றுக்கும் நேற்றுமுன்தினம் சில உதவிகளை வழங்கினார்.

இதன்படி குகதாஸால், சுழிபுரம் - வீராவத்தை ஞானவைரவர் ஆலயத்தில் அன்னதானப் பணியை முன்னெடுப்பதற்காக 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. சண்டிலிப்பாய்பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வடலியடைப்பு பறாளை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வெளி வீதி சீரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபா ஆலய பரிபாலன சபைத் தலைவர் து.பகீரதனிடம் கையளிக்கப்பட்டது. பண்ணாகம் மாதர் சங்கத்தில் நடைபெறும் மருத்துவமுகாம் செயற்பாட்டுக்கென40ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ம-50)



தந்தைசெல்வாநற்பணிமன்றஉறுப்பினர்க. தலையரட்ணத்தின் அனுசரணையில்தொல்புரம்சர்வோதயத்தில் கண்பரிசோதனைமருத்துவமுகாமும், சுழிபுரம்காலையடிமறுமலர்ச்சிமன்றத்தில்மூக்குகண்ணாடிகள்வழங்கும்நிகழ்வுகளும்அண்மையில்இடம்பெற்றன. வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். வலி கிழக்குப் பிரதேசச சபை உறுப்பினர் ஜெயந்தன் கண்ணாடியைப் பயனாளிக்கு வழங்கி வைப்பதைக் காணலாம். (ம-7)


## சாலை விபத்தில் பெண் ஒருவர் காயம்

### எழுதுமட்டுவாழில் சம்பவம்

சாவகச்சேரி, நவ. 13

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றசாலைவிபத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர்காயமடைந்தார். காந்தரூபன்கார்த்திகா(வயது -32) என்ற நபரே அவ்வாறு காயமடைந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் ஏ9 முதன்மைச் சாலையில் நடந்து சென்ற அவரை கொழும்பிலிருந்து வந்த மூடுந்து (ஹைஏஸ்) மோதியதில் அவர் சில அடிகள்தூக்கிவீசப்பட்டார் என்றுவிபத்தைப்பார்த்தவர்கள் தெரிவித்தனர். சாவகச்சேரி மருத்துவமனையில்சேர்க்கப்பட்ட அவர்மேலதிகசிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம-9)



## மாட்டீனார் குருமட திருவிழா

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாண மறைமாவட்ட புனித மாட்டீனார் சிறிய குருமடத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை குருமட அதிபர் அருட்பணி பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

முற்பகல் 11 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மாட்டீனார் குருமட கொடியேற்றல் நிகழ்வும் குருமடத்தின் யூபிலி ஆண்டை ஆரம்பிக்கும் நினைவுச் சின்னத் திரை நீக்கமும் இடம்பெற்றன.

புனித மாட்டீனார் சிறிய குருமடம் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் கடந்த 149 ஆண்டுகளாக குருக்களை வழங்கும் ஆரம்ப குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாகத் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-222)

## உரிமைக் கட்டணம் செலுத்தாத வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

வலிகாமம்மேற்குப்பிரதேசசபைக்குஉட்பட்டபகுதியில் இந்த வருட வர்த்தக உரிமைக் கட்டணம் செலுத்தாத வர்த்தகர்கள் மீது பிரதேச சபையால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக சங்கானை உப அலுவலக பிரிவுக்கு உட்பட்ட இரு வர்த்தகர்கள் மீது மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-50)

## கல்வயல் வீரகத்தி விநாயகர் கோவிலுக்கு 81 அடி உயரமான சப்ததள இராஜகோபுரம்

யாழ்ப்பாணம், நவ. 13

சாவகச்சேரிகல்வயல்ஆயிலடிவீரகத்திவிநாயகர்(புலுட்டையன் பிள்ளையார்) கோவிலில் 81 அடி உயரமான சப்த தள இராஜகோபுரம்அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோவில் தர்மகர்த்தா சி. விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மருத்துவர் சங்கரப்பிள்ளை ஜெயநாதன் அடிக்கல்லை நடவுள்ளார். இந்திய சிற்பாசிரியர் கி. மணிகண்டன் தலைமையிலான கட்டடக் கலைஞர்களால் இராஜகோபுரம் அமைக்கப்படவுள்ளது. (ம-9)



நெடுந்தீவுப் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் வாழ்வாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் பிரதேச செயலாளர் சி. சத்தியசோதியால் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர் மா. கியூமன், கணக்காளர் சிவகுமாரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

# தவிசாளரின் கருத்தை அறியும் முன் வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள்

## பதில் வந்ததன் பின்னர் எல்லோரும் 'கப்சிப்'

**யாழ்ப்பாணம், நவ. 13**

**நல்லூர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட, 'மின்குமிழ்கள் பொருத்துவது தொடர்பான தீர்மானம்' தொடர்பில் என்ன தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தவிசாளர் தெரிவிக்கும் முன்னர் சபையின் 11 உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான மதுசூதனனும் ஒருவர்.**

நல்லூர்பிரதேசசபையின் 8ஆவது அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை உறுப்பினர் சு.விஜயகுமரன் சபையின் எல்லைக்குள் மின்குமிழ்கள் பொருத்துவது தொடர்பான தீர்மான வரைவைக் கொண்டுவந்தார்.

தீர்மானவரைவை முன்மொழிந்து விவாதத்துக்கு எடுத்துக் கொண்ட போது சபையின் ஈ.பி.டி.பி உறுப்பினர் சிவலோஷன் "இன்றுவரை இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணப்படவில்லை. ஆகவே நான் இந்தச் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்கின்றேன்" எனக்கூறி சபையில் இருந்து வெளியேறினார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் மயூரனும் ஈ.பி.டி.பி உறுப்பினருக்கு ஆதரவு தெரிவித்து சபையில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் மதுசூத னன் வெளியேறினார். அதைத் தொடர்ந்து முன்னணியின் ஏனைய உறுப்பினர்களும் வெளியேறினார்கள். இதையடுத்து சபை தேநீர் இடைவேளை வரை ஒத்தி வைக்கப்பட்டது. சபை மீளக் கூடிய போது வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் மீள வந்து அமர்ந்தனர்.

அதன்பின்னர் அவர்கள், "மின்குமிழ் பொருத்துவது தொடர்பில் என்ன முடிவு எடுக்கப் போகின்றீர்கள்?" எனத் தவிசாளரை நோக்கி வினவினார்கள்.

இதற்குப் பதில் வழங்கிய தவிசாளர், "சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின்குமிழ்கள் பொருத்துவதற்காக மின்சார சபையினருக்கு ஏன் அதிக பணம் செலுத்த வேண்டும் என உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தீர்கள். பின்னர் கடந்த அமர்வில் சபையின் நிதியை மின்சார சபைக்குச் செலுத்திமின்குமிழ்களைபொருத்துவோம் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் தொடர் நடவடிக்கையாக நாம் 200 மின்குமிழ்களைப் பொருத்த சுமார் 3 லட்சம் ரூபா நிதியை மின்சார சபைக்குச் செலுத்தியுள்ளோம். அடுத்தவாரம் மின்குமிழ்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றைச் சபையில் கூற முன்னரே வெளியில் போய்விட்டீர்கள். நீங்கள் சபையை குழப்ப வேண்டும் எனத் திட்டமிட்டு செயற்பட்டுள்ளீர்கள்" என வெளிநடப்புச் செய்தவர்களுக்குப் பதிலடி கொடுத்தார். இதற்குப் பதில் வழங்கிய உறுப்பினர்கள், "நாங்கள் திட்டமிட்டுச் செயற்படவில்லை. மின்குமிழ்கள் பொருத்த வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் அவ்வாறு செயற்பட்டோம்" என்றனர்.

**பெண்களுக்கான குழு**

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வாழும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பைப் பேணவும் விழிப்புணர்வுகளை வழங்கவும் குழு ஒன்றும் நேற்று நியமிக்கப்பட்டது. இது தொடர்பான தீர்மான வரைவை சபை உறுப்பினர் திருமதி வாசுகி சபையில் கொண்டு வந்தார். இந்தத் தீர்மான வரைவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

வாசுகியைத் தலைவராகவும், கௌசல்யா, பிருந்தா, சச்சிதானந்த தேவி, அகிலாண்ட ரூபி, சிவலோசன், ஜெனகன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு அந்தக் குழு நியமிக்கப்பட்டது.

**மரங்களைப் பாதுகாத்தல்**

சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழமை வாய்ந்த மரங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி சபையின் உபதவிசாளர் ஜெயன் தனிநபர் தீர்மான வரைவை சபையில் முன்மொழிந்தார். இந்தத் தீர்மான வரைவு அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சபையின் எல்லைக்குள் உள்ள பழமை வாய்ந்த மரங்களில் உள்ள குருவிச்சை, பெரிய கொப்புக்கள் போன்றவற்றை வெட்டி மரங்களைப் பாதுகாப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. பழமை வாய்ந்த மரங்களில் பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ள மரங்களை அடையாளப்படுத்தும் வகையில் பதாகைகளை வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

(ம-8)

## விளைத்திறனற்று சபை செயற்பட்டால் பதவியில் இருந்து விலகுவேன்

*நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் குகானந்தன் நேற்றுத் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம் நவ 13

பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு எட்டுமாதமாகியும் பழுதடைந்த ஒரு மின்குமிழைக்கூட மாற்றிக் கொடுக்க முடியவில்லை. இதே நிலை தொடர்ந்தால் பதவியில் இருந்து விலகுவேன் என்று தெரிவித்தார் நல்லூர் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் வி.கே.குகானந்தன்.



நல்லூர் பிரதேச சபையின் 8ஆவது அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் சபை உறுப்பினர் சு.விஜயகுமாரன் மின்குமிழ்கள் பொருத்துவதற்கு உறுதியான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தித் தீர்மான வரைவொன்றைச் சபையில் கொண்டுவந்தார். இந்தத் தீர்மான வரைவு தொடர்பான விவாதத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் வி.கே.குகர்னந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

செயலரின் கட்டுப்பாட்டில் சபை இயங்கிய போது மிகவும் வினைத்திறனாகவும் வேகமாகவும் இயங்கியது. ஆனால் சபையை நாம் பொறுப்பேற்ற பின்னர் சபையில் எந்த முன்னேற்றமும் இல்லை. கடந்த காலங்களில் எமது பிரதேசங்களில் மின்விளக்குகள் பொருத்த வேண்டிய தேவைகள் ஏற்பட்டபோது செயலர் விரைந்து நடவடிக்கை எடுத்துப் பொருத்தித் தந்திருந்தார்.

ஆனால் இப்போது சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரை மின்விளக்கு பொருத்துவது தொடர்பாக பேசிக் கொண்டிருக்கின்றோமே தவிர வேறெதுவும் நடக்கவில்லை. ஒரு பழுதடைந்த மின்குமிழைக்கூட எட்டுமாதங்களாகப் பொருத்திக் கொடுக்க முடியவில்லை. அப்படியானால் நாம் மக்கள் பிரதிநிதி என ஏன் இங்கு வந்துள்ளோம். மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் எனக்கு இந்தப் பதவி தேவையில்லை. இனிவரும் அமர்வுகளிலும் இந்தப் பிரச்சினை தொடர்ந்தால் நான் பதவி விலகுவதைத் தவிர வேறு தெரிவு இல்லை - என்றார். (ம-8)

## சூரன் போர்

**செல்வச்சந்நிதி கோவில்**

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கந்த சஷ்டி உற்சவத்தை முன்னிட்டு சூரன் போர் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. கந்த சஷ்டி பாறணை சிறப்பு பூசை நாளை 14ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடைபெறும் .

**நீர்வேலி கந்தசுவாமி கோவில்**

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று செவ்வாய்க் கிழமை சூரன் போர் இடம்பெறவுள்ளது.

நண்பகல் 12.15 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும், தொடர்ந்து 3 மணிக்கு சூரன் போரும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**அராலி முருகமூர்த்தி ஆலயம்**

அராலி வடக்கு இலந்தைத் தாழ்வு முருகமூர்த்தி ஆலயத்தில் சூரசம்ஹார நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சண்முக அர்ச்சனை நடைபெறும் . நாளை காலை 7 மணிக்கு முருகனின் திருக்கல்யாணம் நடைபெறும்.

**புலோலி வில்லிபாதி முருகன் ஆலயம்**

புலோலி வில்லிபாதி முருகன் ஆலயத்தின் சூரன் போர் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-17,173,422)



## தனன்களப்புப் பகுதியில் பனம் விதைகள் நடுகை

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி தனன்களப்பு முள்ளிப்பிட்டி இந்து மயானத்தைச் சூழவுள்ள பகுதிகளில் 2 ஆயிரத்து 500 பனம் விதைகள் நேற்றுமுன்தினம் நடுகை செய்யப்பட்டன.

தனன்களப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன என சங்கத் தலைவர் து.சுப்பிரமணியம் தெரிவித்தார். (ம-9)

# கோண்டாவில் வாள்வெட்டைத் தடுக்கத் தவறிய பொலிஸாருக்கு எதிராக விரைவில் நடவடிக்கை!

## பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

கோண்டாவில் பகுதியில் வீடொன்றில் அண்மையில் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது அந்த வீட்டுக்கு மிக அருகில் பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். அவர்கள் வாள்வெட்டைத் தடுக்கத் தவறியிருந்தனர். இந்த விவகாரத்தில் கடமை தவறிய பொலிஸாருக்கு எதிராகக் கடும் நட வடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் கலந்துரையாடலின் போதே மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் கடந்த மாதம் 26ஆம் திகதி மாலையில் ஓர் இளைஞன் வீடொன்றுக்குள் வாளுடன் புகுந்து அந்த வீட்டாருடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். வீட்டு உரிமையாளரையும் வாளால் வெட்டியுள்ளார். அந்தச் சம்பவம் இடம்பெற்ற போது அந்தப் பகுதியில் (வீட்டுக்கு மிக அருகாக) பொலிஸார் வீதிச் சோதனைப் பணிகளில் ஈடுபட்டிருந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸாரிடம் முறையிட்டபோது, "பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்குங்கள்" எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தரவின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-105)

# கால்நடைகள் எல்லை தாண்டக் கூடாது

## வவுனியா மக்கள் போர்க்கொடி

**வவுனியா, நவ.13**

**மன்னார் மாவட்டத்தின் நானாட்டான், குஞ்சுக்குளம், கட்டையடம்பன், கட்டைக்காடு போன்ற பகுதிகளில் இருந்துகொண்டுவரப்படும் கால்நடைகள், வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரிய கட்டுப் பகுதியில் மேச்சலுக்கு விடப்படுவதால் பெரும் அசௌகரியங்களைச் சந்திப்பதாக அந்தப்பகுதி மக்களும், கிராமப் பொது அமைப்புகளும் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:**



மழைகாலங்களிலேயே மாடுகள் கொண்டுவரப்படுவதால், எமது பிரதேசத்துக்கு உட்பட்ட மேட்டுநிலப் பயிர் செய்கை முற்றாகப்பாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மாடுகள் கொண்டுவரப்படுவதால் எமது பிரதேசத்தின் மாடுகளும் களவுபோகின்றன.

செட்டிகுளம் பிரதேச முன்னாள் செயலரிடம் நாம் விடுத்தவேண்டுகோளுக்கிணங்க, மன்னார் மாவட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்காக இங்கு அழைத்து வரப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பாளர்கள் அதனைக் கருத்தில் எடுக்காது, தொடர்ந்து மேய்ச்சலுக்கு கொண்டு வருகின்றனர். உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதே செயலகம்,பிரதேச சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், செட்டிக்குளம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் ஆகியோருக்குக் கிராமப் பொது அமைப்புகளால் கடிதம் மூலம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர் க.சிவகரன்,

ஏனைய மாவட்டத்தின் கால்நடைகளை மேய்ச்சலுக்காக செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவிற்குள் அனுமதிக்கமுடியாது என, செட்டிக்குளம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டது.

அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று கிராமத்தின் பொது அமைப்புக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

தமது பகுதியில் உள்ள கால்நடைகளைச் செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சில பகுதிகளில் மேய்ச்சலுக்காக அனுமதிக்குமாறு, நானாட்டான் பிரதேச செயலரால் எமக்கு வேண்டுகோள் விடப்பட்டது.

எமது பகுதி விவசாயச் செய்கை நிறைந்த பகுதி. நாம் பொதுமக்கள், அமைப்புகளின் கருத்துக்களைக் கேட்டிருந்தோம், எமதுபகுதிக்குள் கால்நடைகளை அனுமதிப்பதில்லை என தீர்மானித்துள்ளதுடன், இது தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலருக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். அத்துடன் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம். எனவே இனி மேல் கால்நடைகளை கொண்டுவருவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்று செட்டிக்குளம் பிரதேச செயலர் க.சிவகரன் தெரிவித்தார். (110)



## பழுதடைந்த குழாய்க்கிணறு திருத்தி அமைப்பு

வவுனியா, நவ. 13

வவுனியா வைரவப்புளியங்குளம் சந்தியில் நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பொதுக் குழாய்க்கிணறு நகரசபை உப தவிசாளர் சு.குமாரசிங்கத்தால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

குழாய்க்கிணறு தொடர்பாக உப தவிசாளருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவரின் நேரடித்தலையீட்டில் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

## பிறந்த நாளை முன்னிட்டு மரம் நட்ட மாணவன்



கொடிகாமம், நவ.13

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் செல்வன் ச. டர்ஷன் தனது பிறந்த நாளை முன்னிட்டு முற்போக்கு சிந்தனையுடன், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மரக்கன்றுகளை நட்டு வைத்துள்ளார்.

2020 ஆம் வருட கலைப் பிரிவில் கல்வி கற்கும் இந்த மாணவனின் முன்மாதிரியான செயற்பாட்டை பலரும் பாராட்டியுள்ளனர். தான் கல்வி கற்கும் பாடசாலையின் வளாகத்தில் அமைந்துள்ள மகிந்தோதய ஆய்வு கூட கட்டடத்துக்கு முன்னால் மரக்கன்றை இந்த மாணவன் நட்டுள்ளார். (159)

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு

கொடிகாமம், நவ.13

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசில்கள் வழங்கலும் கடந்த 9 ஆம் திகதி கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளையின் உதவி முகாமையாளரும், சிறப்பு விருந்தினர்களாகக் கொடிகாமம்திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரனும், மதிப்புறு விருந்தினர்களாகப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன், கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதிபு.மங்களேஸ்வரன், சம்பத் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் உதவி முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் இரண்டாமிடத்தையும் தமிழ் மொழியில் முதலாமிடத்தையும் பெற்ற.. மீசாலை வடக்கைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியுமான நவாஸ்கர் நதியின் பெயரில் பிரதேச சபை உறுப்பினர்களால் சேரிக்கப்பட்ட நிதி வங்கியில் வைப்பிலிடப்பட்டு, வங்கிக் கணக்குப் புத்தகம் மாணவியிடம் கையளிக்கப்பட்டது.

மாணவிக்குச் சம்பத் வங்கியின் சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோர் பதக்கம் அணிவித்து மதிப்பளித்தனர்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிக் கச்சாய் பொது நூலகத்தினரால் வெளியிடப்பட்ட கலையூற்று மூன்றாம் பதிப்பை வடவரணி சி.சபா ரத்தினம் வெளியிட, முதன்மை விருந்தினர் பெற்றுக் கொண்டார். நூலின் ஆய்வுரையைக் கொடிகாமம்திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் அ.திருநாவுக்கரசு நூலின் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கவிஞர் மதிப்பளிப்பு வரிசையில் வடவரணி சி.சபாரத்தினத்தை முதன்மை விருந்தினர் பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார்.

கொடிகாமம் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி புனிதா சிவகுமார் ஒரு தொகுதி நூல்களை கச்சாய் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலக எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் முன்பள்ளிச் சிறார்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (159.9)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சி கிராமியக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினர் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சிக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடந்தது.

நிறுவனத் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராகக் கரைச்சி உதவிப் பிரதேச செயலர் தமிழினி சதீஸ் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (9)



## முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு



முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு- வள்ளுவர்புரம் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் முதுமையின் நரை மனிதனின் கிரீடம் என்னும் முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி வள்ளுவர்புரம் ஜீவஜோதி பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

கிராம அலுவலர் திருமதி நாமலா உதயபவான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராகப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ம.பிரதீபன், முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் என்.தசரதன், யாழ். கிருபா சாரதியப் பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிரு பாகரன், மதிப்புறு விருந்தினர்களாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் ச.சதாதரன், பாரதி மகா வித்தியாலய அதிபர் இ.அந்தோனிப்பிள்ளை, கிளிநொச்சி தமிழ்விருட்ச இணைப்பாளர் திருமதி சுபா வசந்தகுமார், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் செல்வி. கிருபாஜினி ஜீவரத்தினம் இவர்களுடன் மாவட்ட மூத்தோர் விருந்தினர்களாக திருமதி ஞானம்மா கதிரவேலு பொன்னையா இராசதுரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதியோர் மதிப்பளிப்பும் பரிசில்கள் வழங்கலும் பிரிவில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற கிராம அலுவலர் த.ஜெயதாசும் மதிப்பளிக்கப்பட்டார். (159,9)

# சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 17 மீனவர்கள் கைது

**மன்னார், நவ.13**

**சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்த 17 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் முற்படுத்தப்பட்டார்கள்.**

கடந்த சனிக்கிழமை இரவு, மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் ஆறு படகுகளில் சென்ற 17 மீனவர்கள் சிலிண்டர் மூலம் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தனர். கடலில் ரோந்து சென்ற கடற்படையினர் அவர்களைக் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தனர்.



17 மீனவர்களையும் பொறுப்பேற்ற மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், ஆறு படகுகள், மீனவர்க ளுக்கும் எதிராக தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்து, ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் முற்படுத்தினர். இவர்கள் தலா 50 ஆயிரம் ரூபா ஆட் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு, விசாரணைக்காகத் திங்கட் கிழமை திகதியிடப்பட்டி ருந்தது. வழக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, இவர்கள் ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், பிடித்த கடலட்டைகளை 40 ஆயிரம் ரூபா பிணை முறியில் எடுத்துச் செல்ல நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (60)



## ஹெரோயினுடன் வன்னியில் மூவர் கைது

வவுனியா, நவ.13

வவுனியாவில்520மில்லிகிராம்ஹெரோயினை உடைமையில் வைத்திருந்தவரை வவுனியா போதைத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார், வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் வைத்து, இராசேந்திரங்குளத்தை வசிப்பிட மாகக்கொண்ட 33 வயதுடைய ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து 520 மில்லிக் கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

★★★

முல்லைத்தீவு,நவ.13

கொழும்பில் இருந்து முல்லைத்தீவுக்கு வந்த முல்லைத்தீவைச் சேர்ந்த தனியார் பேருந்தின் சாரதி ஒருவர் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் இருந்து முல்லைத்தீவுக்குத் தனியார் பேருந்து ஒன்றின் சாரதி ஹெரோயின் வகை போதைப் பொருளைக் கொண்டு செல்வதாகப்பொலிஸாருக்குக்கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பி.ஆர்.பி.சேனாநாயக்கவின் நெறிப்படுத்தலில், முல்லைத்தீவு மாவட்ட போதைத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் பதவியாவைச் சேர்ந்த சாரதியைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான்நீதிமன்றில்முன்னிலைப்படுத்தியுள்ளனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ரி 3)

★★★

கிளிநொச்சி, நவ. 13

இரணைமடுப் பகுதியில் ஹெரோயினை உடமையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தன வின் கண்காணிப்பின் கீழ், பொறுப்பதிகாரி சதுரங்க, உப பொலிஸ் பரிசோதகர் நிரோஜ் போன்றவர்வகளின்கீழ், குறித்த மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இயங்கி வருகின்ற னர்.

இந்தக் குழுவினருக்குக் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இரணைமடுப் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டைச் சோதனையிட்டபோது, அவரிடம் இருந்து 450 மில்லிக் கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து 10 தொலைபேசி கள், 60 லைற்றர்கள் ஆகியன மீட்கப்பட்டதாகவும், சந்தேக நபர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசா ரணைக்காக ஒப்படைக்கப்பட்டதாக வும், கிளிநொச்சி மாவட்டப் போதைப் பொருள் தடுப்புப் பிரி வின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

சந்தேக நபரைக் கிளிநொச்சி பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தவிட்டுள்ளது. (6)

## நூல் வெளியீடு

வவுனியா,நவ.13

வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயப் பழைய மாணவனும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்புக் கலைப் பட்டதாரியுமான எஸ்.பி.பவிதன் எழுதிய "இடவிளக்கவியற் தேசப்படத்துக்கு ஓர் அறிமுகம்" என்கின்ற புவியியல் நூல் கடந்த 9 ஆம் திகதி கனகராயன்குளம் மகா வித்தியாலயப் பிரதான மண்டபத்தில் மதியம் 1 மணிக்கு வெளியிட்டு வைக்கப்பட்டது. (222)





## கந்தசஷ்டிப் பெருவிழா

வவுனியா,நவ.13

வவுனியா, நெளுக்குளம் சிறி முருகன் ஆலயத்தில் கந்த சஷ்டிப் பெருவிழா 8 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. தினமும் ஆலயப் பிரதமகுரு சிவசிறி வேத சரண்ய சிறீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்று, சுவாமி உள்வீதி உலாவந்து, அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறார். "கந்தன் கருணை" என்ற தலைப்பில் இன்தமிழ் இனியன் செ.சிறிநிவாசன் தினமும் தொடர்சொற்பொழிவாற்றுகிறார். (222)

## முதிரைமரக் குற்றிகளுடன் ஒருவர் கைது

வவுனியா, நவ.13

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிடாசூரிப்பகுதியில், அனுமதியின்றி முதிரைமரக் குற்றிகளை ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் ஒருவரை ஈச்சங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் கப் ரக வாகனத்தை ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஸ் ஆரியரதரத்ன, உப பொலிஸ் பொறுப்பதிகாரி விஜயரத்தின தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் மறித்தனர். வாகனத்தில் வந்தோர் வாகனத்தில் வந்தோர் வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளனர். வாகனத்தை பின்தொட ர்ந்த பொலிஸார் கிடாச்சூரிப் பகுதியில் வைத்து வழிமறித்தனர். வாகனத்தில் இருந்த நான்குபேரில் மூன்றுபேர் தப்பி ஓடியுள்ளனர். வாகனத்தின் சாரதி கைது செய்யபட்டார். கைப்பற்றபட்ட




வாகனத்தில் இருந்து 9 முதிரைமரக்குற்றிகள் மீட்கப்பட்டன. கைது செய்யபட்டவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தபட்டதுடன், 14நாள்கள் விளக்கமறியலில் வைக்கபட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கல்

முல்லைத்தீவு,நவ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது வெள்ளம் வடிந்தோடியுள்ள நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திரும்பியுள்ளது.

மழை வெள்ளத்தால் நித்தகைக் குளம் உடைப் பெடுத்தது. கரைதுரைப் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புளிய முனை மக்கள், இதில் சிக்குண்டனர்.

இந்தப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆறு குடும்பங்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில்தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியான உதவிப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ரி3)



## பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், மாந்தை, முசலி, போன்ற பிரதேசங்களில் காணப்படும் விளை நிலங்களில் இரவு பகல் பாராமல் விதைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எப்போதும் இல்லாத வகையில் இந்த வருடம் முன் கூட்டியே நல்ல மழை பெய்து குளங்கள் வயல்கள் நீர் நிறைந்து காணப்படுவதால், உழவு விதைப்பு வேலைகளை ஆரம்பித்துவிட்டோம்என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். தற்பொழுது பெய்த மழையால் சிறுகுளங்கள் மற்றும் கட்டுக்கரை குளத்தில் உள்ள நீர் அளவு பயிர் ஓரளவு வளருவதற்கு போதுமானதாக இருக்கும் என்றாலும், தைப் பொங்கல் காலப்பகுதியில் இன்னுமொரு மழை வீழ்ச்சி கட்டாயம் தேவை என்று விவசாயிகள் தெரிவித்தார்கள். (213)

## திண்மக் கழிவகற்றும் வாகனங்கள் பாடல் ஒலிபரப்பிக்கொண்டுவரும்

*வலி மேற்கில் இந்த ஏற்பாடு*

யாழ்ப்பாணம், நவ. 13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள், திண்மக் கழிவகற்றும் வாகனங்கள் சேவையில் ஈடுபடும்போது கழிவகற்றல் தொடர்பான பாடலை இசைக்கவிடுவது என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் இருந்து பாடல் இசைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சபை எல்லைக்குள் சேரும் குப்பைகளைச் சேகரிப்பதற்குச் சபை வாகனங்கள் செல்கின்றன. ஒவ்வொரு பகுதிக்கும் சென்று கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. சில இடங்களில் வாகனங்கள் வருவது மக்களுக்குத் தெரிவதில்லை. சேகரிக்கப்படும் குப்பைகள் அந்த இடங்களில் மூட்டைகளாக நீண்ட நாள்கள் காணப்படுகின்றன. சபையின் குப்பைகள் அள்ளும் வாகனங்கள் குப்பை சேகரிக்கச் செல்லும்போது மக்களுக்குக் கேட்கக் கூடியவாறு ஒலி எழுப்பப்பட வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் ஆலோசனை முன்வைத்தனர்.

ஒலி எழுப்புவதற்குப் பதிலாகக் குப்பைகள் சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான வசனங்களை உள்ளடக்கிய பாடல் ஒன்று ஒலித்ததால் அது மக்களுக்கு விழிப்புணர்வாக இருப்பதோடு சபையின் குப்பை அள்ளும் வாகனம் வருகிறது என்பதை உணர்ந்துகொள்வர் என்று இன்னும் சிலர் ஆலோசனை கூறினர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் பாடல் ஒன்றை எழுதி சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி பாடலாக மெட்டு அமைத்து தயார்ப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனை ஒரு போட்டியாக நடத்தி சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்து மதிப்பளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த வருடத்திலிருந்து இந்த நடைமுறை பின்பற்றப்படும் என்றும் தவிசாளர் தெரிவித்தார். இந்தத் தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சபைக்குக் கீதம்**

சபையின் தனித்துவத்தைப் பேணுவதற்குச் சபைக்குக் கீதம் ஒன்று இயற்றப்பட்டுள்ளதாகச் சபையில் தவிசாளர் தெரிவித்தார்.

சபையின் மாண்பைப் பேணும் நோக்கில் சபைக்கான கீதம் தற்போது எழுதப்பட்டுள்ளது. அதற்கான இசையை பாடசாலைகள் உருவாக்கித் தர வேண்டும். சபையின் எல்லைக்குட்பட்ட 14 பாடசாலைகளுக்கும் பாடல் வரிகளை அனுப்பி இசை அமைப்பது என்றும் சிறப்பாக இசை அமைக்கும் பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு மதிப்பளிப்பது என்றும் தெரிவித்தார். சபை அதனை ஏற்றுக்கொண்டது.

**இலத்திரனியல் நூலகம்**

சபைக்கு உட்பட்ட சங்கானை பொது நூலகம் இலத்திரனியல் நூலகமாக மாற்றப்படவுள்ளதாகச் சபையில் தெரிவிக்கப்பட்டது. இதற்கான முன்மொழிவை ஆசிய அபிவிருத்தி வங்கி கேட்டிருந்தது. அதற்கு அமைவாகச் சபை முன் மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலத்திரனியல் நூலகமாக்க 12 லட்சத்து 2 ஆயிரம் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் 5 லட்சம் ரூபாவை ஆசிய நிறுவத்தினர் ஒதுக்கீடு செய்துள்ளனர். மிகுதி நிதியை அடுத்த பாதீட்டில் ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**சுகாதாரப் பொதி**

உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு 100 பேருக்குச் சுகாதாரப் பொதி வழங்குவதாகச் சபையில் தீர்மானிக்கப்பட்டது. வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பத்தில் உள்ள பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும், முதியவர்களுக்கும் சுகாதாரப் பொதி வழங்கப்படவுள்ளது. சபை எல்லைக்குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவில் இரண்டு பிள்ளைகள் மற்றும் 2 முதியவர்கள் வீதம் நூறு பேருக்கு இந்தப் பொதி வழங்கப்படவுள்ளது. பொதிகள் தலா ஆயிரத்து 250 ரூபா பெறுமதியானவை.

**விளையாட்டுகள்**

சபை அலுவலர்களுக்கும், சபை உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு விளையாட்டுகள் நடத்தப்படவுள்ளன. இருதரப்புக்கும் ஆரோக்கியமான தொடர்பாடல் இருக்குமானால் சபை முன்னேற்றமடையும். கயிறு இழுத்தல், பேணிப்பந்து, மற்றும் சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகள் இரண்டு பிரிவினருக்கும் இடையே நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டன.

(4.7)

# தொல்பொருள் திணைக்களம் சதி செய்கிறது

## கல்லுமலை விநாயகர் ஆலயத்தினர் குற்றச்சாட்டு

*வவுனியா, நவ. 13*

தொல்பொருள்களைப் பாதுகாப்பதே திணைக்களத்தின் பணி. அதில் மாற்றம் எதனையும் செய்தால் அது தொல்பொருளாகாது என்று வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



1952ஆம் ஆண்டு ஆலயம் அமைக்கப்பட்டு பிரதேச மக்கள் வழிபடுகின்றனர். கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் றூண்கள், பாழடைந்த செங்கற் படிவங்கள், கட்டடங்கள் பல காணப்படுகின்றன. கடந்த தீபாவளித்தினத்தன்று தொல்பொருள் திணைக்களத்தினர் கல், மணல் போன்றவற்றை கோவில் வளாகத்தில் பறித்திருந்தனர். தீபாவளித் தினமன்று கட்டுமான வேலைகள் முன்னெடுக்கவிருந்த நிலையில் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பதற்றமான நிலை ஏற்பட்டது.

பொலிஸார் தலையிட்டதால் நிலைமை சுமுகமாகியது.

தொல்பொருள் திணைக்களத்தினர் கோவிலுக்குப் பயணம் செய்யவுள்ளனர் என்று நேற்றுத் தகவல் கிடைத்தது. கோவில் நிர்வாகத் தினர் அங்கு ஒன்று கூடியிருந்தனர். திணைக்களத்தினர் வரவில்லை.

தொல்பொருள்களைப் பாதுகாப்பதே திணைக்களத்தின் பணி. அதில் மாற்றம் எதனையும் செய்தால் அது தொல்பொருளாகாது. எமக்குத் தெரியப்படுத்தாது கட்டடங்களில் மாற்றங்களை ஏற்படுத்தமுனைந்தமையால் தொல்பொருள் திணைக்களத்தின் மீது எமக்கு சந்தேகம் நிலவுகின்றது. நீண்டகாலமாக நாம் அங்கு வழிபட்டு வருகின்ற நிலையில் அவர்களின் இத்தகைய செயற்பாடுகள் மத சுதந்திரத்துக்கு இடையூறான வகையில் காணப்படுகின்றன. தொல்பொருள் திணைக்களம் தமது பணியைக் கைவிடவேண்டும். இறக்கப்பட்ட கட்டடப்பொருள்களை மீண்டும் எடுத்துச்செல்ல வேண்டும். எமது கோயிலையும் வளாகத்தையும் விட்டுக்கொடுக்க மாட்டோம் - என்று கோயில் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர்.

(4.110)

## குழந்தையின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஆண் குழந்தை தண்ணீரில் மூழ்கி மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரியாலையில் பூங்கன்குளம் பகுதியில் இது இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த வசீகரன் ரித்திக் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.

குழந்தையைப் பெற்றோர் அயலிலுள்ள உறவினர் வீட்டுக்கு கடந்த சனிக் கிழமை கூட்டிச் சென்றுள்ளனர். அங்குநின்ற சிறுவர்களுடன் குழந்தை விளையாடிக் கொண்டிருந்துள்ளது. சிறிதுநேரத்தின் பின்னர் குழந்தையைக் காணவில்லை என்று தேடியுள்ளனர். கிணற்றுக்குள் பார்த்தபோது அதற்குள் குழந்தை அசைவற்றுக் காணப்பட்டுள்ளது.

குழந்தையை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். பரிசோதனையில் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. குழந்தை தவழ்ந்து சென்று கிணற்றுக்குள் வீழ்ந்திருக் கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தி சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

(4.8)

## சிறுமியைக் கடத்தி வன்புணர்ந்தவருக்கு 17 வருடங்கள் கடூழியச் சிறை

### *5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் யாழ்ப்பாண மேல்நீதிமன்று உத்தரவு*

யாழ்ப்பாணம், நவ. 13

சிறுமியைப் பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று வன்புணர்ந்தவருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று 17 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித் தது.

இந்த வழக்கு தீர்ப்புக்காக மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னையில் நேற்று எடுக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களுடன் இரவு தூங்கிக்கொண்டு இருந்த வேளை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சிறுமியைக் கடத்திச் சென்றார். வீட்டிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கேணியடியில் சிறுமியை வன்புணர்ந்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி ஒரு மாத காலமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். விசாரணை நடத்திய சாவகச்சேரிப் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. வழக்குக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது.

பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து சிறுமியைக் கடத்திச் சென்றமை மற்றும் வன்புணர்ந்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுகள் சுமத்தி வழக்குத் தொடர்ந்த. சட்டமா அதிபர் திணைக்களம் மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்தது.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முற்பட்டுச் சாட்சியங்களை நெறிப்படுத்தினார். சந்தேகநபரைக் குற்றவாளியாகக் கண்ட மேல்நீதிமன்று கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

கடத்திச் சென்ற குற்றத்துக்காக 5 வருடங்களும் வன்புணர்ந்த குற்றத்துக்காக 12 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தது.

10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. அதனைச் செலுத்தத் தவறின் 10 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடுவழங்கவேண்டும். வழங்கத் தவறின் மேலும் 10 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று மேல்நீதிமன்று தீர்ப்பளித்தது.

(4.37)

## கிளிநொச்சி நகரின் பல இடங்களில் தேக்கம் குற்றிகள் பறிக்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி, நவ. 13

கிளிநொச்சி நகரின் பல இடங்களிலும் தேக்கு மரக் குற்றிகள் பல நேற்று அதிகாலை பறிக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தின் புற நகர்ப் பகுதியான திருவையாறு கிராமத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் நான்கு சந்திகளில் தேக்கம் குற்றிகள் பறிக்கப்பட்டிருந்தன.

நாட்டில் தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்த நிலையில், படையினர் காவலரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனரா என்பது உட்பட பல கேள்விகள் பொதுமக்களிடம் எழுந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அவற்றைக் கொண்டு சென்ற மரக்கடத்தல்காரர்கள் பொலிஸாரிடமிருந்து தப்பிக்க பறித்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வனவளத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "தமக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மரங்கள் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்று தெரிவித்தனர்.

(4.105)

## தொல் திருமாவளவன் முல்லைக்குப் பயணம்

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகளில் கலந்துகொண்டபின்னர் அவர் நேற்றுமுன்தினம் அங்கு சென்று வட்டுவாகலில் மீனவர்களைச் சந்தித்ததோடு முள்ளிவாய்க்காலில் சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தியுள்ளார்.

(4.ரி3)

# நறுவிலிக்குளம் மைதானத்தில் அகழ்வாராய்ச்சிகள் ஆரம்பம்

## முன்னர் துறைமுகப்பட்டினமாக இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது

மன்னார், நவ. 13

மன்னார் நறுவிலிக்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த இடம் மாந்தைக்கு நிகரான துறைமுகப்பட்டினமாக முன்னர் செயற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றும் தொல்பொருள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.



தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியிருந்த நிலையில் அங்கு அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2016இல் மன்னார் மாவட்டத்துக்கென நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் அமைக்க நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட நறுவிலிக்குளம் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டு கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அதில் பார்வையாளர் அரங்கு, நீச்சல் தடாகம் உள்ளடங்கும் வகையில் மைதானத்துக்கான ஓடுதளம் அமைப்பதற்குப் நிலம் தோண்டும்போது பழங்காலத்து மட்பாண்டங்கள் வெளிவந்தன.

தொல்பொருள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அங்கு சென்ற தொல்பொருள் திணைக்களத்தினர் தொல்பொருள் சான்றுகள் நிறைந்துள்ளன என்றும் அவற்றை அகழ்ந்தெடுக்க வேண்டும் என்றும் கூறி விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதித்திருந்தனர்.

பல மாதங்களாக மைதானத்தில் கட்டுமானப் பணிகள் இன்றியும், தொல்பொருள் ஆரா ய்ச்சி இன்றியும் இருந்தது.

இந்த நிலையில், கடந்த 29ஆம் திகதி அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டதாகப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மிகப்பழங்காலத்து மட்பாண்டங்கள் இரும்பு கலந்த மணல், பொன் நிறம் கொண்ட கற்கள் போன்றன அங்கு மீட்கப்பட் டுள்ளன. இங்கு முன்னர் மக்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் வியாபாரிகளா அல்லது பூர்வீகக் குடிகளா என்ற முடிவுக்கு வர இயலாது. ஆனால், இந்த இடங்களின் சுற்றுப்புறச் சூழலிலுள்ள பெரும் அகழிகளைப் பார்க்கும்போது மாந்தைக்கு நிகரான துறைமுகப்பட்டினமாக செயற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது - என்று மேலும் தெரிவித்தனர்.

(4,213)

# கால்நடைகள் திருடப்படுவது செம்பியன்பற்றில் தாராளம்

## சந்தேகநபர்களை அடையாளங்காட்டியும் கைதுசெய்யாததால் பொலிஸ் மீது சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ. 13

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கு, மாமுனைக் கிராமங்களில் ஆடுகள், மாடுகள் என்று 50 கால்நடைகள் களவாடப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டில் சிலரைப் பொதுமக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தபோதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்

சாட்டப்படுகி றது.

சந்தேகநபர்களுடன் பொலிஸார் நல்லுறவைப் பேணுவது, கையூட்டுப் பெறுவது என்பனவற்றால்தான் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லையா என்றும் பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.

போரின் பின்னர் மீள்குடியேறிய செம்பியன்பற்று தெற்கு மக்களின் முதன்மைத் தொழிலாகவும் வாழ்வாதாரமாகவும் விவசாயமே விளங்குகின்றது.

விவசாயத்துக்குத் துணைபுரியும் கால்நடைகளையும் அவர்கள் வளர்க்கின்றனர்.

காளை பசு, கன்று என்றவாறு இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட மாடுகள், இருபதுக்கும் மேற்பட்ட ஆடுகள் திருடப்பட்டு, இறைச்சியாக்கப்பட்டுள்ளன என்று கால்நடைகளைப் பறிகொடுத்தோர் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளைத் திருடியவர்களை இனங்கண்டு பளைப் பொலிஸாருக்கு முறையிட்டபோதும் இதுவரை எதுவித சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சாட்சிகள் இருந்தும் பொலிஸார் சந்தேநபர்களைக் கைது செய்யாததும் சட்ட நடவடிக்கை எடுக்காததும் ஏன்? பொலிஸாருக்கும் திருடர்களுக்கும் தொடர்பு உள்ளது என்றுதான் தாம் சந்தேகிக்கவே ண்டியுள்ளது என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்ற னர்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் 40 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான காளை மாடு காணாமற் போனது. அதனைத் தேடிச்சென்றபோது ஆள்நடமாட்டம் குறைந்த செம்பியன்பற்று தெற்கில் காளை மாட்டின் நான்கு கால்கள் காணப்பட்டன. பன்றி வாட்டப்பட்டதற்கான தடயங்களும் காணப்பட்டன.

பொதுமக்கள் பிடித்த சந்தேகநபரிடம் விசாரித்தபோது, தான் இரண்டு பன்றிகளையே வாட்டியதாகவும் மாட்டின் கால்களைப் போடவில்லை எனவும் கூறியுள்ளார். ஆனால் சந்தேகநபரின் கிராமமான குடாரப்பில் உள்ள அவரது வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் காட்டுக்குள் காளையின் தலை, தோல், கயிறு என்பன காணப்பட்டன.

அங்கு நான்குபேர் மாடு வெட்டுவதைக் கண்ட ஒருவரின் தகவலின் அடிப்படையில் காளையின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணாமற்போன காளை தொடர்பில் கிராம அலுவலகம், பிரதேசசெயகம், பளை பொலிஸ் நிலையம் என்பனவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பளை பொலிஸார் இனிமேலாவது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோருகின்றனர்.

(4,26,160)

# இளஞ்சைவப்புலவர் சைவப்புலவர் பரீட்சைகளுக்கு, விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், நவ. 13

2019 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

சைவபரிபாலன சபை நடத்தும் சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை (இந்துசமயம் அல்லது இந்துநாகரிகம் உட்பட) சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களைக் கடைப்பிடித்துவரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தேர்வு அல்லது சித்தாந்தபண்டிதர் தேர்வு (சைவபரிபாலனசபை) அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் இறுதி வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சித்திரை மாதம் முதல் வாரத்தில் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 0212223458 அல்லது 077613216 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

(4)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# கிழக்கு மக்களுக்கு உதவிப் பொருள்கள் யாழ். பல்கலை மாணவர்கள் வழங்கினர்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

'கிழக்குக்கான உறவுப்பாலம்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய இடங்களிலும் உதவிப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

அவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் வழங்கினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் கிருஷ்ணராஜா கிருஷ்ணமேனன் தலைமையில் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் அவற்றை வழங்கினர்.

நூடில்ஸ், பிஸ்கட், சீனி, தேயிலை, பால்மா, கச்சான் பிஸ்கட், கல்பணிஸ், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, சவர்க்காரம், கைக்குழந்தைகளுக்கான ஆடைகள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் உதவிப் பொருள்களை வழங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(4)

# பசுக்களைப் பாதுகாக்கும் பிரதேச சபைகளுக்கான மதிப்பளிப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ. 13

பசுக்களைக் கொல்லாது பாதுகாக்கும் பிரதேச சபைகளைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. ஆவினப் பாதுகாப்புச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் முன்றலில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சின்மயாமிசனின் சிதாகானந்த சுவாமிகள், சிவாச்சார்யமணி சிவசிறி வி. பாலகுமாரக்குருக்கள், சிவ சண்முகம்ஐயா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

பசுக்களைப் பாதுகாக்கும் சகலசமயநிறுவனங்களின் இயக்குநர் கோகுலப் புரவலர் லயன் கு.கங்கைவேணியன், மறவன்புலவு சச்சிதானந்தம், சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயம்சார் சீர் திருத்த உத்தியோகத்தர், பசுக்காவலன் க.ரஜனிகாந்தன், சைவ பரிபாலன சபையின் பொருளாளர் சிவத்திரு வி.தயாபரன், பசுக்களைப் பாதுகாக்கும் சகலசமயநிறுவனங்களின் செயலர் சிவத்திரு ப.சிவலோகநாத தேசிகர் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கவுள்ளனர்.

நல்லூர், வேலணை, காரைநகர், மத்துகம, வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச சபை ஆகியவற்றின் முக்கியஸ்தர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## மக்களாட்சியின் மாண்பு இன்று தெரிந்துவிடும்!

நாடாளுமன்றத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலைத்தமை சரியா பிழையா என்கிற வாதம் முற்றுப் பெறுவதற்கிடையில் சுயாதீனமான தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரம் அவசரமாக தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளருக்குப்பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவொரு மோசமான நிலமை, சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தமைக்கான அர்தத்தையே இல்லாமல் செய்துவிட்டது இந்த நடவடிக்கை.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல்கள் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். கட்சிகளின் செல்வாக்குக்கு, குறிப்பாக ஆளும் கட்சிச் செல்வாக்குக்கு உட்பட்டு தேர்தல்கள் நடத்தப்படக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டே சுயாதீனமான தேர்தல்கள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

அரச தலைவரின் திடீர் நடவடிக்கை காரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் தலைமை அமைச்சர் பதவி நீக்கப்பட்டு புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டதும் அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், அரச தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலை நடத்துமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் பதவி விலகுவது என்று முடிவு செய்திருந்தனர். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால் தேர்தல்களை நடத்துவது சட்டச் சிக்கலான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டுவிடும் என்கிற அச்சம் காரணமாகவே ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அவசரமாகத் தேர்தல்கள் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன என்று கூறப்படுகின்றது.

ஆணைக்குழுவின் தலைவரும் மற்றொரு உறுப்பினரும் இதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ளனர். ஒரு உறுப்பினர் மட்டும் அதில் கையெழுத்திடவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு தனக்கு வழங்கப்பட்ட கடமையில் இருந்து நழுவிக்கொண்டு, அரச தலைவரால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள மக்களாட்சித் தத்துவத்தை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

நெருக்கடியான நிலமைகளில் அரசியல்வாதிகள் தங்கள் சுயநலன்களுக்காக நாட்டைத் தவறான பாதையில் வழிநடத்துவதைத் தடுப்பதற்காகத்தான் சுயாதீன ஆணைக்குழுக்களே நியமிக்கப்படுகின்றன. அப்படி மக்கள் ஆணையின் மூலம் தேர்தல்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட சுயாதீனத் தன்மையை அடகு வைக்கும் விதத்தில் ஆணைக்குழு செயற்பட்டமை கண்டனத்திற்குரியது.

இப்போது ஆணைக்குழுவின் மீதான நம்பிக்கையும் அற்றுப்போக, மக்களாட்சித் தத்துவத்தின் மீதான நம்பிக்கை உயர் நீதிமன்றம் வழங்கப் போகும் தீர்ப்பிலேயே தொங்கிக் கொண்டிருக்கிறது. அரச தலைவரின் செயலுக்கு எதிராக நேற்றுமட்டும் 17 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 11 மனுக்கள் நேற்று விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில் எஞ்சியவை இன்று விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இன்று இது தொடர்பான தீர்ப்பை உயர் நீதிமன்றம் தரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் 70 வருடப்பாரம்பரியம் கொண்ட மக்களாட்சியின் மாண்பு நிலைநாட்டப்படுமா, அல்லது அரசியல்வாதிகளின் சுயநலன் கருதிய செயற்பாடு மட்டுமே முதன்மை பெற்று மக்களாட்சித் தத்துவம் கேலிக்குள்ளாக்கப்படுமா என்பது இன்று தெரிந்துவிடும்.

# மைத்திரி மாறிவிட்டார் மக்கள் மாறுவார்களா...?

சி. சற்குரு



இலங்கையின் தற்போதைய அரச தலைவரும் முன்னாள் அரச தலைவரும் இணைந்து பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். முன்னாள் அரச தலைவரைத் தோற்கடிக்க வேண்டும் என்றிருந்த மக்களின் முனைப்பே தற்போதைய அரச தலைவருக்கு நாட்டின் அரச தலைவர் என்கிற ஆசனத்தை வழங்கியிருந்தது. மக்களைப்போலவே அப்போது முன்னாள் அரச தலைவருக்கு எதிராக இருந்திருந்தார் தற்போதைய அரச தலைவர். (மன்னிக்க வேண்டும்... எதிராக இருப்பதுபோல பாசாங்கு செய்திருந்தார்.) இந்தப் பாசாங்கு காரணமாகத் தேர்தலில் வெற்றி ஈட்டிய தற்போதை அரச தலைவர். முன்னாள் அரச தலைவரைத் தற்போது ஆட்சிப் பீடத்தில் ஏற்றியிருக்கிறார். அதாவது மக்களின் விருப்புக்கு அப்பாற்பட்டவரை அரச தலைவர் தன்னுடைய அதிகாரத்தின் மூலம் பதவியில் அமர்த்தி இருக்கிறார். அந்த நிலமை ஐக்கியதேசியக் கட்சி - சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்ததால் நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கிறார். இதனால் மறுபடியும் மக்களின் தீர்ப்பிடலுக்கு வந்திருக்கின்றது இந்த விவகாரம்.

மகிந்த மற்றும் தன்னுடைய கட்சிக் காரர்களோடு மாத்திரமன்றிச் சட்ட நிபுணத்துவம் பெற்ற பலருடனும் அவர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களின் முடிவிலேயே சட்ட நியாயப்பாடுகளுக்கு இயைந்துபோகும் வகையில் மகிந்த ராஜபக்சவைப் பதவியிலமர்ந்துவதான அவருடைய 'ஜனநாயக விரோத' (மக்களால் தெரிவு செய்யப்படாத தலைமை அமைச்சர்). தூரநோக்கை நகர்த்திக்கொண்டிருக்கிறார்.

### மைத்திரி - மகிந்தவின் வெற்றிக் கனிக்கான பாய்ச்சல்

அரச தலைவர் மைத்திரிபாலவால் முன்னாள் அரச தலைவர் மகிந்தவை ஆட்சியில் தக்க வைப்பதற்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததாலேயே தற்போது நாட்டு நிலமை இப்படியாகியிருக்கிறது. தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்த அரச தலைவராலும், அவரால் நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சரான மகிந்த ராஜபக்சவாலும் அவர்கள் இருவருக்கும் முன்பாக இருந்த அடுத்த தடைக்கல்லைத் தாண்ட முடியவில்லை. நாடாளுமன்றில் மகிந்த ராஜபக்ச பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி எழுந்த கடப்பாட்டை அவர்களால் வெற்றியீட்ட முடியவில்லை. பேரம் பேசல்கள், கட்சி தாவுதல்கள், அமைச்சுப் பதவிகள் என அவர்கள் எடுத்த அத்தனை முயற்சிகளாலும் கூட நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு அவர்களால் முடியாது இருந்தது. இதனால் தெளிவாக அவர்களின் தோல்வி உணரப்பட்டது. மைத்திரி - மகிந்த அணி அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகியது. நாடாளுமன்று கலைக்கப்பட்டது. ஆனால், சூட்சுமமாக ஒரு விடயம் நடந்தேறியுள்ளது. தற்போது நாட்டில் காபந்து ஆட்சி ஊர்ந்து கொண்டிருப்பதை எல்லோரும் கவனித்தாகவேண்டும். அந்த ஆட்சியைத் துரும்பாகக் கொண்டு மைத்திரி - மகிந்த அணி நிலைப்பதற்கான அடுத்தடுத்த வேலைத்திட்டங்கள் திரைமறைவில் அரங்கேற்றப்படலாம்.

### கவனிக்கத்தக்க இரண்டு விடயங்கள்

நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்துவதற்கு அரச தலைவர் உத்தரவிட்டிருக்கிறார். சட்ட வரைமுறைகளின்படி தேர்தலை நடத்த முடியுமா? என்பதற்கான விடையைக் காண்பதற்காக இந்த விடயத்தை நீதிமன்றத்தின் மூலம் தீர்மானிப்பதற்குத் தேர்தல் திணைக்களம் உறுதி பூண்டிருக்கிறது. இதன்படி நடக்கப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தேர்தல் திணைக்களம் எவ்வாறு எதிர் கொள்ளப்போகின்றது? அதன் உறுதிப்பாடு எப்படியிருக்கப்போகின்றது? என்கின்ற விடயங்களும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைப் பதவியிலிருந்து ஓரம் கட்டிய மக்கள் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபாலவைப்போல மனம் மாறியிருப்பார்களா? என்கிற விடயமும் கவனம் பெறுகின்றன.

### மக்களின் முடிவு திசை மாறினால்...

மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக்கியது முதல் நாடாளுமன்றைக் கலைத்தது வரையில் தனக்குண்டான அதிகாரத்தின் படியே தாம் நடப்பதாக அரச தலைவர் உடனுக்குடன் அது பற்றி அறியத்தந்து கொண்டிருக்கிறார். அத்தோடு மகிந்த மற்றும் தன்னுடைய கட்சிக் காரர்களோடு மாத்திரமன்றிச் சட்ட நிபுணத்துவம் பெற்ற பலருடனும் அவர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற கலந்துரையாடல்களின் முடிவிலேயே சட்ட நியாயப்பாடுகளுக்கு இயைந்துபோகும் வகையில் மகிந்த ராஜபக்சவைப் பதவியிலமர்ந்துவதான அவருடைய 'ஜனநாயக விரோத' (மக்களால் தெரிவு செய்யப்படாத தலைமை அமைச்சர்). தூரநோக்கை நகர்த்திக்கொண்டிருக்கிறார். இயன்றவரையில் அவர் அதை நூதனமாக நகர்த்தி வருவதும் தெரிகிறது. மைத்திரிபால - மகிந்த ராஜபக்ச புதிய அணியால் நாடாளுமன்று கலைக்கப்படுவதற்கு முன்பாக நள்ளிரவுடன் வழங்கப்பட்ட, மாற்றியமைக்கப்பட்ட சில அதிகார பீடங்கள் தேர்தலில் செல்வாக்குச் செலுத்துவதற்கான முன்னாயத்தங்களே அந்த நகர்வுகள். மைத்திரிபாலவைப் போல் மக்கள், மகிந்த விடயத்தில் மனம் மாறுவதற்கான சர்ந்தர்ப்பங்கள் அரிதாகவே இருக்கின்றன. இத்தகைய அரிதான சர்ந்தர்ப்பங்களில் இனிக் காபந்து அரசால் புகுத்தப்படுகின்ற சூழ்ச்சிகள் மக்களை வென்று மகிந்தவை ஆட்சியிலமர்த்தலாம். இலங்கையின் 'ஜனநாயக' விடயத்தில் இது ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக ஒருபோதுமே பதிவாகாது என்றும் எதிர்பார்க்கலாம்.

“தமிழ் மக்கள் தனக்குச் செய்த உதவிக்குப் பதிலுதவி செய்வேன்” என்று அவர் தொடர்ந்து தெரிவித்து வந்தார். அவரின் ‘பதிலுதவி இதுதான்’ என்று அப்பாவித் தமிழர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

# துரோகிகள் வாழ்ந்ததில்லை

பிரகாஸ்

இலங்கை அரசியல் உச்சக்கட்ட கொதிநிலைக்குச் சென்றுள்ளது. சிறுபான்மை மக்களின் மீட்பராகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது பாதையில் இருந்து 180 டிகிருக்குத் திரும்பி நேரெதிர்த் திசையில் சென்றுகொண்டிருக்கிறார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன் கைகோர்த்தது மட்டுமல்லாமல் அதன் பின்னர் தொடர்ச்சியாக, ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு ஜனநாயகப் படுகொலைகளைச் செய்துகொண்டிருக்கிறார். சர்வதிகாரத்தின் உச்சக்கட்டமாக நாடாளுமன்றத்தையும் கலைத்துள்ளார் அவர்.



**அன்றைய வாக்குறுதி**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் மகிந்தவை எதிர்த்துக் களமிறங்கியபோது அவரைச் சிறுபான்மை மக்கள் தமது மீட்பராகவே கருதினார்கள். மகிந்தவிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவும் மைத்திரி என்கிற பொது வேட்பாளருக்கு தமது பெறுமதிமிக்க வாக்குகளை அள்ளி வழங்கியிருந்தார்கள்.

தமிழ் மக்களின் வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரி தனது வெற்றி சிறுபான்மை மக்களால்தான் கிடைத்தது என்பதை ஏற்பதற்குத் தவறவில்லை.

“தோ்தலில் தோல்வியடைந்திருந்தால் தான் சாவடைந்திருக்கலாம்” என்று அவர் வெளிப்படையாக ஏற்றிருந்தார். ஆக, தான் இன்று உயிரோடு இருப்பதற்குத் தமிழர்கள்தான் காரணம் என்பதை அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த சில தினங்களில் மைத்திரிபால சிறிசேன ஏற்றிருந்தார்.

**தொடர் ஏமாற்றங்கள்**

மைத்திரியை அரச தலைவராகத் தமிழ் மக்கள் அரியணை ஏற்றியமையின் பின்னணியில் இன்றியமையாத சில எதிர்பார்ப்புக்கள் இருந்தன. வடக்கு - கிழக்கு இணைப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலை, காணி விடுவிப்பு, பௌத்த மயமாக்கலைத் தவிர்ப்பது, இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், போர்க் குற்றம் தொடர்பான விசாரணைகள் என்பனவே அந்த எதிர்பார்ப்புக்கள். இவை நிறைவேற்றப்படும் என்று கால அவகாசங்களை மட்டுமே தமிழ் மக்களுக்கு மைத்திரி தந்துவந்தார்.

"தமிழ் மக்கள் தனக்குச் செய்த உதவிக்கு பதிலுதவி செய்வேன்" என்று அவர் தொடர்ந்து தெரிவித்து வந்தார். அவரின் 'பதிலுதவி இது தான்' என்று அப்பாவித் தமிழர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

**உள்ளூராட்சித் தேர்தலும் மைத்திரியில் மாற்றங்களும்**

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன மிகப்பெரும் வெற்றியைப் பெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அடுத்தளவில் ஆதிக்கம் செலுத்தியது.

ஆனால் அரச தலைவரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்தது. இந்தத் தோல்விதான் இலங்கையின் நிகழ்கால அரசியல் குழப்பத்துக்கு அத்திபாரம் என்று சொல்லிக்கொள்ளலாம். கட்சியைக் கட்டிக் காக்கும் வகையில் மைத்திரி மேற்கொண்ட நகர்வுகள் அவரதும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானதுமான கூட்டு அரசில் குழப்பத்தை ஏற்படுத்தின. இந்தக் குழப்பம் படிப்படியாக வலுப்பெற்றது, விரிவடைந்தது காலவோட்டத்தில் பிளவடைந்தது.




**மகிந்தவின் பக்கம் தாவல்**

அரச தலைவருடனான முரண்பாட்டை அடுத்து கூட்டு அரசில் இருந்து ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி விலகியதை அடுத்து மகிந்தவைத் தலைமை அமைச்சராக நியமித்தார் மைத்திரி.

இது தமிழர்களுக்கு அவர் செய்த பச்சைத் துரோக மும் கூட. எவரை ஆட்சிப்பீடத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்று தமிழர்கள் கட்டளையிட்டார்களோ; எவரை ஒதுக்க வேண்டும் என்று தமிழர்கள் ஒருவிரல் புரட்சியை நடத்தினார்களோ, எவருக்குப் பதிலாக எவரை தமிழர்கள் தெரிவுசெய்தனரோ அவர்கள் இருவரும் ஒருமித்துக் கொண்டனர்.

அதன் பின்னர் இன்றுவரை நடந்தது, நடப்பது அனைத்தும் ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு முரணான நகர்வுகள்.

ஆக, தமிழர்களின் முதுகில் பலமுறை குத்திவிட்டார் மைத்திரி. ஏகப்பட்ட ஏற்க முடியாத துரோகங்களை இழைத்துவிட்டார். இதைத்தான் 2015ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரையின் போது "தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசே மேல்" என்று மகிந்த சொன்னாரோ என்னமோ....

## ஆசிரியருக்கான கடிதம்

# யாழ்ப்பாண மக்கள் திருந்த மாட்டார்களா?

இன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்கள் பல விதங்களிலும் தவறாக நடந்து கொள்கின்றனர்.


இவர்களின் தகாத செயற்பாடுகளை ஒவ்வொன்றாகப் பட்டியலிட்டுப் பார்த்தால் அது நீண்டு கொண்டே போகும். எனது சிற்றறிவுக்கு எட்டி இரண்டு விடயங்களை இந்தப் பகுதியில் குறிப்பிட விரும்புகிறேன்.

வீதியில் நடந்து போகும்போது வீதியின் ஓரப்பக்கமாகவே நடக்க வேண்டும். அப்போதுதான் ஏனையவர்களும் தமது போக்குவரத்தை இடையூறுகள் இல்லாமல் மேற்கொள்ள முடியும். ஆனால், இங்கே நிலமை அவ்வாறில்லை. உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் - பெருமாள் கேவில் அமைந்திருக்கின்ற மணிக்கூட்டு வீதியூடாகத் தனியார் கல்வி நிலையங்களுக்கு நடந்து செல்கின்ற மாணவ, மாணவிகள் ஒரே வரிசையில், சமாந்தரமாக மூன்று, நான்கு பேர் நடப்பதுடன், அது பற்றிய எவ்வித சலனமும் இன்றி தமக்குள் உரையாடியபடி சாதாரணமாகச் செல்கின்றனர். இதனால், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் அவர்களைக் கடந்து அப்பால் செல்வதற்கு நடுவீதிக்கு வாகனத்தை நகர்த்தவேண்டியிருக்கிறது. அந்தச் சமயம் பார்த்து எதிராகவும் வாகனம் ஒன்று வந்துவிடுவதாக இருந்தால் அவ்விடத்தில் தடுமாற்றமும் விபத்தும் ஏற்பட்டுவிடும். இதனால் இந்த வீதியால் பயணிக்கின்ற என்போன்ற முதியவர்கள் தத்தமது சைக்கிள்களை உருட்டியபடி செல்வதை அவதானிக்க முடிந்தது. வீதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செல்பவர்கள் எதிர்ப்புறத்திலிருந்து மிக வேகமாக வந்து அவர்களுக்கு எதிர்த் திசையில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கின்ற என்போன்ற சைக்கிள் ஓட்டுநர்களை ஊடறுத்துச் செல்கின்றனர். மட்டுமன்றி ஒரேதிசையால் எமக்குப் பின்பாக வருகின்ற இத்தகைய மோட்டார் வாகன ஓட்டுநர்களும் திடீரட்டியனவாய் முன்புறமாக வந்து எம்மை ஊடறுத்து சிறுவீதிகளுக்குள் வேகமெடுக்கின்றனர். அத்தோடு சிறு வீதிகளுக்குள் இருந்து முதன்மை வீதிக்கு வரும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும் நின்று நிதானித்துப் பார்ப்பதில்லை. வந்த வேகத்தில் முதன்மை வீதியில் மோட்டார் சைக்கிளை ஏற்றிப் போக்குவரத்துக்கு இடையூறளிக்கின்றனர். வேகமாக வருவதுடன், தமது புறச்சூழலை அறியாது சடுதியாகத் தாம் மனதுக்குள் முடிவெடுத்துச் செயற்படுவது விபத்துகளுக்கு வழிகோலுகின்றது. இவர்கள் எப்போதுதான் திருந்தி நடப்பார்கள்?

**இராசையா ஸ்ரீதரன்**

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் விடயங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகை யால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! ஆனால், மேற்குறித்த விட யங்களைத் தவ றாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



ஸ்ரோபெரிப் பழத்துக்குள் ஊசி விவகாரம்

# 50 வயதுப் பெண் ஒருவர் கைது!

சிட்னி.நவ.13

ஸ்ரோபெரிப் பழங்களை நவீன சந்தைகளில் வாங்கிச் சென்று சாப்பிட்டவர்கள் தொண்டையிலும், வயிற்றிலும் ஊசி சிக்கி அவதிப்பட்டிருந்தனர்.

மேலும், பலர் ஸ்ரோபெரிப் பழங்களைச் சாப்பிடும் போது, அதில் ஊசி இருப்பதையும் கண்டுபிடித்தனர். ஆஸ்திரேலியாவின் சவுத்வேல்ஸ், குயின்ஸ்லாந்து, விக்டோரியா மாநிலங்களில் உள்ள நவீன சந்தைகளில் விற்பனையான ஸ்ரோபெரிப் பழங்களில் ஊசி இருந்ததாகவும் ஊடகங்களில் செய்தி வெளியாகிச் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன.

ஆண்டுக்கு 116 மில்லியன் டொலர்களைப் பெற்றுத் தரும் ஆஸ்திரேலிய ஸ்ரோபெரி ஏற்றுமதி, பழங்களில் ஊசியை மறைத்துவைத்திருப்பதாக எழுந்த முறைப்பாடுகளை அடுத்து ஆட்டம் கண்டது. இதைத் தொடர்ந்து ஏராளமான நவீன சந்தைகள், நாடுகள் ஸ்ரோபெரி வாங்குவதை நிறுத்தின. இதனால் ஸ்ரோபெரி உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இதனையடுத்து ஸ்ரோபெரி பழத்தில் ஊசியை மறைத்து வைப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்கொட் மோரிஸன் எச்சரித்திருந்தார்.

பழத்தில் ஊசி வைப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்குக் காவல் துறையினர் தீவிர விசாரணையில் இறங்கினர். தற்போது ஸ்ரோபெரிப் பழத்தில் ஊசியை மறைத்து வைத்திருந்ததாக 50 வயதுப் பெண்ணை ஆஸ்திரேலியக் காவல்துறை கைது செய்துள்ளது. இதுகுறித்து குயின்ஸ்லாந்துப் பொலிஸ் தலைவர் ஜோன் வாக்கர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "அதிக தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட வழக்குகளில் இதுவும் ஒன்று" என்றும் கைது செய்யப்பட்ட பெண், ஸ்ட்ராபெரி வர்த்தகத்தின் முக்கிய நிறுவனம் ஒன்றின் முன்னாள் ஊழியர் என்றும் குறிப்பிட்ட அவர், குற்றம் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

**பின்னணி**

ஆஸ்திரேலியாவின் சந்தைகளில் விற்பனையாகின்ற ஸ்ட்ரோபெரிப் பழங்களில் சிலர் மெல்லிய ஊசியை நுழைத்து மறைத்துவிடுவதாகத் தகவல்கள் பரவியிருந்தன. ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சந்தைகளில் வாங்கிச் சென்று சாப்பிட்ட 3க்கும் மேற்பட்டவர்களுக்குத் தொண்டையிலும், வயிற்றிலும் ஊசி சிக்கிப் பெரும் அவதிக்குள்ளானார்கள். மேலும், பலர் ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சாப்பிடும் போது, அதில் ஊசி இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் சமூகவலைத்தளங்களில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்திருந்தனர். ஸ்ட்ரோபெரிப் பழத்துக்குள் ஊசியை மறைப்பது தீவிரவாதச் செயல். இந்தச் செயலைச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனையாக 15ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வகை செய்யப்படும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் எச்சரிக்கை செய்திருந்தார். பின்னர் நியூசிலாந்தில் விற்கப்பட்ட ஸ்ரோபெரிகளில் குண்டூசிகள் இருந்தமையானது, வாடிக்கையாளர்களை அச்சத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது. ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்ரோபெரிகள் இவை என்பதால் இறக்குமதி நிறுத்தப்பட்டது. தொடர்ந்து சிங்கப்பூரில் பழங்களை இறக்குமதி செய்யும் ஒரு பிரபல நிறுவனமும் இதைக் கண்டுபிடித்தது. அதுவும் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொண்டது. இந்தப் பின்னணியில்தான் இந்த வழக்கில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஸ்ரோபெரிப் பழத்துக்குள் ஊசியை மறைத்து வைப்பது தீவிரவாதச் செயல். இந்தச் செயலைச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனையாக 15ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வகை செய்யப்படும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்காட் மோரிஸனும் சில நாள்களுக்கு முன்பு எச்சரித்திருந்தமை நினைவுகூரத்தக்கது.

# ட்ரம்ப் மேற்கொண்டிருந்த பிரான்ஸுக்கான பயணத்தில் பரபரப்பு

## மேலாடையைக் கழற்றி எறிந்து இளம் பெண்கள் இருவர் போராட்டம்



பாரிஸ்.நவ.13

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பிரான்ஸ் தலைநகர் பாரிஸுக்குப் பயணமாகியுள்ளார். பாரிஸில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது வாகன அணிவகுப்பு முன்பாக இளம் பெண்கள் இரண்டு பேர் தமது மேல்டையைக் கழற்றி எறிந்து அரை நிர்வாணமாக ஓடி வந்து போராட்டம் நடத்தியுள்ளனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் செயல்படுத்தி வரும் பல்வேறு கொள்கைகளுக்கு உலகம் முழுவதுமே எதிர்ப்பு நிலவி வருகிறது. வெளிநாட்டுத் தொழிலாளர்கள், அகதிகளுக்குக் கெடுபிடி, மூன்றாம் பாலினத்தவர்கள் உள்ளிட்டவர்வகளுக்குக் கட்டுபாடு, குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை உள்ளிட்ட நடவடிக்கைகள் அவருக்கு உலகம் முழுதும் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தி இருக்கின்றன. இந்த நிலையில், பிரான்ஸுக்குப் பயணம்ாகியுள்ள ட்ரம்ப், பாரிஸ் நகரில் நடந்த முதல் உலகப்போர் நினைவு தினத்தில் பங்கேற்றார். பாதுகாப்பு வாகனங்கள் புடை சூழ அவரது வாகனம் பாரிஸ் நகருக்குள் நுழைந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென இளம் பெண் ஒருவர் தனது மேலாடையைக் கழற்றி வீசியபடி ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோஷங்களை எழுப்பினார். அவரைத் தொடர்ந்து மேலும் ஒரு பெண் அதேபோன்று மேலாடையைக் கழற்றி எறிந்தவாறு அங்கே ஓடி வந்தார்; உடனடியாகப் பிரான்ஸ் பொலிசார் அவரைச் சுற்றி வளைத்தனர். ஆனால், பிற்பாடு ஓடி வந்த இளம் பெண் பொலிசாரின் பிடியில் சிக்காமல், நிர்வாணத்துடன் கீழே விழுந்துபடி தொடர்ந்து கோஷம் எழுப்பினர். பின்னர் பொலிசார், அவரையும் சுற்றி வளைத்துக் கைது செய்தனர். இதனால் ட்ரம்ப்பின் வாகன அணிவகுப்பில் பதற்றம் ஏற்பட்டது. ட்ரம்ப்பின் பிரான்ஸ் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிஸ் பெண்ணிய இயக்கங்கள் போராட்டங்களை அறிவித்து இருந்தன. நிர்வாணப் போராட்டம் நடத்திய பெண்கள் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. ட்ரம்ப் வருகையையொட்டிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைபாடு இருந்ததாகவும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

**உலகப்போர் நினைவு நிகழ்வு**

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் உள்ள 'ஆர்க் டி டிரியோம்பே' போர் நினைவுச் சின்னத்தில் உலகில் உள்ள கிட்டத்தட்ட 70 நாடுகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் நேற்று அஞ்சலி செலுத்துவதற்காகத்திரண்டிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவே அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்போர்நினைவுச்சின்னத்துக்குப் பலத்த பாதுகாப்புடன் மகிழுந்தில் பயணித்துக் கொண்டிருந்தார். அவரது மகிழுந்துக்கு முன்னும் பின்னுமாகப் பாதுகாப்புத் தரப்பினர் மகிழுந்துகளில் வந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில்தான் வீதியோரத் தடுப்புக்களைத் தாண்டிக் குதித்த குறித்த இரண்டு பெண்களும் டிரம்ப்பின் மகிழுந்து அணிவகுப்புக்குக் குறுக்கே மேலாடை இல்லாமல் சென்று எதிர்ப்புக் கோசங்கள் எழுப்பியுள்ளனர்.

# லண்டன் ஆலயத்தில் கிருஷ்ணர் சிலைகள் கொள்ளை

## தீபாவளித் தினத்தன்று இந்துக்களுக்கு அதிர்ச்சி

லண்டன்.நவ.13

லண்டனில் உள்ள புகழ்பெற்ற சுவாமிநாராயன் கோயிலில் இருந்த 50 ஆண்டுகாலப் பழமையையுடைய கிருஷ்ணர் சிலைகள் தீபாவளித் தினத்தன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து, சிலைகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஸ்கொட்லாந்துப் பொலிசார் ஈடுபட்டு வருகின்றனர். லண்டனின் புறநகரான நியாஸ்டன் நகரில் வில்லஸ்டேன் லேன் பகுதியில் புகழ்பெற்ற சுவாமிநாராயன் கோயில் அமைந்துள்ளது. இது 1995ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இங்கிலாந்தின் முதல் இந்து கோயிலாகவும், ஐரோப்பாவில் முதல் பாரம்பரியக் கற்கோயிலாகவும் இந்தக் கோயில் உள்ளது. இங்கு



நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். இந்த நிலையில், தீபாவளிப்பண்டிகைக் கொண்டாட்டம் முடிந்து மறுநாள் கோயில் திறக்கும்போது, 50 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக அங்கிருந்த கிருஷ்ணர் சிலைகள் காணாமல் போயிருக்கின்றமை தெரியவந்துள்ளது. கோயில் நிர்வாகிகள் உடனடியாகப் பொலிசாருக்குத் தகவல் அளித்தனர். அங்கு விரைந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கோயிலின் தலைவர் குருஜிபாய் கேராய் கூறுகையில், "அந்தக் கிருஷ்ணர் சிலைகள் தங்கத்தால் உருவானவை அல்ல. கொள்ளையர்கள் தங்கச்சிலை என்று நினைத்துத் திருடியிருக்கலாம், ஆனால், அவை பழமை வாய்ந்த பித்தளைச் சிலைகளாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி! உற்பத்தியைக் குறைக்குமாறு சவூதி ஆலோசனை



அபுதாபி.நவ.13
பன்னாட்டுச் சந்தையில் பெட்றோலியக் கச்சா எண்ணெயின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால் அதன் உற்பத்தியை குறைக்குமாறு சவூதி அரேபியாவின் எரிபொருள்துறை அமைச்சர் ஒருவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.
பன்னாட்டுச் சந்தையில் பெட்றோலியக் கச்சா எண்ணெயின் விலை கடுமையானசரிவைச்சந்தித்துவருகிறது. இந்த நிலையில், பெட்றோலியப் பொருள்களுக்கானகிராக்கியைஅதிகரித்து, விலையை உயர்த்துவதற்கு வசதியாகக்கச்சாஎண்ணெய்உற்பத்தியைக் குறைப்பதற்கு எண்ணெய் வளம்மிக்க அரபு நாடுகள் முடிவு செய்து வருகின்றன. இந்த முடிவை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, உலகின் பெட்றோலியத் தேவையில் 73சதவீதத்தைஉற்பத்திசெய்கின்ற18 நாடுகளுக்குச் சவூதி அரேபியாவின் எரிபொருள்துறை அமைச்சர் காலித் அல்வ்பலிஆலோசனைதெரிவித்துள்ளார். அபுதாபியில்நடைபெற்றஎரிபொருள் கருத்தரங்கில் பேசிய அவர், 'உற்பத்தியில் 10 இலட்சம் பீப்பாய்களை நாளொன்றுக்குக்குறைத்துக்கொண்டால் பெட்றோல் விலையைச் சமநிலையில் இருக்குமாறு செய்யலாம்' எனக் குறிப்பிட்டார். சவூதி அரேபியா அடுத்த மாதத்துக்குள் தனது கச்சா எண்ணெய் உற்பத்தியில் தினந்தோறும் 5 இலட்சம் பீப்பாய்களைக் குறைத்து கொள்ளும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# கொங்கோவில் 'எபோலா' தாக்கி 200 பேர் சாவு

கின்சஷா.நவ.13
கொங்கோவில் எபோலா வைரஸ் நோய் (குருதி இழப்புச் சோகை காய்ச்சல்) தீவிரமாகப் பரவி வருகிறது. இந்த நோயால் அங்கு 200க்கும் மேற்பட்டோர் சாவடைந்துள்ளனர். அந்த நாட்டின் கிழக்கு பகுதியில் 298 பேருக்கு கடும் காய்ச்சல் தாக்கி உள்ளது. அதில் 263 பேருக்கு எபோலா வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 35 பேருக்கு சந்தேகத்தின் அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நோய் தாக்கியவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வடக்கு கிவு பிராந்தியத்தில் உள்ள பேனி நகரை சேர்ந்தவர்கள். அங்கு 8 லட்சம் பேர் வசித்து வருகிறார்கள் என அங்கு இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இப்படி அங்கு எபோலா வைரஸ் தாக்கி வருகிற நிலையில், சிகிச்சை அளிக்கிற மருத்துவக் குழுவினருக்கு ஆயுதம் ஏந்திய போராளிகள் இடையூறளித்து வருவதாக அந்த நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் ஒளி இலுங்கா கூறியுள்ளார். கொங்கோவைப் பொறுத்தமட்டில், எபோலா வைரஸ் நோயை எதிர்த்துப் போராடுகிறபோது, பாதுகாப்புப் பிரச்சினை பெரும்' சவாலாக அமைந்துள்ளது என உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்தார்.



# கூடில்லாத நத்தையை உணவாக்கியவர் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் இறப்பு



சிட்னி.நவ.13
நத்தையை மூல வியாதிக்காரர்கள் மருந்தாக உண்பது சில நாடுகளில் உள்ள வழக்கம். ஆனால், முறையாகச் சமைக்காமல் நத்தையின் இறைச்சியை உட்கொண்டால் பாதகங்கள் நேரிடும் என்று கருதப்படுகிறது. அதை வலுப்படுத்தும் நிகழ்வு ஒன்று ஆஸ்திரேலியாவில் நடந்தேறியிருக்கிறது. ஆஸ்திரேலிய இளைஞர் ஒருவர் தரையில் ஊர்ந்துசென்ற கூடில்லா நத்தையைச் சாப்பிட முடியுமா என்று நண்பர்கள் விட்ட சவாலுக்காக அதை உட்கொண்டிருக்கிறார். அவருடைய பெயர் சாம் பல்லார்ட். பின்னர் அவர் ஏராளமான பாதிப்புக்குள்ளாகி 8 வருடங்களுக்குப் பின் சாவடைந்திருந்தார். நத்தையை உண்ட அன்றே அவருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஒவ்வாமைகளில் இருந்து வெளிவந்த அவர், பின்னர், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார். நீண்ட போராட்டத்துக்குப் பின் அண்மையில் சாவடைந்திருக்கிறார். நத்தையின் உடலில் இருந்த நுரையீரல் புழுதான் இவருடைய சாவுக்கு காரணம் என்று அவருடைய சாவு விசாரனையில் தெரியவந்திருக்கிறது!

# கண்காணிப்புக்கு பறக்கும் மோட்டார் சைக்கிள்

## நவீனமடைகின்றனர் துபாய் பொலிஸார்


அபுதாபி.நவ.13
துபாய்ப்பொலிஸார், தற்போது பறக்கும் உந்துருளியை பயன்படுத்திப் பயிற்சி செய்து வருகின்றனர். உலகின் மிகவும் விரும்பப்படும் சுற்றுலா நகரங்கள் வரிசையில் துபாய் முதன்மை வகிக்கிறது.
மேலும், உலக நாடுகளை அதீத தொழில்நுட்ப பயன்பாடுகளினால் வியப்பில் ஆழ்த்தும் நாடுகளில் ஒன்றாகவும் துபாய் பார்க்கப்படுகிறது.
பல்வேறு உலக நாடுகளில் வானத்தில் பறக்கும் சிறிய ரக வாகனங்கள் அதிகம் பயன்படுத்தப்படாத நிலையில், துபாய் பொலிஸார் பறக்கும் உந்துருளிகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் வானத்தில் இருந்தபடியே கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள முடியும். இந்த ஹோவர் பைக்கை ரோந்து பணிகளுக்காகவும், விபத்தில் சிக்குபவர்களுக்கு முதலுதவி அளிக்கும் விதத்திலும் பயன்படுத்துவதற்குத் துபாய் பொலிசார் திட்டமிட்டுள்ளனர். இதை 'ரிமோட் கன்றோல்' முறையில் ஆள் இல்லாமலும் இயக்கலாம். 2020ஆம் ஆண்டில் இந்தப் பறக்கும் உந்துருளிகளின் பயன்பாட்டுக்கு வரவுள்ளது எனத் துபாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# "தென் கொரியா போர் நிறுத்த உட்படிக்கையை மீறியுள்ளது" வட கொரியாவின் அதிபர் எச்சரிக்கை

சியோல்,நவ.13
அமெரிக்க இhணுவத்துடன் இணைந்து தென் கொரியா சிறிய அளவிலான போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதைப் போர் நிறுத்த மீறல் என வடகொரியா குற்றம் சாட்டுகிறது. எல்லாமாக 500 சிப்பாய்கள் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டுள்ளனர்.
இரண்டு கொரிய நாடுகளும் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதியன்று கொரியத் தீபகற்பத்தில் போர் நிறுத்த உடன் படிக்கையை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.
இதை மீறும் செயல் என்று தற்போதைய போர்ப் பயிற்சியை வடகொரியா சாடுகிறது. அதேநேரம் இது ஒரு சிறிய இராணுவப் பயிற்சி மட்டுமே என்று தென் கொரியப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவித்துள்ளார். இந்த நிலமை நீடித்தால் தாங்கள் மீண்டும் அணுஆயுத உற்பத்திகளை ஆரம்பிக்க நேரிடும் என வடகொரிய அதிபர் எச்சரித்துள்ளார். வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் மற்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆகிய இருவரும் ஜூன் மாதம் சிங்கப்பூரில் சந்தித்தபோது தென்கொரியாவுடன் இராணுவ நடவடிக்கைகள் எதையும் தாம் மேற்கொள்ளப்பேவதில்லை என ட்ரம்ப் உறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# டிசெம்பர் 20 இல் 'சீதக்காதி'

96 படத்துக்குப்பிறகுவிஜய்சேதுபதிநடிப்பில்அடுத்ததாகசீதக்காதி, சூப்பர் டீலக்ஸ், சயீரா நரசிம்ம ரெட்டி, பேட்ட உள்ளிட்ட படங்கள் வெளியாக இருக்கின்றன.

இதில் விஜய் சேதுபதியின் 25ஆவது படமாக 'சீதக்காதி' உருவாகி இருக்கிறது. 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' படத்தை இயக்கிய பாலாஜி தரணிதரன் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதி 80 வயதான நாடக கலைஞனாக நடித்திருக்கிறார். கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகி இருக்கும் இந்தப் படத்தில், இயக்குநர் மகேந்திரன், பாரதிராஜா முக்கிய கதா பாத்திரங்களில் நடித்துள்ளனர். படப்பிடிப்பு முடிந்து பின்னணி வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், படம் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு வருகிற டிசெம்பர் 20ஆம் திகதிவெளியாக இருப்பதாக படக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.




## twitter

### இலங்கையில் அப்பக்கடை மாஸ்டரின் கையில் ஆட்சி!

அப்பத்துக்கு மாவாட்டினாலுக்கு ஏதாவது ஆட்டணும் என்பது பழக்க தோசம். அதுதான் ஆட்டிக்கிட்டு இருக்கார் நாட்டை.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | 5 | 4 | 3 | |
| 5 | | | 3 | | 9 | 7 | 2 | |
| | | | | | | | | |
| 4 | 2 | 7 | | 1 | | 9 | | 3 |
| | | | 2 | | 7 | | | |
| 9 | | 8 | | 3 | | 2 | 6 | 7 |
| | | | | | | | | |
| | 7 | 1 | 4 | | 3 | | | 6 |
| | 3 | 4 | 9 | | | | | 8 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 9 | 2 | 4 | 6 | 7 | 5 | 3 |
| 6 | 4 | 5 | 7 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 7 | 3 | 2 | 8 | 5 | 1 | 4 | 6 | 9 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 7 | 5 | 3 | 2 |
| 2 | 5 | 7 | 3 | 6 | 8 | 1 | 9 | 4 |
| 4 | 9 | 3 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 |
| 5 | 7 | 4 | 9 | 1 | 3 | 8 | 2 | 6 |
| 3 | 6 | 1 | 5 | 8 | 2 | 9 | 4 | 7 |
| 9 | 2 | 8 | 6 | 7 | 4 | 3 | 1 | 5 |

## எமது ஜனநாயகம்

நாம் தெரிவு செய்த ரணிலின்
மோசமான அரசை
நாம் தெரிவு செய்த
மோசமான அரச தலைவர் மைத்திரி கலைத்துவிட்டு,
நாம் முன்னர் தெரிவு செய்த மோசமான மகிந்தவின்
அரசை....
காபந்து அரசாக நியமித்துவிட்டார்.




**மேடம்:** அவசரப்பணி ஏற்பட வாய்ப்புண்டு. அக்கம் பக்கத்தினருடன் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும்.

**இடபம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். எதிலும், சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனதில் நம்பிக்கை வளரும்.

**கடகம்:** உங்கள் மீது பலரும் நல்லெண்ணம் கொள்வர். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான குறுக்கீடு விலகும். ஆதாயம் உயரும்.

**சிங்கம்:** நேர்மை வழியில் நடை போடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கன்னி:** சிலர் உங்களின் நற்செயலை பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி உருவாகும். லாபம் சுமார். பெண்களுக்கு தாய்வழி உறவினரால் உதவி கிடைக்கும்.

**துலாம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணி விரைவாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் எதிர்பார்த்ததை விட அமோகமாக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் உயரும்.

**மகரம்:** எவரிடமும் குடும்ப பிரச்னையைப் பேச வேண்டாம். தொழிலில் விற்பனை சுமாராக இருக்கும். லாபம் மிதமாக இருக்கும்.

**கும்பம்:** உங்களால் பலன் பெற்று நன்றி மறந்தவரையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் வசீகரம் மேலோங்கும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் உயரும். சேமிக்க வாய்ப்புண்டு.

## ஆயிரம் ரூபாய்


ஓங்கி வளர முடியாத
தேயிலை செடியாய்
தாழ்த்தி விடப் பட்டதோ
அவர்கள் வாழ்க்கை?

வீங்கி வெடிக்கின்ற
விலையின் பெருக்கத்தில்
சிதறிப் போகிறது
லயத்தார் வாழ்க்கை...

அட்டை உரிந்த குடித்த
உதிரம் மிச்சம்
குடித்து முடிக்கின்றதே
சில பேய்கள் வர்க்கம்

தேங்காய் அற்ற உரொட்டியும்
கழிவாய் போன தேயிலையும் கூட
கையில் கிட்டாமல் போனது
பத்தாத தினக் கூலி தினம் தினம்

எம் கோப்பையில் உதிரம் பார்க்கிறேன்
வியர்வையின் மணம் உணர்கிறேன்
அத்தோடு உங்கள் கண்ணீரால்
நான் நனைகிறேன்
ஆயிரம் ரூபாவாய்
தினக் கூலி உயர்வுக்கு!





## முடியாதென்றால் அரச தலைவரே பதவிவிலகு!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் அறிவிக்கப்பட்டால் தேர்தல் செலவுகளை மைத்திரி பொறுப்பு எடுப்பாரா??

அப்பாவி மக்களின் வரிப்பணம் தான் தேர்தல் செலவுக்கு. இதை ஒத்தூதும் மொக்கு சாம்பிராணிகள் விளங்கி கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே பொருளாதாரரீதியாக நாடு இருக்கும் நிலை நாம் அறிந்ததே. இதற்குல் தேர்தல் செலவு வேறு.

இதைத் தொடர்ந்து மாகாணசபை தேர்தல், அரச தலைவர் தேர்தல் நடத்தவேண்டிய தேவை இருக்கிறது.

இப்படியே தேர்தல் நடத்தி செலவு செய்து மக்களை மேலும் கடன் சுமைக்குல் தள்ளுவதை விட வேறு எதை மக்கள் அடையப்போகிறார்கள்.

# நகைச் சுவைத் துணுக்குகள்

**அதிபர்** - என்ன இருந்தாலும் அந்த மாணவனுக்கு அப்படி நீங்கள் அடித்திருக்கக்கூடாது. அப்படி அவன் என்னதான் செய்தான்?

**ஆசிரியர்** - உலகிலேயே உயரமான மலை எது என்று கேட்டேன். தெரியாது என்றான்.

**அதிபர்** - அதற்காகவா அடித்தீர்கள்?

**ஆசிரியர்** - இல்லையே! விடை தெரியா விட்டால் மேசைக்கு மேல் ஏறு என்றேன். மேசைக்கு மேலே ஏறினால், மலை தெரியுமா சேர்? என்று கேட்கிறான்.


**அதிபர்** - பிள்ளைகளே! எங்கள் பாடசாலையில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அவர்கள் கிடைத்ததும் உங்களுக்கு ஓர் ஆசிரியரைத் தருகிறேன். அதுவரையும் நீங்கள் சுயமாகப் படியுங்கள்.

**மாணவர்** - சேர்! எங்களுக்கு மோசமான ஆசிரியர் வேண்டாம். அதைவிட நாங்களே சுயமாகப் படித்துக் கொள்கின்றோம்.



## வர்ணம் தீட்டுவோம்

கீழே உள்ள சொற் சக்கரத்தில் 'க' எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள ஐந்து சொற்களையும் எதிரே உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக




உதாரணம்: கலம்

1.............................
2.............................
3.............................
4.............................
5.............................



# அஞ்சா நெஞ்சம்



"கோழைகள் பல முறை செத்துச் செத்துப்பிழைக்கிறார்கள்" என்கிறார் உலகப் பிரசித்திபெற்ற நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர். பயம் மனித வாழ்க்கையை நிம்மதியில்லாமல் ஆக்கிவிடுகிறது. பயப்படுவதால் எந்தவிபத்தும் தவிர்க்கப்படுவதில்லை. எச்சரிக்கையாக இருப்பது வேறு. பயந்து சாவது வேறு. வானூர்தியில் பயணம் செய்யப் புறப்படுகிறோம். அவ்வாறு புறப்படும் போது வானூர்தி விபத்துக்குள்ளாகி விட்டால் என்ன செய்வது என்று பயப்படுவதில் அர்த்தமில்லை. அது எச்சரிக்கை நடவடிக்கையும் ஆகாது. வானூர்தியை விபத்து இன்றிக் கொண்டு செல்வது வானூர்தி ஓட்டியினதும் அவருக்குத் துணையாகும் குழுவினதும் கடமையுமாகும். அதைப் பற்றி பயணிகள் கவலைக் கொண்டிருப்பது எச்சரிக்கை நடவடிக்கை ஆகாது.

இதேசமயம் ஒரு வீடு இடிந்து போகிற நிலையில் இருப்பதாக வைத்துக் கொண்டால் அந்த வீட்டுக்குள் குடிபோவது துணிச்சலைக் காட்டாது. குடிபோகாமல் தவிர்ப்பது எச்சரிக்கை நடவடிக்கையாகும். இவை இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கக் கூடாது.

வாழ்க்கையில் சில நன்மைகளை நாம் எதிர்பார்ப்பதைப் போலவே சில தீமைகளையும் எதிர்பார்ப்பது மனித இயல்புதான். நாம் எதிர்பார்க்கின்ற நன்மைகள் அனைத்தும் நடந்து விடுவதில்லை. அதைப் போலத்தான் நாம் எண்ணிப் பயப்படுகின்ற தீமைகளும் நடக்க வேண்டுமென்பது அவசியமில்லை. தீமைகள் அல்லது. கெடுதல்கள் ஏற்படும் என்று எண்ணிக் கொண்டிருந்தால் எந்தக் காரியத்தையும் நிம்மதியாகச் செய்ய முடியாது. பெரும்பாலும் பயம் என்பது எமது கற்பனையில் மட்டுமே சஞ்சரித்து மறைந்து போகக் கூடிய ஒன்று என்பது தான் உண்மை. இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல் நாம் அச்சத்தை வளர்த்துக் கொள்ளும்போது அதுவே ஒரு பழக்கமாக எப்போதும் அச்சத்தின் பிடியில் நாம் இருந்து விடுகிற நிலைமையை உண்டாக்கிவிடுகிறது.

**அச்சமில்லை அச்சமில்லை உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை.**

# சேவலின் தந்திரம்



ஒரு கிராமத்தின் ஒரு வீட்டில் சேவல் ஒன்று வசித்து வந்தது. அது தினமும் அதிகாலையில் தனது வீட்டுக் கூரையிலிருந்து கூவும். அதன் கூவலைக் கேட்டு அந்த வீட்டிலும் சூழவுள்ள வீடுகளிலும் வாழும் பள்ளிச் சிறுவர்கள் மற்றும் வேலைகளுக்குச் செல்பவர்கள் எழுந்து தம் கடமைகளைச் சரிவரச் செய்துவருவர். இதனால் சேவலுக்கும் ஒரு பெருமை. சேவல் பகல் வேளைகளில் வயல் வெளிகளில் சேவல், கோழிகளுடன் மேய்ந்துதிரியும். இந்தச் சேவல் மற்றைய சேவல்களை விட கம்பீரத் தோற்றமும் அழகும் கொண்டு விளங்கிற்று. இதனது கம்பீரத் தோற்றம் அந்தப் பகுதிக் காட்டுக்குள் ஒளிந்து வாழ்ந்த கொண்டிருந்த நரியாரைக் கவர்ந்தது.

இப்போது சேவல் மேய்ந்த களைப்புத் தீர ஒரு மரமொன்றின் மீது ஏறி அதன் கிளை ஒன்றில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அந்த நேரம் அந்த நரி அந்தப் பக்கமாக வந்தது. மரத்தின் மீதிருந்த சேவலைக் கண்டது. உடனே அதனைக் கொன்று சாப்பிட எண்ணியது. அப்போது அதன் வாயில் எச்சில் ஊறத் தொடங்கியது. எப்படிச் சேவலை உண்ணலாம் என அது பலவாறு எண்ணியது. சேவலும் நரியைக் கண்டு விட்டது. நரியின் எண்ணம் சேவலுக்கும் புரிந்து போயிற்று.



அவ்வேளை "சேவல் அண்ணே இன்றிலிருந்து பறவைகளும் விலங்குகளும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பது எமது காட்டு ராஜாவான சிங்கராசாவின் உத்தரவு" என்றது நரி.

சேவலோ "அ... அப்படியா இதைத்தான் அறியவில்லையே" என்றது. இதென்ன நீர் இங்கே மரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறீர். சற்று நேரத்துக்கு முன்பாகத் தான் சிங்கராசாவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீர் வேண்டுமானால் கீழே இறங்கி வந்து உமது ஏனைய தோழர்களிடம் கேட்டு உமது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும்" என்றது நரி. சேவல் விழிப்படைந்தது.

சேவலோ தூரத்தின் தான் வாழும் வீட்டின் வேட்டை நாய்கள் இரண்டும் மற்ற வீட்டு நாய்கள் இரண்டும் ஒன்றாக உலாவிக் கொண்டிருப்பதை மரத்தில் இருந்தபடியே கண்டது. அதற்கு ஓர் உபாயம் தோன்றிற்று. அது நரியை நோக்கி "தம்பி அதோ தூரத்தில் என் நண்பர்கள் சிலர் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றது. நரியோ கொஞ்சம் பயந்துபோய் "யார் உனது நண்பர்கள்" என்று வினவியது.

சேவலோ "அது வேறு யாருமில்லை வேட்டை நாய்களே எனது நண்பர்கள். அவர்களைக் கூவி அழைக்கிறேன்.

அவர்களும் வரட்டும். இது பற்றி விசாரித்துவிட்டு நான் கீழறங்கி வருகிறேன்" என்று கூறி நாய்கள் நின்ற திசை நோக்கி "கொக்கரக்கோ... கொக்கரக்கோ.." என்று கூவ ஆரம்பித்தது. நரியோ வேட்டை நாய்கள் என்ற பெயரைக் கேட்டதுமே கிலிபிடித்து அவ்விடம் விட்டு ஓட்டம் பிடித்தது.

# கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!

ப. இளஞ்செழியன்



**சூரபத்மன் வரலாறு**

படைத்தல் கடவுளாகிய பிரம்மதேவன்னுக்கு தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தார்கள். இவர்களுள் தக்கன் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும் இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப் பெற்ற வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடம் இருந்து மேலான சக்தியைப் பெற்றான். ஒருநாள் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கி தான் பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதைத் தொடர்ந்து காசிபனும், மாயை என்னும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனிதத் தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் சாமத்தில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்து ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப் பெண்ணும் பிறந்தனர். மாயை காரணமாகத் தோன்றிய இந்த நால்வரும் ஆணவ மிகுதியால் அகங்காரம் கொண்டு காணப்பட்டனர்.

இவர்களுள் சூரபதுமன் சர்வலோகங்களையும், அரசாளும் சர்வ வல்லமைகளையும் பெறவேண்டும் என்ற பேராசையால் சுக்கிராச்சாரியாரிடம் உபதேசம் பெற்றுச் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். 108 யுகம் உயிர்வாழவும், 1008 அண்டம் அரசாளும் வரத்தையும், இந்திர ஞாலம் எனும் தேரையும், சிவன் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் அழிக்க முடியாது எனும் வரத்தையும் பெற்றான்.

பதுமகோமளை என்னும் பெண்ணை மணந்து வீரமகேந்திரபுரியை இராசதானியாக்கி இந்திரன் மகன் சயந்தன் முதலான தேவர்களையும் சிறையிலிட்டு சொல்லொணா துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தான்.

அசுரர்களின் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். இறைவனும் அவர்கள்மேல் திருவுளம் கொண்டார்.

**ஆறுமுகன் அவதாரம்!**

தேவர்களை அந்த துன்பத்தில் இருந்து காப்பாற்றும் நோக்குடன் சிவன் தனது நெற்றிக் கண்ணைத் திறந்தார்.சிவபெருமானுக்கு 'ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம்' ஆகிய ஐந்து முகங்கள் உள்ளன. இவை தவிர ஞானிகளுக்கு மட்டுமே தெரியக் கூடிய 'அதோமுகம்' (மனம்) என்ற ஆறாவது முகமும் உண்டு. அவைகளிலிருந்து ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டன. அவற்றை வாயுபகவான் ஏந்திச் சென்று வண்ண மீனினம் துள்ளி விளையாடும் தண்மலர் நிரம்பிய சரவணப்பொய்கையில் தாமரை மலர்களின் மீது சேர்த்தார். அந்த தீப்பொறிகள் ஆறும் உலகின் பொன்னெல்லாம் உருக்கி வார்த்ததென ஆறு குழந்தைகளாகத் தோன்றின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் சீராட்டி, பாலூட்டி வளர்த்து வரும் வேளை அகிலலோக நாயகி பார்வதி தன் மைந்தர்கள் அறுவரையும் ஒன்றாக அன்புடன் கட்டியணைத்திட அவையாவும் ஒரு திருமேனியாக வடிவங்கொண்டு ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய ஒரு திரு முருகனாக தோன்றினன் உலகுய்ய.

ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய திருவுருவை பெற்றமையால் 'ஆறுமுக சுவாமி' எனப் பெயர் பெற்றார்.இந்த ஆறு திருமுகங்களும் 'ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரியம், வைராக்கியம், புகழ்' என்னும் ஆறு குணங்களையும் குறிக்கின்றன.

அந்தவகையிலே முருகப்பெருமான் அசுரர்களான சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலையே நாம் கந்தசஷ்டி விழாவாகக் கொண்டாடுகிறோம். சூரபத்மனின் ஒரு பாதி 'நான்' என்கிற அகங்காரம், மற்றொரு பாதி 'எனது' என்கிற மமகாரமாகவும் அமையப் பெற்றவன்.

**அன்னை வழங்கிய சக்திவேல்**

அம்மையும் தன்னைப்போன்ற ஒரு சக்தியை உருவாக்கி அதையும் தனது சக்திகள் யாவும் கொண்ட ஓர் வீரவேலாக உருமாற்றினார். அம்மையப்பன் வெற்றி தரும் வேலை முருகனிடம் தந்தார். ஈசனும் தன் அம்சமாகிய பதினொரு உருத்திரர்களைப் படைக்கலமாக்கி முருகனிடம் தந்தார்.

மன்னி ஆற்றங்கரையில் சிவபிரானுக்கு ஆலயம் எழுப்பச் சொல்லித் தேவதச்சனைப் பணிக்கிறார் முருகப் பெருமான். ஈசனும் முருகனுக்கு முன்னே தோன்றி பாசுபதம் என்னும் அஸ்திரம் அளித்தார்.

**வீரவாகுதேவர் தூது செல்லல்!**

முருகப் பெருமான் வீரபாகுதேவைரை சூரனிடம் தூதனுப்பிச் சிறை வைத்த தேவர்களை விடுவித்திடுமாறு செய்தி அனுப்பினார். தூதின் போது, வீரபாகு சிறைப்பட்ட அமரர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, சூரனிடம் தூது உரைக்கிறான். ஆனால் அசுரனின் ஆணவத்தால் தூது முறிந்தது. வீரபாகுதேவர் திருச்செந்தூர் திரும்பி வந்து முருகனிடம் தூது நிகழ்வுகளை முன்வைத்தார்.

கந்தப்பெருமான் வீரபாகு தேவரை நோக்கி, "பாவங்களை அளவில்லாமல் புரிந்து கொண்டிருக்கும் சூரபத்மன் முதலான அசுரர்களை அழித்து, தேவர்கள் துன்பம் நீங்கி, உலகம் நலம் பெறுவதற்காக இப்பொழுதே படையெடுத்து வீரமகேந்திரபுரிக்குச் செல்லவேண்டும். நம் தேரைக் கொண்டுவா!" என்று கட்டளையிட்டார்.

பேரிகை, காளம், கரடிகை பல வாத்தியங்கள் முழங்கின. முருகப்பெருமானுடன் சென்ற பூதபடைகளின் பேரொலி எங்கும் ஒலித்தது.

**சூரபதுமனைத் தேடிச் செல்லல்!**

அம்மையப்பனிடம் வேல் வாங்கிய முருகன், தேரேறித் தெற்கு நோக்கிச் செல்கிறான். விந்தியமலை அடிவாரத்து மாயாபுரத்தை, சூரனின் தம்பி தராகாசுரன் (ஆனை முகம் கொண்டவன்) ஆண்டு வருகிறான். அவன் கிரௌஞ்சம் என்னும் பெரிய மலையாய் உருமாறி வழி மறிக்க, வீரபாகுத் தேவர் அவனுடன் போர் புரிகிறார். ஆனால், தாரகன் வீரபாகுதேவரையும், முருகனின் சேனையையும், மாயையால் மலைக்குள் அழுத்தி விடுகிறான்.

அப்போது முருகனின் கூர் வேல் மலையைப் பிளக்க, தாரகன் அழிகிறான். அனைவரும் மலைச்சிறையில் இருந்து விடுபடுகின்றனர். சூரபத்மன் இந்தச் செய்தி கேட்டு துடிதுடித்தான். ஆத்திரத்தால் அவன் தம்பி சிங்கமுகாசுரன் போரிடப் புறப்பட்டான்.

சிங்கமுகனும் பல தந்திரங்களை உபயோகித்து போர் செய்யலானான். இறுதியில் முருகனின் வேல் சிங்கனின் நெஞ்சில் பாய்ந்தது. சிங்கமுகன் இறந்தான்.

பானுகோபன் போருக்குச் செல்லல்!

தாரகனையும் அவனுக்குத் துணை நின்ற கிரௌஞ்சத்தையும் பிளந்து அழித்துப் பின், சிங்கமுகனையும் அழித்து சூரனின் சேனை அழிந்த போதும் சூரபதுமனின் ஆணவம் அழியவில்லை. அதனால் அவனின் மகன் பானூகோபன் முருகனை அழிக்கத் தனக்கு அனுமதி தரும்படி வேண்டி போருக்குச் செல்கின்றான். அவனும் முருகவேளின் வேலுக்கு பலியானான்.

**சூரன் போருக்குச் செல்லல்!**

தன் சொந்தபந்தங்களையும், துணை நின்ற படைச் சேனைகளையும் இழந்து செய்வதறியாது நின்ற சூரனின் ஆணவம் அப்போதும் அடங்கவில்லை. தானே போருக்கு செல்வதாக முடிவு செய்து முருகப் பெரும்மான் முன் தோன்றி சராமாரியாக அம்புக்கணை தொடுத்தான். அவையாவும் முருகவேளின் கடைக்கண் பார்வையால் அழிந்தன. சூரன் தனது மாயயாலங்களினால் பலவாறாக தோன்றிப் போர்செய்தான். அப்போது முருகன் சூரனை நோக்கி, "இப்போதும் நீ உயிர்வாழலாம். தேவர்களை சிறையில் இருந்து விடுவித்து விடு!" என்று அறிவுறுத்தினார். அப்போதும் அவனின் ஆணவம் அடங்கவில்லை.

முருகப் பெருமான் சூரனின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு தன் திருப்பெரு வடிவம் (விஸ்வரூபம்) காட்டியும், எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டியும், சிவனும் அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தியும், தன் தன்மை மாறாது போர் செய்தார்.

வீரமகேந்திரபுரத்தில் பலப்பல மாயங்கள் செய்து போர் புரிகிறான் சூரன். கடலாய், இருளாய் மாறி மாறிச் செய்யும் போர் எதுவும் உதவாமல் போனதால், உதவிசெய்ய இருந்த உற்றமும், சுற்றமும் அழிந்து உறவும் அற்றுப் போக சூரனும் மயங்கித் தத்தளித்தான். தன்னுடன் போர் செய்ய வந்தது இறைவனே என அறிந்ததும், அடிபணிய ஆணவம் விடவில்லை.

முருகப் பெருமான் எய்திய வேலானது அவன் சென்ற இடமெல்லாம் துரத்திச் சென்றது கடைசியாக நடுக்கடலடியில் மாமரமாய் மாறுவேடத்தில் நிற்க, நீரினுள் சென்று மாமரத்தை இருகூறாக்கி சூரபத்மனின் ஆணவத்தை அழித்தது.

**அருட்கடாட்சம்!**


ஆணவம் அழியப் பெற்ற சூரன் தன் தவறை உணர்ந்து தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடி முருகனை வேண்டி நிற்க, அவன்மேல் இரக்கம் கொண்டு பிளவுபட்ட மாமரப் பாதிகள் இரண்டையும் முருகன் தன் அருளால் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியிலும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார்.

கந்த புராணக் கதையைச் "சங்கரன் மகன் சட்டியில் மாவறுத்தான்!" என்ற சொற்றொடர் மூலம் நகைச் சுவையாக பயன் கூறுவார்கள். "சங்கரன் புதல்வராகிய முருகப் பெருமான் சஷ்டித் திதியிலே ம்ாமரமாக வந்த சூரனை இரண்டாக அரிந்தார்." என்பது இதன் பொருள். முருகனின் ஆணைப்படி, வருணன் வீர மகேந்திரபுரியைக் கடலுக்கு அடியில் மூழ்கடிக்க, போர் முடிகிறது.

வெற்றி வீரத் திருமகனாய், முருகப் பெருமான் திருச்செந்தூர் திரும்பினார். சூரனுடன் முருகப் பெருமான் போர் புரிந்து அவனது ஆணவத்தை அடக்கி ஆட்கொண்ட நாளே இறுதி நாளாகிய சஷ்டி எனப்படும். சஷ்டி என்பது திதியாகும்.

**ஆறிருதடந்தோள் வாழ்க**
**ஆறுமுகம் வாழ்க வெற்பைக்**
**கூறுசெய் தனிவேல் வாழ்க**
**குக்குடம் வாழ்க செவ்வேள்**
**ஏறிய மஞ்ஞை வாழ்க**
**யானைதன் அணங்கு வாழ்க**
**மாறிலா வள்ளி வாழ்க**
**வாழ்க சீர் அடியார் எல்லாம்!**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 04 . 1936 | 11 . 11 . 2018 |

### வல்லிபுரம் தங்கவடிவேல்

*(முன்னாள் பங்காளர் வல்லிபுரம் & Company வவுனியா/அனுராதபுரம் ஸ்ரீ முருகன் தியேட்டர் - வவுனியா)*

தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கவடிவேல் 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆழ்வார்பிள்ளை - தேவசுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வதேவியின் அன்புக் கணவரும் முருகவேல் (UK), சித்ரா(UK), ஞானவேல் (Australiya), செந்தில்வேல்(Canada) ,ஜோதிவேல் (குடிசார் பொறியியலாளர், இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி(UK), ஸ்ரீ கந்தராஜா(UK), அனுசயா(Australiya), எழில்வதனி(Canada), நிஷாந்தி(வைத்தியர் - ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகா, சித்திரசீலன், இலக்கியா, சித்திரதீபன், சித்திரமீரன், நகுலன், இராகுலன், தருணிகா, பிறேமிகா, சனாதவி, நேத்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.465, ஹொறவப் பொத்தானை வீதி, இறம்பைக்குளத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (14.11.2018) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**465, ஹொறவப் பொத்தானை வீதி,**
**இறம்பைக்குளம், வவுனியா.**

(CS 00415) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**






# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
ஆனந்தகுமார்
ஜெயபிரகாஷ் [பிரகாஷ்]
(யா/கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலய மாணவன்)
திதி:- ஐப்பசி ஷஷ்டி



ஆண்டிரண்டு ஆனதுவோ உன் புன்சிரிப்பு
முகம் மறையவில்லை
இவ்வயதில் உன் பேரிழப்பினை
எள்ளளவும் நாம் எண்ணவில்லை -
பிரகாஷ் எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
ஆறாத் துயரத்தோடு கண்ணீரால் உன்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை
தகவல்:- தந்தை (ஆனந்தன்)
இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.- 077 184 0286

தாயின் மடியில்
08.11.2002
கந்தன் மடியில்
05.11.2016

# ஓராண்டு நினைவலைகள்

அமரர்
பாலசுப்பிரமணியம்
கிருஸ்ணா [அப்பன்]
திதி:- சஷ்டி (13.11.2018)



ஓராண்டு என்ன ஓராயிரம்
ஆண்டுகள்
ஆயினும் என்றென்றும் எங்களுடன்
நீங்கள் நிறைந்திருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை
இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, சகோதரிகள்
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

அன்னை மடியில்
22.03.1972
ஆண்டவன் அடியில்
25.10.2017

## தேவை

திருநெல்வேலியில் இயங்கும் சைனீஸ் உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. தொடர்பு - 077 2619590

## வேலையாள் தேவை

கொழும்புக்கு அருகில் இயங்கிவரும் தமிழ் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு மெசின் ஒப்பரைட்டர் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
உணவு, தங்குமிடம் இலவசம்.

077 823 0698

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan:com
021 493 1111


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

# சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2019

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2018.11.13 - 2018.11.27 பி.ப 03.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2108.11.28 ந..ப 12.00 மணி வரை

கேள்விதிறக்கும் திகதி :- 2018.11.28 பி.ப 12.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும். வதிவிடச்சான்றிழக்குப் பதிலாக கேள்விதாரரின் பெயரிலுள்ள மின்சாரக் கட்டணப் பட்டியல் அல்லது நிலையான தொலைபேசிக் கட்டணப் பட்டியலையும் சமர்ப்பிக்கலாம்.
2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2018 நவம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200,000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை இல்லையாயின் வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி/ வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை என்பன கேள்வித் தொகையின் 1/3 பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3. சங்கானை மரக்கறி, மீன் சந்தைகளுக்கான மின்சாரக் கட்டணம் 01.01.2019 - 31.12.2019 வரையான பன்னிரண்டு மாதங்களுக்கும் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.
4. சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்திலுள்ள மலசலகூடத்தின் சுத்திகரிப்பு, மற்றும் பராமரிப்பு பொறுப்புகள் அனைத்தும் குத்தகையாளரையே சாரும். அதற்காக ஒரு தனியான ஊழியர் ஒருவரை நியமித்து பாவனையாளர்களிடமிருந்து ரூபா 10.00 இற்கு அதிகரிக்கப் படாத கட்டணம் அறவிடலாம். அத்துடன் மலசலகூடத்தின் சுத்தம், பராமரிப்பு தொடர்பாக சபை அலுவலர் / அலுவலர்களால் அடிக்கடி மேற்பார்வை செய்யப்படும்.
5. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்
6. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
7. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைக்காரர் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப் படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
8. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவு செய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் சிபாரிசுக்கமைவாகவே செயற்பட வேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தல்கயோ அல்லது வாடகையோ குத்தகையாளராலேயே கொடுக்கப்பட வேண்டும்.
9. சத்தியக்காடு சந்தையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வோர் மீன்சந்தையில் மீன் வெட்டு மிடத்தின் தூய்மைக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
11. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை ( VAT; NBT உட்பட) 05.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
14. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
15. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
16. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
17. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு(5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
18. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் " என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
19. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
20. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் (VAT , NBT, ஏனையவை ) அறவிடப்படும்.
21. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
22. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | ___ | 7,703,300.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீன மீன் சந்தை | ___ | 1,449,300.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 18,850.00 | 1,000.00 | 250.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 210,200.00 | 3,000.00 | 500.00 |
| 05 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 210,200.00 | 3,000.00 | 500.00 |
| | சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை | ___ | 1,139,600.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பல்லசுட்டி சந்தை | ___ | 31,900.00 | 1,000.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்திய சந்தை | ___ | 29,300.00 | 500.00 | 250.00 |
| 04 | பொன்னாலை வாராந்தச் சந்தை | ___ | 45,400.00 | 500.00 | 250.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | ___ | 138,600.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | ___ | 20,400.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 122,700.00 | 1,000.00 | 500.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 122,700.00 | 1,000.00 | 500.00 |
| | அராலி உப அலுவலகம் | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ___ | 21,500.00 | 500.00 | 250.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2018.11.13

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்

## மைத்திரியின்...

நீதியரசர்களைக் கொண்ட அமர்வு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

இதையடுத்து, மனுதாரர்கள் தமது சமர்ப்பணங்களை செய்வதற்காக பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 2 மணிக்கு, விசாரணை ஆரம்பித்தது. மனுதாரர்கள் தமது சமர்ப்பணங்களைச் செய்தனர். பிற்பகல், 4 மணியளவில் மீண்டும் 15 நிமிடங்கள் விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. நேற்று மாலை 5.30 மணி வரை, 11 மனுக்கள் மீதான சமர்ப்பணம் இடம்பெற்றது. எஞ்சிய 6 மனுக்கள் மீதான சமர்ப்பணம் இன்று இடம்பெறவுள்ளது. 17 மனுக்களின் சமர்ப்பணம் முடிந்ததும், சட்டமா அதிபர் பதிலளிப்பார். அதன் பின்னர் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம், இடைக்காலக் கட்டளையை வழங்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக கடந்த 9 ஆம் திகதி இரவு அரசிதழ் அறிவித்தலை அரச தலைவர் வெளியிட்டிருந்தார்.

அவரின் இந்த நடவடிக்கை அரசமைப்புக்கு முரணானது என்று ஐ.தே.க. சார்பில் கபீர் காசிம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அநுரகுமார திசாநாயக்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சார்பில் ரிசாட் பதியூதீன், ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் மனோகணேசன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் கூல், சிவில் அமைப்புகளின் சார்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் உள்பட 17 தரப்புக்கள் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (5.10)

## மரண அறிவித்தல்

### செல்வரத்தினம் ரிஷாந்

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நில அளவைக் கல்வி கற்கும் மூன்றாம் வருட மாணவன்)



தோற்றம் 21.08.1993 மறைவு 10.11.2018

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் ரிஷாந் கடந்த (10.11.2018) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்வரத்தினம் - விமலாதேவி தம்பதிகளின் அன்புமகனும் சபேசன் (விபுலானந்தா அழகியல் கல்வியற் கல்லூரி, மட்டக்களப்பு), சுஜீபன் (மலபே [தனியார்] பல்கலைக்கழகம்), சத்தியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஐயாத்துரை ரத்தினம் நாகபூசணி, சின்னத்தம்பி அழகம்மா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் பாலசிங்கம் (திருகோணமலை), ஜெயராஜசிங்கம் (கனடா), சிவஞானம், இந்திராணி, தங்கராசா பார்வதி, சந்திரன், கலாநிதி (துயா) ஆகியோரின் மருமகனும் கீதா பொன்கலம் காலஞ்சென்றவர்களான விஜயதேவி, சின்னத்தம்பி கனகராசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நயப்பு பாராட்டும்

### திரு. செல்லத்துரை செல்வசந்திரன்

கிராம சேவை அலுவலர்
J/263, உரும்பிராய்.

இன்று அகவை அறுபதை அடையும்
எமது பகுதி கிராமசேவை அலுவலர்
திரு. செல்லத்துரை செல்வசந்திரன் அவர்களுக்கு
எமது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு
அவர் எமது பகுதிக்கும் அம்பாள் ஆலய வளர்ச்சிக்கும் ஆற்றிய
நிறைவான சேவையை பாராட்டுவதோடு அவர்தம்
ஓய்வுநிலையில் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று
வாழவேண்டுமென அருள்மிகு பர்வத வர்த்தனி அம்பாள் அருளை
வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்,
பரிபாலன சபையினர் 13.11.2018
பர்வத வர்த்தனி அம்மன் கோவில் பரிபாலன சபை, உரும்பிராய்.

PLC சக்தி
BUSINESS LOAN



உங்கள் வியாபாரத்திற்கான உந்துசக்தியும்
வாழ்க்கையில் ஜெயித்திடுவதற்கான தைரியமும்

உங்கள் வியாபாரத்தின் வெற்றிக்காக பீப்பள்ஸ் லீசிங் உதவிக்கரம் நீட்டுகிறது. உங்கள் வியாபாரத்திற்கு தேவையான மொத்த கொள்வனவுகள், குறுகியகால முதலீடு, வியாபாரத்தை விஸ்தரித்தல், வியாபார பன்முகத்தன்மை மற்றும் ஏனைய நிதித் தீர்வுகளுக்கு பீப்பள்ஸ் லீசிங் சக்தி வியாபாரக் கடன் மூலம் பல சலுகைகள் உங்களுக்காக.

- தேவைக்கு ஏற்ப குறுகியகால அல்லது நீண்டகால கடன்களை பெற்றிடும் வசதி
- கடனை பகுதிகளாக செலுத்தி தவணையை குறைத்திட முடியும்
- இலவச ஆயுள் காப்புறுதி
- கடனை மொத்தமாக செலுத்தும் போது 90% வரை வட்டிக்கு விலக்களிப்பு
- சொத்துகள் மற்றும் வாகன பத்திரங்களுக்கு கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வசதி

HOTLINE
0112 206 300
PLC PEOPLE'S LEASING

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல் - 2019

### நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை தோணிக்கல் மீன்கடை, சிதம்பரபுரம் மாட்டிறைச்சிக்கடை நடத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழி இறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, தோணிக்கல் மீன்கடை, சிதம்பரபுரம் மாட்டிறைச்சிக்கடை போன்றவற்றை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடத்துவதற்கான கேள்விகள் 2018.11.27 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2018.11.27 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **" தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும் ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்துக்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2018.11.27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும் போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழிக்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 2,000/- வாடகையாகவும் சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 1,500/ வாடகையாகவும் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வப்போது அறவிடப்படும் வரி என்பவற்றைச் செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடைவிவரம் | ஒருவருடத்துக்குரிய குறைந்த கேள்வித் தொகை 15% VAT, 2% NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் 15% VAT, 2% NBT நீங்கலாக |
|---|---|---|---|
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 529,700.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 568,700.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை | 498,300.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 408,700.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மீன்கடை | 182,000.00 | 25,000.00 | 1,000.00 |
| தோணிக்கல் மீன்கடை | 21,600.00 | 25,000.00 | 1,000.00 |
| சிதம்பரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 100,000.00 | 25,000.00 | 1,000.00 |

**நேரியகுளம் வீதி,**
**நெளுக்குளம், வவுனியா.**
**10.11.2018**

(IN/8399(11.17)

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை.**

## மரண அறிவித்தல்

### திருமதி பேரின்பராணி பாலேந்திரன்



வேலணை 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பராணி பாலேந்திரன் 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராஜா - சௌந்தரநாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பாலேந்திரனின் அன்பு மனைவியும், லோகராணி, சரவணபவன் (நோர்வே), இலட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), கிருஷ்ணகாந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயராணி, ராஜகாந்தன் (பிரான்ஸ்), ஜெயவாணி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற ஆனந்தசிவராசா மற்றும் கந்தசோதி (நோர்வே), சிவயோகநாயகி (பிரான்ஸ்), புஸ்பமாலா (பிரான்ஸ்), செல்வராணி (பிரான்ஸ்), இளந்திரையன், கஜந்தினி (பிரான்ஸ்), ஞானகுமார் (பிரான்ஸ்), ராசேந்திரகுமார் ஆகியோரின் மைத்துனியும், கமலகுமாரியின் சகலியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை 15.11.2018 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று மணியந்தோட்டம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.04, பாரதிவீதி.**
**கச்சேரி, யாழ்ப்பாணம்.**

(CS/21173)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

சு.க....
உறுப்பினர்கள் 50 பேர் அந்தக் கட்சியில் சேர்ந்துவிட்டபோதும் எதிர்வரும் தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்தே பொது மக்கள் முன்னணி போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் முன்னணியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோகித்த அபேகுணவர்தன இதனைக் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் பொது மக்கள் முன்னணியுடன் இணைந்துகொண்டமையால் இரு கட்சிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகின்றது. அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ரோகித்த மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

இரு தரப்பினரும் ஒரே கொள்கையுடன் செயற்படுகின்றனர் என்று . அவர் குறிப்பிட்டார். இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறித்த கலந்துரையாடல்கள் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்ததென்றும், இவ்வாரம் முக்கிய தீர்மானங்கள் எட்டப்படலாமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-21)












# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
# கடைகளை வாடைக்கு வழங்கு வதற்கான கேள்வி கோரல் - 2018

**சங்கானை சந்தைத்தொகுதியில் சபையினால் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்தவாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக் கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேசசபையினால் கோரப்படுகின்றது.**

| தொ. இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBTவரி நீங்கலாக) | கேள்விவைப்புப் பணம்(மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக்கட்டணம் (VAT,NBT வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| சங்கானை சந்தை கடைத் தொகுதி | | | | |
| 01 | 01 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 02 | 02 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 03 | 03 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 04 | 04 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 05 | 05 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 06 | 08 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 07 | 10 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| 08 | 11 | 1,800,000.00 | 36,000.00 | 1,000.00 |
| சங்கானை சந்தை உட்புறக் கடைத்தொகுதி | | | | |
| 09 | 13 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 10 | 14 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 11 | 15 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 12 | 16 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 13 | 17 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 14 | 18 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 15 | 19 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 16 | 20 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 17 | 21 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 18 | 22 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 19 | 23 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| 20 | 24 | 960,000.00 | 19,200.00 | 1,000.00 |
| சங்கானை சந்தை மேல்மாடி கடைத் தொகுதி | | | | |
| 21 | 07 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |
| 22 | 08 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |
| 23 | 09 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |
| 24 | 10 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |
| 25 | 11 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |
| 26 | 12 | 630,000.00 | 12,600.00 | 1,000.00 |

**கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :-13.11.2018–27.11.2018 திகதி14.00 மணிவரை**
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 28.11.2018 திகதி 12.00 மணிவரை**
**கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 28.11.2018 திகதி 12.30 மணி**

**நிபந்தனைகள்**

1. அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி,N.B.Tஆகியவற்றைப் பணமாக செலுத்தி ஆள் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 13.11.2018 ஆம் திகதியில் இருந்து 27.11.2018 ம் திகதிவரை ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் பெற்று28.11.2018 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.
2. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமாற்றங்களும் செய்தல் ஆகாது.
3. படிவத்தைபூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
4. கேள்விப் படிவங்களைப் பெற்றக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம்" எனமுகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். மற்றைய இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
5. 28.11.2018 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்குமுன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப12.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
6. 28.11.2018 ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரிய முறையில் சபையில் பெற்றுவிண்ணப்பிக்கலாம்.
8. அரசநிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
9. எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லதுநிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
11. கடந்தகாலங்களில் தவறுநர் பட்டியலில் (Dcfaulters list) அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்தியவைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகலஎழுத்து மூல, வாய் மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
12. கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக் காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடியகேள்வித் தொகை ஏற்றுக் கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையினை ஒரேதடவையில் 04.12.2018 ஆம் திகதிக்குமுன்னர் வலிமேற்கு பிரதேசசபையின் சங்கானை உப அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.
14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் 15 % பெறுமதிசேர் வரி (VAT), 2% தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் இறுதி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப் பணத்தினை செலுத்தத்தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்தச் செய்யப்படும்.
16. முற்குறிப்படப்பட்ட 14வது 15ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத்தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்தஉத்தரவுக் கட்டணத்தை வலிமேற்கு பிரதேசசபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்தகாலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்குகொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒருமுறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
20. குத்தகைக்குப் பெற்றகடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப் வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஒருஅறிவித்தலும் இன்றி கடைமீளப் பெறப்படும்.
22. கேள்வித் திகதிக்குமுந்திய ஐந்துவருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
   - மிகை இலாபம் ஈட்டியகுற்றம் ▾ நிறுத்தல் முகத்தளவைக் கட்டளைச் சட்டத்தைமீறியகுற்றம்
   - சந்தைஉபவிதிகளைமீறியகுற்றம்
23. உள்ளுராட்சிமன்றங்களுக்கு சொந்தமான சந்தைக்கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பான 1980/40ஆம் இலக்கசுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.
24. கடைத்தொகுதியின் உட்புறக்கடைகள் 13 – 24 வரையானகடைகள் சாப்பாட்டுக்கடைகள்,தேநீர் கடைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான வகைகள்.சந்தையில் வியாபாரம் செய்யும் பொருட்கள் போன்ற வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
25. சித்திபெற்ற கேள்விதாரர் குறித்தகாலத்தில் கட்டுப்பணம் செலுத்தத் தவறின் எந்தவித அறிவித்தலுமின்றி கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படாது சபை நிதிக்கு மாற்றப்படும்.

மேலதிகவிபரங்களை அலுவலக நாள்களில் கடமைநேரத்தில் (9.00 – 15.30 மணிவரை) பெற்றுக்கொள்ளலாம்.


**த.நடனேந்திரன், தலைவர்,உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,**
**வலிகாமம் மேற்குபிரதேசசபை,சுழிபுரம்.**
**13.11.2018**

## இது புதுசு

இருபாலாரும் உடற்பயிற்சி செய்வதற்கான உபகரணம் அறிமுகமாகி யுள்ளது. இது ஆயிரத்து 990 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்படுகின்றது.



# அற்புத மருத்துவக்குணம் நிறைந்த நாயுருவிச் செடி....!



நாயுருவி முழுத்தாவரமும் கைப்பு, துவர்ப்புமற்றும்காரச் சுவைகள் கொண்டது. வெப்பத் தன்மையுடையது. இது, பிரசவித்த தாய்மார்களின் வயிற்று அழுக்கை வெளியேற்றப் பயன்படும்.
நாயுருவிஇலைமற்றும்வேர்களுக்கெனப் பிரத்தியேகமான மருத்துவக் குணங்கள் உள்ளன. நாயுருவி இலைகள்நரம்புகளைவலுவாக்கும் சிறுநீரைப் பெருக்கச் செய்யும். ஆரோக்கியம் தரும். கழிச்சல், வெள்ளைப்படுதல், அதிகவியர்வைபோன்றவற்றைக் குணமாக்கும்.

நாயுருவிவேர் கருப்பையைச்சுருக்கும். நாயுருவி சிறுநீர் பெருக்குதல், நோய்நீக்கி உடல் தேற்றுதல், சதை நரம்பு இவற்றைச் சுருங்கச் செய்தல் ஆகியவை இதன் பொது மருத்துவ குணங்களாகும்.

நாயுருவிச் செடியின் இலையையும், காராமணிப் பயிரையும் சம அளவு எடுத்து மைய அரைத்துநீர்க்கட்டுஉள்ளவர்களிடையேதொப்புள் மீது பற்றுப் போட நீர் கட்டு நீங்கி குணமாகும். நாயுருவிச்செடியின்இலைகளைஇடித்துச் சாறு எடுத்து இரண்டு சொட்டு காதில் விட்டால் காதில் சீழ் வடிதல் நிற்கும்.

நாயுருவிஇலையைஅரைத்துநெல்லிக்காய் அளவு எருமைத் தயிரில் காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இரத்த மூலம் குணமாகும். மேக நோய், சிறுநீரில் வெள்ளை ஒழுக்கு, பேதி குணமாகும்.

ஆறாதபுண்ஆகியவற்றிக்குஇதன்இலையை அரைத்துக்கட்டிவரகுணமாகும். இதன்இலையைப்பருப்புடன் சேர்த்து சமைத்து வாரம் இரு முறை சாப்பிட்டு வர நுரையீரல் பற்றிய சளி, இருமல் குணமாகும்.

விட்டுவிட்டு வரும் காய்ச்சலுக்கு நாயுருவி இலைகளுடன்மிளகு, பூண்டுசேர்த்துஅரைத்து மாத்திரைகளாகஉருட்டி, உலர்த்திக்கொடுக்கக் குணமாகும்.
மூலநோய்க்குநாயுருவிஇலைக்கொழுந்தைப் பறித்து அதனுடன் சிறிது மஞ்சள், கலந்து அரைத்து மூலத்தில் வைத்துக் கட்டி வர இதம் தரும்.



## சத்து நிறைந்த அறுகம்புல் துவையல்

தேவையான பொருள்கள்:

அறுகம்புல் 1கட்டு.
கருப்பு உளுந்து 20 கிராம்,
வெங்காயம் 1,
பூண்டு 7 பல்,
இஞ்சி சிறு துண்டு.
புளி பாக்கு அளவு.
காய்ந்தமிளகாய் தேவைக்கு.
உப்பு தேவைக்கு.
கடலை எண்ணெய் 4 கரண்டி.

செய்முறை:
அறுகம்புல்லைக் கழுவிச் சுத்தம் செய்து நறுக்கிக் கொள்ளவும்.
வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
சட்டியில் 2 கரண்டி எண்ணெய் ஊற்றி அறுகம்புல்லை போட்டு வதக்கி எடுத்துக் கொள்ளவும்.
மீதியுள்ள எண்ணெயை ஊற்றிக் கருப்பு உளுந்தை வறுத்து எடுக்கவும்.
அதே கடாயில்வெங்காயம், பூண்டு, இஞ்சி, காய்ந்தமிளகாய், புளிஅனைத்தையும்வதக்கவும்,
வதக்கியபொருட்கள்அனைத்தும்ஆறியதும்உப்புசேர்த்துமிக்சிஅல்லதுஅம்மியில்கரகரப்பாக அரைத்து எடுத்து சாதத்துடன் பரிமாறவும். சத்தான அறுகம்புல் துவையல் தயார்.



## குருதிச்சோகை குணமாக சாப்பிட வேண்டிய உணவுகள்!!

எமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனி தன்மை உண்டு. எல்லா வகையான ஊட்டச்சத்துக்களையும் ஒரு சேர எடுத்துக் கொள்ளும்போது தான் உடல் ஆரோக்கியமாக இருக்க முடியும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்போது மூளையும் புத்துணர்ச்சியுடன் இருக்கும். இதனால் அறிவாற்றல் பெருகும்.


**இரும்புச் சத்து :**
இந்த ஊட்டச்சத்துகளில் இரும்பு சத்துக்கு தனி முக்கியத்துவம் உண்டு. குருதியில் ஹீமோகுளோபின் உற்பத்திக்கும் அதன் அதிகரிப்புக்கும் இரும்புச் சத்து மிகவும் உதவுகிறது. தசைகளின் ஆரோக்கியத்தில் முக்கிய பங்காற்றுகிறது. மூளையின் செயல்திறனை அதிகப்படுத்துகிறது. உடல் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துகிறது. உடல் முழுதும் ஆக்சிஜென் ஓட்டத்துக்குத் துணை செய்கிறது. குருதிச்சோகையைக் குறைக்கிறது. நாள்பட்ட நோய்க்குச் சிறந்த மருந்தாகிறது. கர்ப்பகாலத்தில் இரும்புச் சத்து அதிகம் எடுத்துக்கொள்வது பெண்களுக்கு மிகவும் அவசியம்.
இரும்பு சத்து அதிகம் உள்ள உணவு என்று உலகம் முழுதும் கருதப்படுவது சிவப்பு இறைச்சியாகும். இந்த சிவப்பு இறைச்சியை விட அதிகம் இரும்புச் சத்து நமது தாவர உணவுகளில் சிலவற்றில் உள்ளது. சைவ உணவைவிரும்பிஎடுத்துக்கொள்கிறவர்கள்கீழேகுறிப்பிட்டுள்ள உணவுகளைத் தினசரி உணவில் இணைத்துக் கொள்ளும்போது இரும்புச் சத்து அதிகரித்து உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம். இரும்புச் சத்து அதிகம் உள்ள உணவுகளையும் அதன் பயனையும் இப்போது பார்க்கலாம்.

**கீரை:**
இரும்புச்சத்தின்ஆதாரமாகக்கீரைபார்க்கப்படுகிறது. தினமும் கீரை சாப்பிடுவதால் சிறந்த ஆரோக்கியம் கிடைக்கிறது. 100கிராம் கீரையில் 2.7மிகி அளவு இரும்புச் சத்து உள்ளது. பச்சை காய்கறிகளில் ப்ரோக்கோலியில் இரும்பு சத்து அதிகம் காணப்படுகிறது. இரும்புச்சத்தைதவிர அத்தியாவசிய ஊட்டச் சத்துகளான விற்றமின் கே , மெக்னீசியம், விற்றமின் சி போன்றவைப்ரோக்கோலியில்அதிகம்உள்ளன. ப்ரோக்கோலியை உங்கள் தினசரி உணவில் தவறாமல் பயன்படுத்தலாம்.



**பயறு வகைகள்:**
எல்லா வகையான பயறுகளும் இரும்புச் சத்து அதிகம் உள்ளவையாகும் . 100கிராம் பயறில் 3.3 மிகி அளவு இரும்புச் சத்து உள்ளது. இவற்றில் நார்ச்சத்து , பொட்டாசியம் மற்றும் புரதம் அதிகம் இருப்பதால், உடல் ஆரோக்கியத்தின் ஒட்டுமொத்த நலனும் பயறு உணவை உண்பதால் நமக்கு கிடைக்கிறது.

**எள்ளு:**
நாம் அதிகமாக எள்ளை நமது உணவில் எடுத்துக் கொள்வது இல்லை. ஆனால் அதில் இரும்புச் சத்து மிகவும் அதிகமாக உள்ளது என்பதை நினைவில் கொள்வது மிகவும் அவசியம். 100 கிராம் எள்ளில் 14.6மிகி அளவு இரும்பு சத்து உள்ளது. ஆகவே உங்கள் தினசரி சாலட் அல்லது மற்ற உணவுகளில் எள்ளை சேர்த்துக் கொள்வது நல்லது.
மேலே குறிப்பிட்டுள்ள உணவுகளை தினசரி எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இரும்பு சத்துள்ள உணவுகளை அதிகம் எடுத்துக் கொண்டு ஆரோக்கியமான உடலை பெறலாம்.



## பூண்டு வெறும் சமையல் பொருள் அல்ல

எமது சமையலறை அலுமாரியில் இருக்கும் ஒவ்வொரு பொருள்களுக்கும் ஒவ்வொரு மருத்துவக் குணம் இருக்கும். அதில் பூண்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

பூண்டை வறுத்து சாப்பிடுவதை விட வேக வைத்து சாப்பிடுவதே மிகவும் நல்லது.

பூச்சிக்கடி உள்ள இடத்தில் பூண்டை வைத்து தேய்த்து விடலாம. பூச்சிக்கடியினால் உண்டான விஷம் பலவீனமடையும்.

பூண்டுச் சாறும், எலுமிச்சை சாறினையும் கலந்து தேமல் உள்ள இடங்களில் தேய்த்து வந்தால் தேமல் காணாமல் போய் விடும்.

பூண்டை சாப்பிடப் பிடிக்காதவர்களுக்கு, பூண்டு, தக்காளி, வெங்காயம் போன்றவற்றை நசுக்கிப் போட்டு சூப் வைத்துக் கொடுக்கலாம். இந்தச் சூப் குடித்தால் சளி பிடிப்பது குறையும்.

# நன்றி நவிலல்



எமது தந்தை
**அருணாசலம் தில்லைநாதன்**

அவர்களின் துயரத்தில் தொலைபேசி மூலமும், நேரடியாகவும் பங்கு கொண்டு எல்லா வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாண பணிப்பாளர் உட்பட சக ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவிகள் புரிந்த சகல அன்புள்ளங்களுக்கும் எங்கள் குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மனோரஞ்சிதம் மற்றும் தில்லைநாதன் குடும்பத்தினர்.**

*சட்டமா...*

உத்தரவு சம்பந்தமாக விசாரணைக்கு உட்படுத்தி ஒரு தீர்ப்பு வழங்கப்படும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக நேற்று திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்பட பல்வேறு அரசியல் கட்சிகளாலும், சிவில் அமைப்புகளாலும் 17 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

நேற்றைய விசாரணை முடிவில் சுமந்திரன் தெரிவித்ததாவது, நேற்றுக் காலை 8.30 மணிக்கு பத்து மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதுவரை 17 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரச தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தை கலைத்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்.

மனுக்கள் அனைத்தும் நேற்றே தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் தேசிய முக்கியத்துவத்தையும், இதன் அவசியத்தன்மையையும் கருதியும் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

காலையில் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் பிரசன்னமாகியிருக்கவில்லை. பிற்பகல் 2 மணிக்கு சட்டமா அதிபரை அழைத்து 2 மணிமுதல் விசாரணைகள் நடைபெற்றன.

மனுதாரர்களின் சமர்ப்பணங்களை நீதிமன்றம் நேற்றுக் கேட்டுள்ளது. சட்டமா அதிபர், தமது சமர்ப்பணங்களை சமர்ப்பிப்பதற்கு இரண்டு, மூன்று நாள்கள் அவகாசம் கோரியிருந்தார். ஆனால், அவசர தேவையைக் கருதி இன்றைய தினமே நீதிமன்றம் மீண்டும் கூடுமென அவரிடம் வலியுறுத்தப்பட்டது. இன்று காலை நீதிமன்றம் கூடி, நாங்கள் கோரியுள்ள தடையுத்தரவு மற்றும் இடைக்கால உத்தரவு சம்பந்தமாக விசாரணைக்கு உட்படுத்தி ஒரு தீர்ப்பு வழங்கவுள்ளது - என்றார்.

(5,10)

## மரண அறிவித்தல்

### நாகநாதர் தவராசா (தவம்)



மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் தவராசா (தவம்) நேற்று (12.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற அண்ணாமலை சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகனும் பவளராணியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம், அன்னபூரணம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, சிந்தாமணி, செல்வராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நாகேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம், தனபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மல்லாகம்.** பாலசுப்பிரமணியம், குணாளன்

## மரண அறிவித்தல்

### திருமதி டெய்சி ஜெயசோதி தர்மராஜா

*(ஓய்வு பெற்ற ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை, விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அளுத்கம, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி கோப்பாய்)*



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டெய்சி ஜெயசோதி தர்மராஜா நேற்று (12.11.2018) திங்கட்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான J.P நாகலிங்கம் கிறேஸ் ஜெயமணி நாகலிங்கம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்ற தோமஸ் தர்மராஜாவின் (சிறு கைத்தொழில் அமைச்சு), அன்புமனைவியும் திருமதி டொறின் பிறேம்குமாரின் (UK), அன்புத்தாயும் டானியல் யோகரட்ணம் (கனடா), திருமதி டல்சி ஜெயவதி லோறன்ஸ் (இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் மகாரட்ணம் பிறேம்குமாரின் (UK) அன்பு மாமியும் திருமதி ஷெரீன் ஆதித்தன் (கனடா), காலஞ்சென்ற ஷேளி ஜெயரூபன் லோறன்ஸ் மற்றும் திருமதி மொறின் ஜெயதர்சினி விஜயரட்ணம் (Swiss), மோளி ஜெயதர்சன் லோறன்ஸ் (முகாமை யாளர் HNB சங்கானை), திருமதி டல்றின் ஜெயசுதர்சினி தயாகரன் (Australia) ஆகியோரின் அன்புப்பெரியம்மாவும் பிரதீன் (UK), பிரதீஸ் (UK) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் டிலானி (கனடா), நிவேதா (கனடா), சுவீற்றி (Swiss), ஷரன் (Swiss), டெவின் (பரியோவான் கல்லூரி ,யாழ்ப்பாணம்) டனிஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), டியன்னா (Australia), டன்யா (Australia) ஆகியோரின் அன்புப்பெரியபெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு 12/ 6, நாகலிங்கம் டெரஸ் மூத்ததம்பி லேன், மானிப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அமெரிக்கன் சிலோன் மிஷன் கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மோளி லோறன்ஸ்**
**021 720 1381**

## 31 ஆவது நினைவு நாள் அழைப்பு



அமரர்
**சாமுவேல் தேவதாஸ்**
**(ஐயா)**

தோற்றம் 28 . 12 . 1928
மறைவு 14 . 10 . 2018

கடந்த (14.10.2018) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது பாசமிகு தந்தையின் 31 ஆவது நினைவு நாள் இன்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் சுண்டுக்குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெறும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையின் மரணச் செய்தி கேட்டு பிரான்ஸ் நாட்டிலிருந்தும் மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம், நோட்டீஸ், பனர் என்பவற்றின் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சுண்டுக்குளி சனசமூக நிலையத்தில் எமது தந்தையின் பூதவுடலை வைத்து அஞ்சலி செலுத்திய நிர்வாகத்தினருக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் சகலவிதத்திலும் எமக்கு ஒத்தாசையாக இருந்து உதவியவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல. 5/3, ஈச்சமோட்டை,**
**முதலாம் ஒழுங்கை, சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

**021 222 9003**

## மரண அறிவித்தல்

### யுவக்கீன் பிள்ளை ஜோசப் றிச்வே



ஊர்காவற்றுறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யுவக்கீன் பிள்ளை ஜோசப் றிச்வே கடந்த (10.11.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யுவக்கீன் பிள்ளை - மேரி பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் கத்தரினம்மா (சறோ) வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவரான ரோஸ்மேரியின் சகோதரனும் காலஞ்சென்றவரான பஸ்ரியாம்பிள்ளை சூசைப்பிள்ளையின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை (அல்வின் - சாட்டி) - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லதா (கனடா) மற்றும் சுதா, விஜிதா, அனிதா (ஊர்காவற்றுறை), கில்லwp (கொழும்பு), பவா (கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரிய அருள்தாஸ், சிறி, திஸ்ஸ களுப்பான, கோல்டன், யாழினி, செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரியுமன், லக்ஸ்மன், சயானா, ஸ்ரெபானா, சிவந்த மேனுக, சமித்தா, ரென்ஸ்ரன், றின்ஸ்ரன், மீர்த்தி, அபினாஸ், ஆரோஸ், அனோஸ், சுரேசிக்கா, கீர்த்திகா ஆன், தீப்ஸி, யான்சி, ராயு ஆகியோரின் அன்புப் பேரனும் மேரோன், மேக்னா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (13.11.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 03.30 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் அந்தோனியார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் (கில்லறி) 078 494 4432,**
**மருமகன் (சிறி) 076 610 9186,**
**மகள் (பவா - கொலன்ட்) 0031 235 373 879,**
**மருமகன் (தாஸ் - கனடா) 001 416 710 6196**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## உடன்பாடுகளுக்குப்...

ரணில் விக்கிரமசிங்க அலுவலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சபாநாயகர் கருஜெய சூரியவைக் கட்சிதலைவர்கள் சந்தித்த வேளை எவரும் இது குறித்து தெரிவிக்கவில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். குருதிக்களரியேற்படும் ஆபத்துள்ளது என அவர்கள் கருதியிருந்தால் சபாநாயகரைச் சந்தித்தவேளை இது குறித்து அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் வன்முறைகள் நிகழும் சூழ்நிலை காணப்பட்டிருந்தால் அது தொடர்பில் நடவடிக்கையெடுக்கவேண்டியது சபாநாயகரே எனத் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க எனினும் அரசதலைவர் தன்னிச்சையாகச் செயற்பட்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் நாடாளுமன்றத்தைக் கலைத்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

மக்களிடமிருந்து பெற்ற ஆணையை மதிப்பதற்காக நான் கடந்த மூன்றரை வருடங்கள் மிகவும் பொறுமையாகயிருந்தேன் என தெரிவித்துள்ள ரணில்விக்கிரமசிங்க நான் அவமானங்களையும் ஏளனங்களையும் குற்றச்சாட்டுகளையும் எதிர்கொண்டேன் எனினும் நான் பொறுமையாகயிருந்தன் காரணமாகவே மூன்றரை வருடங்கள் இந்த அரசு தொடரமுடிந்தது எனவும் தெரிவித்துள்ளார். நான் எனது தனிப்பட்ட நலன்களை அரசியல் நலன்களில் இருந்து பிரித்துப்பார்த்தே வந்துள்ளேன் என தெரிவித்த ரணில்விக்கிரமசிங்க தேர்தல்களின் போது என்னுடன் உடன்பாடு செய்துகொள்வதற்காக விடுதலைப்புலிகள் இரு தடவை முயன்றனர் எனினும் அவற்றைக் கடுமையாக நிராகரித்தேன் எனவும் தெரிவித்துள்ளார். (21)

## அரசின்...

போதைய நிலவரங்கள் குறித்து விளக்கமளிப்பதற்கான கூட்டம் ஒன்றுக்கு கொழும்பில் உள்ள 43 நாடுகளின் தூதுவர்களுக்கு, அயலுறவுத்துறை அமைச்சர் சரத் அமுனுகம நேற்று அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கூட்டத்தை பிரிட்டன், நெதர்லாந்து, நோர்வே, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இத்தாலி, மற்றும் கனடா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் புறக்கணித்துள்ளனர்.

அமெரிக்கா, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் தமது பிரதிநிதிகளை அனுப்பியுள்ளன. இந்தியா தனது இளநிலை இராஜதந்திரி ஒருவரை இந்தக் கூட்டத்துக்கு அனுப்பியுள்ளது. சீனா, கியூபா, ஆப்கானிஸ்தான், துருக்கி, பாகிஸ்தான் உள்ளிட்ட 20 வரையான நாடுகளின் தூதுவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதாக கூறப்படுகின்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அயலுறவுத்துறை அமைச்சர் சரத் அமுனுகம, கடந்த வாரங்களில் இடம்பெற்ற அனைத்து நகர்வுகளும் அரசமைப்புக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எந்த நாடும் கொடைகள், சலுகைகள், கடன்களை நிறுத்துவது தொடர்பாக, கூறவில்லை என்றும், கூட்டத்தின் பின்னர் அவர் கூறினார். (5)

## இப்படியும்...

சாளர் உள்ளிட்ட இரண்டு உறுப்பினர்களும் தனித் தனியே பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். 16 மனுக்களில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த ரட்ணஜுவன் கூலும், ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சக உறுப்பினரைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு மனுத் தாக்கல் செய்துள்ளார். (5)

## நல்லதொரு...

கப்பட்டுள்ளது. இந்த விளக்கமளிப்பை உயர் நீதிமன்ற நீதியரசர்களின் குழாம் உன்னிப்பாக அவதானித்துள்ளது. அரசமைப்பின் பிரகாரம் உறுதியாக நல்ல தீர்ப்பொன்றை உயர்நீதிமன்றம் வழங்கும் என்ற நம்பிக்கையுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமைக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே ஐக்கிய தேசியக் கட்சியினரால் இவ்வாறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, கபீர் காசிம், ரவி கருணநாயக்க, ருவான் விஜேவர்தன, அஜித் பி பெரேரா, மலிக் சமர விக்கிரம, சஜித் பிரேமதாச உள்பட 30 இற்கும் அதிகமான ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைகளை நேற்றுப் பார்வையிட்டிருந்தனர். அதன் பின்னரே, இன்றைய தினத்துக்குள் ஜனநாயக ரீதியான நல்ல தீர்ப்பொன்று வெளிவரும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (5,10)

## மின்சாரம்...

விவசாயி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சம்பவம் நேற்று கரணவாய் மத்தி கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த விவசாயியான இரத்தினம் ரவீந்தின் (வயது -53) என்பவரே உயிரிழந்தவராவர்.

உறவினர் ஒருவருடைய வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்பதை கேட்டு திருத்துவதற்குச் சென்ற ரவீந்தின் இயந்திரம் உள்ள கிடங்கினுள் இறங்கிய போதே அவருக்கு மின்சாரம் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் உறவினரால் அயலவர்களுக்கு கூறப்பட்டது. அயலவர்கள் வந்து பார்த்து போது ரவீந்தின் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (21,26)

## உயர்...

மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளை பார்வையிடுவதற்காக பன்னாட்டு இராஜதந்திரிகள் நிரம்பியிருந்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு முன்னாள் அரச தலைவரும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்திருந்தமை நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், பன்னாட்டுச் சமூகத்தின் கண்டனத்துக்கும் உள்ளாகியிருந்தார்.

அரச தலைவர் ஜனநாயகம், அரசமைப்பை சவாலுக்கு உட்படுத்தி மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிவில் அமைப்புகளும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தன.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் ரணில் விக்கிரமசிங்கவுக்குதான் உள்ளதால் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை அரச தலைவர் உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென ஐ.தே.க. சார்பில் வலியுறுத்தப்பட்டது. அரச தலைவர் நாடாளுமன்றத்தை இந்த மாதம் 14 ஆம் திகதிவரை ஒத்திவைத்திருந்தார்.

அரச தலைவரின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உள்பட பல நாடுகளும், அமைப்புகளும் ஆதரவளிக்கவில்லை என்பதுடன், நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்திருந்தன. அதற்கு செவி சாய்த்திராத அரச தலைவர், நாடாளுமன்றம் 14ஆம் திகதி மீண்டும் கூட்டப்படவிருந்த நிலையில், 9ஆம் திகதி நள்ளிரவுடன் நாடாளுமன்றத்தை கலைந்திருந்தார்.

அரசதலைவரின் இந்தச் செயற்பாட்டை சவாலுக்கு உட்படுத்தவே உயர் நீதிமன்றில் பல தரப்பாலும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இலங்கையின் சமகால அரசியல் பூகோள அரசியலில் பெரும் தாக்கத்தை செலுத்துவதால் பன்நாட்டு இராஜதந்திரிகள் நேற்று உயர் நீதிமன்றில் நிறைந்திருந்தனர்.

நேற்றுக் காலைமுதல் இடம்பெற்ற விசாரணைகளை இவர்கள் உன்னிப்பாக அவதானித்திருந்ததுடன், இன்றைய தினம் இடம்பெறவுள்ள விசாரணைகளையும் பார்வையிடவுள்ளதாக அறிய முடிகிறது. (5,10)

## தேர்தல்..

ஆணையாளருக்குப் பாரப்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் பெரேராவினால் அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு அமைவாக, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். முல்லைத்தீவு, மன்னார், வவுனியா நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருந்து 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது இதே எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

2018ஆம் ஆண்டுக்கான சாதாரண வாக்காளர் பெயர்ப் பட்டியல் கடந்த மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. அதன் இணைப்புப் பட்டியல் எதிர்வரும் 16ஆம் திகதி வெளியிடப்படும். அதற்கு முன்னரான திகதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் 2017 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளது. (5)

## கம்பெரலிய...

நிறுத்துவதோடு, குறித்த வேலைத்திட்டத்தையும் நிறுத்துமாறு தலைமை அமைச்சர் அலுவலகத்தால் மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் வரவு - செலவுத்திட்ட யோசனைக்கமைய, முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிக்கும் 2 பில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த அரசு பதவிக்கு வந்து மூன்றரை ஆண்டுகளில் அபிவிருத்திப் பணிகள் நடக்கவில்லையென்று மக்கள் மத்தியில் அதிருப்தி தோன்றியது. இதையடுத்து உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சறுக்கல் ஏற்பட்டது. இதன் பின்னர் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கம்பெரலிய என்ற பெரிய அபிவிருத்தித் திட்டம் அமைச்சர் மங்கள சமரவீரவால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. (21)

## எந்தச்...

லைக் கலைத்தமைக்கான காரணங்களை விளக்கும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் நேற்று மாலை காணொலி ஒன்றை வெளியிட்டு ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். அதில் அவர் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற பல விடயங்களை மக்களின் ஆணைக்காகவே பொறுத்துக்கொண்டேன்: ஆனால் கடந்த மாதம் 26ஆம் திகதி மக்கள் ஆணைக்குப் புறம்பாக அரசதலைவர் செயற்பட்டார். மக்களால் ஒதுக்கப்பட்ட குழுவினருக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க அவர் முற்பட்டார். அதற்காக நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்தார். அப்போதும் நாம் அரசமைப்பைப் பின்பற்றுமாறே அவரிடம் கோரினோம்.

அதனையே சபாநாயகரிடமும் வலியுறுத்தினோம். அதனாலேயே புதிய தலைமை அமைச்சருக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இருந்தால் அதனை நிரூபிக்குமாறு சபாநாயகர் கூறியிருந்தார். சபாநாயகரின் அந்தச் செயற்பாட்டில் தவறில்லை. உலகில் பல நாடுகளில் அவ்வாறு நடத்துள்ளது. இந்திய நாடாளுமன்றில் அண்மையில் அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. எனவே நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் அரசதலைவர் அரசியல் அமைப்பை மீறிச் செயற்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலைக்கு வாங்கப்படுவது குறித்து அவர் பேசியிருந்தார். அது பற்றி அவரே அறிவார். ஏனென்றால் எமது பக்கமும். அதேபோல் கூட்டமைப்பில் இருந்த ஒருவரையும் அழைத்தெடுத்து அமைச்சுப் பதவிகளை வழங்கியவர் அவரே. அதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த பொதுமக்களின் நம்பிக்கை அற்றுப்போனது. நாடாளுமன்றத்தை கூட்டினால் பலர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அரச தலைவர் கூறினார். அவ்வாறு இடம்பெறாமல் சபாநாயகருடன் பேசி ஒரு தீர்வைப் பெற்றிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல் அரச தலைவர் தான் நினைத்தவாறு செயற்பட்டார்.

எனவே இத்தகைய ஜனநாயக விரோதச் செயற்பாட்டில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஐக்கிய தேசிய முன்னணி என்ற வகையில் புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிப் பயணிக்கவுமுள்ளோம்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் உரையாற்றிய அரச தலைவர், நாடாளுமன்றில் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்காக 50 கோடி ரூபா வரையில் பேரம் பேசப்பட்டதன் காரணமாகவும் சபாநாயகரின் செயற்பாடு காரணமாகவுமே நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டியேற்பட்டது என்று தெரிவித்திருந்தார். (உ-21)

## வடமராட்சியில்...

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். நெல்லியடியில் கரணயாய், வரணிப் பகுதியில் வீடுகளை உடைத்து, வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி பணம், நகைகளைக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில், நால்வர் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் அல்வாய்ப்பகுதியைச்சேர்ந்தவர்கள் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். வல்வெட்டித்துறையில் அண்மையில் வீதியால் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த நபர் குடவத்தைப் பகுதியைச் சேர்ந்தனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். அச்சுவேலிப் பகுதியில் அண்மையில் வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண்ணின் 17 பவுண் தாலிக் கொடியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டவர் நல்லூர் பகுதியைச்சேர்ந்தவர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் அந்தந்தப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (21,26)

## வடக்கில்...

நாகப்பட்டினத்துக்கும் தொண்டிக்கும் இடையில் 15ஆம் திகதி முற்பகல் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கரையைக் கடக்கும் கஜா தீவிர புயலாக மாறி கரையைக் கடக்கும் திசை மாறியுள்ளதனால் இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு கிடைக்கவிருக்கும் மழையின் அளவும் காற்றின் வேகமும் அதிகரிக்கும் என நம்பலாம் என்றும், 13ஆம் திகதி இரவு சிறிய அளவில் ஆரம்பிக்கும் மழை 15ஆம் திகதி கனமழையாகக் கிடைக்கும் அத்தோடு வடக்கு மற்றும் கிழக்குக் கடல் பகுதிகள் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் புவியியல் துறை மூத்த விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்தார். (21)

## காணாமல்...

குளத்தில் குளிக்கச் சென்றுள்ளார். குளிக்கச் சென்றவர்கள் அனைவரும் குளித்து முடிந்து வெளியே வந்தனர். ஆனால் சந்திரகுமார் குளத்தின் நடுப்பகுதியில் குளித்துக் கொண்டு நின்றுள்ளார். திடீரென, அவர் மேலே கையை அசைத்துள்ளார். அதன் பின்னர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. கடற்படையினரின் உதவியுடனேயே தேடுதல் முன்னெடுக்கலாம் என்பதால் அந்தப் பணி ஒத்திவைக்கப்பட்டது. கடற்படையினரின் சுழியோடும் பிரிவினர் நேற்றுக் காலை குளத்தில் தேடுதல் நடத்தினர். இதன் போது காணாமல் போன சந்திரகுமார் சடலமாக மீட்கப்பட்டார். (5,26,173,160)

# வெற்றிபெற்றது சென். மேரிஸ்!



யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

கொழும்பு சென். பெனடிற் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஓல்ட் பென்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

யூட் பதிவுசெய்த கோலின் உதவியுடன் முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது சென். மேரிஸ். இரண்டாவது பாதியிலும் யூட் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். மேரிஸ் அணி.

(ம-23)

## 200 டெஸ்ட்களில் விளையாடமாட்டார் விராட் கோக்லி

### சேவாக் ருசிகரம்

200 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய ஒரே வீரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ள சச்சினின் சாதனையை இந்திய அணியின் தலைவர் கோக்லியால் முறியடிக்க முடியாது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக்.

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, துடுப்பாட்டத்தில் நாளுக்கு நாள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறார். குறைந்த இன்னிங்ஸில் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற சச்சினின் சாதனையை கோக்லி அண்மையில் முறியடித்திருந்தார். அவர் தொடர்ந்து பல்வேறு சாதனைகளைப் படைத்துவரும் நிலையில் 200 டெஸ்ட் ஆட்டங்கள் என்ற சச்சினின் சாதனையை கோக்லி முறியடிக்கமாட்டார் என்றுள்ளார் சேவாக்.

''துடுப்பாட்டத்தில் அனைத்துச் சாதனைகளையும் விராட் கோக்லி முறியடிப்பார் என்று அனைவரும் நினைக்கிறார்கள். நானும் அதை பலமுறை சொல்லி வருகிறேன். அவர் அனைத்து சாதனைகளையும் முறியடிக்கலாம். ஆனால் சச்சினின் ஒரேயொரு சாதனையை அவரால் முறியடிக்க இயலாது. சச்சின் 200 டெஸ்ட்களில் விளையாடியுள்ளார். கோக்லியால் அது முடியாது. 200 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட ஒரு வீரருக்கு குறைந்தது 24 வருடங்கள் தேவை'' என்று சேவாக் மேலும் தெரிவித்தார். (ம)

## பிளக் புல்ஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 13

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பொலிகை பிளக் புல்ஸ் அணி வெற்றிபெற்றது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பிளக்புல்ஸ் அணியை எதிர்த்து பொலிகை யங்பேர்ட்ஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பொலிகை பிளக் புல்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சீற்றாஸ் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 13

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பொலிகை சீற்றாஸ் அணி போராடி வெற்றிபெற்றது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை சீற்றாஸ் அணியை எதிர்த்து பொலிகை பையர் ஹாய்ஸ் அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் பொலிகை சீற்றாஸ் அணி வெற்றி பெற்றது.

(ம-23)

# மனோ குயின்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், நவ. 13

மனோகரா பிறீமியர் லீக் எறிபந்தாட்டத் தொடரில் மனோ குயின்ஸ் அணி கிண்ணம் வென்று சாதித்தது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தால் இந்தத் தொடர் நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மனோ குயின்ஸ் அணியும், மனோ சன் ரைசர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 20:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது மனோ குயின்ஸ் அணி. இரண்டாவது செற்றை 20:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது சன் ரைசர்ஸ். முதலிரு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் இருந்தன. மூன்றாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றும் 20:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மனோகுயின்ஸின் வசமாக முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. மூன்றாம் இடத்தை மனோ றேஞ்சர்ஸ் தனதாக்கியது.

(ம-108)

## கெல்த் ஸ்ரார் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 13

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பொலிகை பாரதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை கெல்த்ஸ்ரார் அணியை எதிர்த்து பொலிகை அற்றாக் போய்ஸ் அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# யாழ்ப்பாணம் மத்தி இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரி அணி மோதியது. 49:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

(ம-23)



## கவனிக்கப்படுவார் அகில தனஞ்சய!

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் தனஞ்சயவின் பந்துவீச்சு மட்டில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சிறப்புக் கவனம் செலுத்தும் என்று கருதப்படுகிறது.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனஞ்சயவின் பந்துவீச்சு விதிமுறைகளுக்கு முரணாக இருப்பது போல் தெரிந்தது என்று பன்னாட்



டுக் கிரிக்கெட் சபை தெரிவித்ததுடன், பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சி மையம் ஒன்றில் பந்து வீச்சு முறைமையை நிரூபிக்குமாறும் உத்தரவிட்டிருந்தது. இவ்வாறான ஒரு பின்னணியில் தனஞ்சயவின் பந்துவீச்சின் மட்டில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை சிறப்புக் கவனம் செலுத்தும் என்று கருதப்படுகிறது. (ம)



### இரண்டாவது டெஸ்ட் இன்று

# இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்ததால் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி பதிலடி கொடுக்குமா என்பது தொடர்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் எவரும் எதிர்பார்க்காத வகையில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது. தொடரின் இரண்டாவது ஆட்டம் கண்டியில் இன்று ஆரம்பமாகிறது.

இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்யும். அதேநேரம் தொடரில் தனது இருப்பை உறுதி செய்ய வேண்டுமாயின் இலங்கை அணி இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றேயாக வேண்டும். ஆக, இரண்டு அணிகளும் வெற்றி நெருக்கடியில் இந்த ஆட்டத்தில் களமிறங்குகின்றன. இதனால் இந்த ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)

## கண்டி டெஸ்ட்டில் சந்திமல் இல்லை

### தலைவராக லக்மல்

இங்கிலாந்துக்கு எதிராக இன்று நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் சந்திமல் களமிறங்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சந்திமல் காயமடைந்தார். அதன் பின்னர் அவர் அவ்வப்போது பயிற்சியைப் புறக்கணித்து வந்தார். இதனால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சந்திமல் களமிறங்குவதில் சந்தேகம் நிலவியது. இந்த நிலையில் அவர் களமிறங்கமாட்டார் என்று நேற்று முன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது. சந்திமல் களமிறங்காததை அடுத்து இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு லக்மல் தலைவராக நியமிக்கப்பட்டார். (ம)



## மூன்றாவது இடத்தில். பட்லர் அல்லது ஸ்ரோக்ஸ்

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில். இங்கிலாந்து அணி மூன்றாவது வீரராக பட்லர் அல்லது ஸ்ரோக்ஸ் இருவரில் ஒருவரைக் களமிறக்கத் திட்டமிட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மொயின் அலி மூன்றாவது வீரராகக் களமிறக்கப்பட்டார். ஆனால் அவரால் மூன்றாவது இடத்தைச் சரிவர நிரப்ப முடியவில்லை. முதலாவது இன்னிங்ஸில் ஓட்டமெதையும் பெறாமலும் இரண்டாவது இன்னிங்ஸில் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தார். இதையடுத்தே இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பட்லர் அல்லது ஸ்ரோக்ஸ் ஆகியோரில் ஒருவரை மூன்றாவது இடத்தில் களமிறக்க இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





## அன்டர்சன் வெற்றி

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அன்டர்சன் அபார வெற்றிபெற்றார்.

அன்டர்சனை எதிர்த்து தியம் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:3, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் அன்டர்சன். (ம)

## உலக சம்பியன்சிப் தொடரில் பெடரர் தோல்வி



உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பெடரர் படுதோல்வியடைந்தார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்குமாக ஆண்டின் இறுதியில் தொடரொன்று நடத்தப்படும். இந்தத் தொடர் 'உலக சம்பியன்சிப்' என்று அழைக்கப்படுகிறது. இந்த வருட உலக சம்பியன்சிப் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து நிசிகோரி மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 7:6, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் நிசிகோரி. (ம)






# ரகிமின் இரட்டைச் சதத்தின் உதவியால் வலுவான நிலையில் பங்களாதேஷ் அணி

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரகிமின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் முதல் இன்னிங்ஸூக்காக 522 ஓட்டங்களைக் குவித்தது பங்களாதேஷ் அணி.

நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் முதல் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது. ரகிம் 111 ஓட்டங்களையும், மகமதுல்லா ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். ரகிம் தொடர்ந்தும் நிலைத்துநின்று சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நான்கே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹக்கியூ. ரகிமுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் மிராஸ். இரட்டைச் சதம் கடந்தார் ரகிம். அரைச்சதம் கடந்தார் மிராஸ். பங்களாதேஸ் அணி 7 இலக்குகளை இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. ரகிம் 219 ஓட்டங்களுடனும், மிராஸ் 68 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் யாவிஸ் 5 இலக்குகளையும், சாரறா, திரிபானோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. சாரி 10 ஓட்டங்களுடனும், திரிபானோ ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் மூன்றாம் நாளுக்காக இன்று களமிறங்கவுள்ளனர்.

முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணி வெற்றிபெற்ற காரணத்தால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி பங்களா தேசுக்கு உள்ளது. (ம)


கார் விற்பனைக்கு
நிஸான் சணி 12
கார் விற்பனைக்கு
077 312 6807

ஷாம்சன் மொழியாய்வு மையத்தின்
சிங்களம் 3 மாத பயிற்சிநெறி
அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!
சிங்களம் எழுதுதல், வாசித்தல் பயிற்சிகளுடன் நேரடியான உரையாடற்பயிற்சியின் மூலம் எவராலுமே 3 மாதங்களில் சரளமாக சிங்களத்தில் உரையாட முடியும்.
இப் பயிற்சியில் இணையவிரும்புவோர் எமது அலுவலகத்தில் தாம் விரும்பிய பயிற்சிநேரம், நாள் என்பவற்றை தெரிவு செய்யமுடியும்.
ஒவ்வொரு பிரிவுகளிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி!
15.11.2018 வரை பதிவுசெய்வோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே,
பயிற்சியின் முடிவில் பெறுமதியான சான்றிதழ்
SAAMSON Experts in Language Training
279, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313


# சமநிலையில் முடிந்தது தொடர்



பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் 1:1 என்ற நிலையில் சமநிலையில் முடிந்தது. நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தன. மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டம் 'தொடரைத் தீர்மானிக்கும் ஆட்டமாக அமைந்தது. மழை குறுக்கிட்டதை அடுத்து ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் 1:1 என்ற ரீதியில் தொடர் சமநிலையானது.

(ம)


தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் 05.12.2018 யாத்திரீகர் 10 நாள்கள் 16
தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேலை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூஜை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)
வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
தொடர்புகளுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11.
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
T.P - 077 768 0102/ 077 736 2154


# மனோ ஜஸ்மின் சம்பியன்

கரணவாய், நவ. 13

மனோகரா பிறிமீயர் லீக் எல்லே தொடரில் மனோ ஜஸ்மின் அணி சம்பியனானது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மனோ ஜஸ்மின் அணியும் மனோ அவஞ்சர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. முப்பது பந்துகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. இரண்டு அணிகளும் ஓட்டமெதையும் பெறவில்லை. மேலதிகமாக 10 பந்துகள் வழங்கப்பட்டன. அதிலும் அவஞ்சர்ஸ் அணி ஓட்டமெதையும் பெறவில்லை. இதையடுத்து ஓர் ஓட்டத்தைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்



பெடுத்தாடிய ஜஸ்மின் அணி இறுதிப் பந்தில் வெற்றிபெற்றது. (ம-108)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.